
கல்கி
அடுத்த
இதழில் :
கயல்விழி
KALKI
5-4-1964
30 காசு


ஆஹா
Kolymos
... கோலினுஸ்
புதியது-தூயது...
களிப்பில் மலரும் புன்னகை...அது கோலினுஸ் தரும் புன்னகை

கல்கி

பொருளடக்கம்

சோபகிருது, பங்குனி 23 ★ ஏப்ரல் 5

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



பட விளக்கம் 37-ம் பக்கம் பார்க்க



விசேஷக் கலவை செய்வோர்:
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்.
பம்பாய்.56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது

GT. (P) 63 TH — Greens' Advg.



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 36

சட்டசபையும் நீதிமன்றமும்

சட்டசபை, நீதிமன்றம் இவற்றின் அதிகார வரம்பு என்ன என்பது குறித்துத் தேசம் முழுவதன் சிந்தனையையும் உத்தரப்பிரதேசச் சம்பவங்கள் கிளறிவிட்டுள்ளன.

உத்தரப் பிரதேசத்து சபாநாயகர் சோஷலிஸ்ட் தொண்டர் ஒருவருக்குச் சிறைத் தண்டனை விதித்ததை ஆட்சேபித்து அந்தத் தொண்டர் ராஜ்ய ஹைகோர்ட்டில் 'ரிட்' மனுப் போட்டார். மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அவரை இரு நீதிபதிகள் ஜாமீனில் விடுதலை செய்தனர். இது சட்டசபையை அவமதிப்பதாகும் என்று கருதி அந்த நீதிபதிகளைக் கைதாக்கிச் சட்டசபையின் முன் ஆஜர்ப்படுத்தவேண்டும் என்று சபாநாயகர் உத்தரவு பிறப்பித்தார். இதைத் தொடர்ந்தே நாட்டு மக்கள் மனதில் சட்டம் செய்யும் சட்டசபைகள், நீதியைப் பரிபாலிக்கும் நீதிமன்றம் இவற்றில் எதன் அதிகாரம் பெரிது என்பது பற்றி எண்ணங்கள் எழுந்துள்ளன. உத்தரப்பிரதேச விவகாரத்தை ஸுப்ரீம் கோர்ட் ஆராய்ச்சி செய்து தீர்ப்பு வெளியிடும். இவ்விஷயத்தை ஒட்டிய அடிப்படை விஷயங்கள் சிலவற்றை ஆராய்ந்து பார்க்கலாம்.

சட்டசபை முடிவு எடுத்த ஒரு விஷயத்தில் நீதிமன்றம் குறுக்கிட்டது தவறு — அது சபையை அவமதித்ததாகும் — என்பது உத்தரப்பிரதேச சட்ட சபையாளர்களின் கருத்து. நீதிமன்றங்களுக்கு அரசியல் சாசனம் அளித்துள்ள அதிகாரங்களை நோக்கினால் இந்த வாதம் சரியானதல்ல என்றே தெரியவரும். சட்டசபை நிறைவேற்றிய சட்டங்களை ஆராய்ந்து பார்த்து, அவை மூல சாசனத்துக்கு இசைந்திருப்பதாகத் தோன்றாவிடில் அவற்றை ரத்து செய்கிற அதிகாரத்தை ஹைகோர்ட்டுகளும் ஸுப்ரீம் கோர்ட்டும் பெற்றுள்ளன. ஒரு மசோதாவானது சட்டசபையாளர்களால் மும்முறை விவாதிக்கப்பட்டு, அவர்களில் பெரும்பான்மையினர் ஆதரித்தால்தான் சட்டமாகும். இவ்வாறு பல நாட்கள் விவாதத்துக்குப் பின், சட்டசபையின் அவ்வளவு அங்கத்தினர்களுமே ஏகோபித்து ஒரு மசோதாவைச் சட்டமாக்கியிருப்பினும் கூட, அச்சட்டம் செல்லாது என்று நிர்மாணிக்க நீதிமன்றங்களுக்கு உரிமை இருக்கிறதென்றால், உ. பி. சட்டசபையாளர் வாதத்தின்படி இதுவும் சபையின் முடிவில் குறுக்கிட்டு அதனை அவமதிக்கும் குற்றத்தையே சாரும். ஆனால் அரசியல் சாஸனம் நீதிமன்றங்களுக்கு அளித்துள்ள இந்த அதிகாரத்தை இதுவரையில் யாருமே சட்டசபை அவமதிப்பாகக் கருதவில்லை. அவ்வாறிருக்க, சபையின் முடிவாகச் சபாநாயகர் அளித்த ஒரு தீர்ப்பை நீதிமன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வதை அவமதிப்புக் குற்றமாகக் கருதுவது சிறிதும் நியாயமாகப் படவில்லை.

தனது உரிமைகளைப் பெறுகிற விஷயத்தில் சட்டசபையே ஒரு ஹைகோர்ட்டுக்குச் சமானம் என்று வாதாடப்படுகிறது. நியாயமான வாதம்தான். ஆனால் சபைக்குள், சபையைப் பொறுத்த உரிமைகளை விவாதிப்பதற்கு மட்டுமேதான் இந்த 'ஹைகோர்ட்'டுக்கு உரிமை உண்டு. சுய அந்தஸ்தைக் குறித்த பிரச்னையில் மட்டுமின்றி, எல்லா நீதி விஷயங்களுக்கும் பொறுப்பேற்றுத் தீர்ப்புச் சொல்லும் அதிகாரம் நீதிமன்றங்களுக்குத் தான் உண்டு. சட்டக் கல்வியை ஆழ்ந்து பயின்ற நீதிபதிகள்தான் நீதி விஷயமாக எவ்விதத் தீர்ப்பும் கூற அதிகாரம் பெறுபவர்களே யன்றி, பொதுமக்களின் வோட்டைப் பெற்றுச் சட்டசபைக்குத் தேர்வு பெறும் அங்கத்தினர்கள் அவ்வித அதிகாரத்தைப்


பெறுவது உசிதமல்ல என்றே நமக்குத் தோன்றுகிறது. நீதிமன்றத்தின் மீது உ. பி. சட்டசபை நேரடி நடவடிக்கை எடுக்காமல், நீதிபதிகள் சபையை அவமதித்து விட்டனரா என்ற பிரச்னையை விசாரிக்க அந்த நீதிமன்றத்திலேயே வழக்குத் தொடர்ந்திருந்தால்தான் பொருத்தமாயிருந்திருக்கும். அட்வகேட் ஜெனரலைக் கொண்டு சட்டசபையின் உரிமைப் பிரச்னையை ஹைகோர்ட்டில் எழுப்பி உ. பி. சபாநாயகர் வாதம் செய்திருக்க வேண்டும்.


சட்ட சபையும், நீதி மன்றமும் நுட்பமான முறையில் சம நிலை எய்து, துலாக்கோல் நேராக நின்றால்தான் நாட்டில் நியாயம் நிலைப்படும். இதனை ஆட்சியாளர்கள் ஒருபோதும் மறக்கலாகாது.

பயனற்ற சிபாரிசுகள்

நிலவரம்புச் சட்டம் செல்லாது என்று ஸுப்ரீம் கோர்ட் தீர்ப்புக் கூறியிருப்பதைக் கிள்ளுக்கீரையாக்கும் முறையில் சாஸனத்தைத் திருத்த முயல்கிறது காங்கிரஸ். தீர்ப்பு எழுதப்பட்ட காகிதத்தின் மதிப்புக்கூட அந்தத் தீர்ப்புக்குக் கிடையாது என்கிற முறையில், எந்த நிலத்தை வேண்டுமானாலும், எவ்வித நஷ்ட ஈட்டின் பேரிலும் பறிமுதல் செய்து, அதனை நீதிமன்றங்கள் விசாரிக்க முடியாதபடி செய்யும் பதினேழாவது திருத்தத்தை நிறைவேற்றக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது அரசாங்கம். இதை யொட்டி சாஸனத்தின் 31பி பிரிவிலும், ஒன்பதாவது ஷெட்யூலிலும் விளைவிக்க உத்தேசித்துள்ள மாற்றங்களைக் கண்டு விஷயமறிந்தவர்கள் கலங்குகிறார்கள். 'நீதி மன்றங்கள் என்ன தீர்ப்பளித்தாலும் செல்லாது; நாங்கள் வைத்ததே சட்டமாகும்' என்ற நிலையை உண்டாக்க ஆட்சியாளர்கள் வெட்கமின்றி முனைந்து விட்டார்கள். 'கலப்படமற்ற அக்கிரமச் சட்டம் ஒன்று இருக்க முடியுமானால் அது இதுவே' என்கிறார் ராஜாஜி. அரசியல் சாஸனம் அளித்துள்ள நிலச் சொத்துரிமையைச் சர்வ நாசமாக்கியுள்ள இந்த மாறுதல்களை சர்வதேசச் சட்ட நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து பார்த்தால் நலமாயிருக்கும் என்கிறார் அவர்.

இச்சந்தர்ப்பத்தில்தான் ஸெலக்ட் கமிட்டியானது பதினேழாவது திருத்த மசோதாவில் சில மாறுதல்களைச் சிபாரிசு செய்துள்ளது. இவற்றில் நிலச் சொந்தக்காரரே பயிரிடும்போது அதைச் சர்க்கார் ஆர்ஜிதம் செய்யுமானால் முழு





நஷ்டஈடு தர வேண்டும் என்பது ஒன்று. நேரடியாகப் பயிரிடுபவர்களுக்கு மட்டுமே இவ்வாறு முழு நஷ்டஈடு தருவது சரியல்ல. புதிய சொத்துரிமைச் சட்டங்களின்படி ஆண் மக்களைப் போலவே பெண் மக்களுக்கும் நிலச் சொத்தில் பங்கு கிடைக்கும். கலியாணமான ஒரு பெண் தன் கணவனுடன் வேறு ஊரில் குடியிருக்க நேர்ந்தால் அவள் தன்னுடைய சொந்த ஊரிலுள்ள நிலத்தை எப்படித் தானே பயிர் செய்து கொள்ள முடியும்? தன் அண்ணன் தம்பி மூலமாகவோ, வெளிக் குத்தகைக்காரர் மூலமாகவோ தானே பயிர் செய்யவேண்டும்? தவிர்க்க முடியாத காரணத்துக்காக இவ்வாறு சொந்தமாகப் பயிர் செய்ய இயலாத அவளை, அவளுடைய சகோதரர்களுக்கு மாறுபாடாக நடத்தி, உரிய நஷ்டஈடு தராமல் நில ஆர்ஜிதம் செய்வது எப்படி நியாயமாகும்? இன்னோர் உதாரணம்: நிலத்தில் கிடைக்கும் வருமானம் போதாமல் பல குடியான மக்கள் பட்டணங்களிலுள்ள தொழிற்சாலைகளில் வேலை தேடி வருகிறார்கள். அவர்களில் ஒருவர் கிராமத்தில் வேறு ஒருவர் மூலம் சாகுபடி செய்கிறார் என்றால் அந்த ஒரே காரணத்துக்காகச் சர்க்கார் அந்த நிலத்தைக் கவர்ந்து அதற்குத் தன் மனம் போனபடி நஷ்டஈடு தருவது முறையாகுமா? நிலவரம்புச் சட்டங்கள் விதிக்கும் வரம்புக்கு உட்பட்ட நிலங்களுக்கு முழு நஷ்டஈடு தரவேண்டும் என்பது ஒரு சிபாரிசு. ஆனால் இந்த வரம்பை அரசாங்கம் எவ்வளவு வேண்டுமானாலும் குறைத்துக் கொண்டே வரக் கூடுமாதலால் இந்தச் சிபாரிசால் எந்த நன்மையும் எதிர்பார்க்க முடியாது.

ஓரிரு சிபாரிசுகள் மூலம் சீர்திருத்தக் கூடிய விஷயமல்ல பதினேழாவது திருத்த மசோதா. அது அடியோடு கைவிடப்பட வேண்டிய ஒரு மசோதா. விவசாயிகளுக்கும், சர்க்காருக்குமிடையே நின்று நிலவரி வசூலித்துச் சர்க்காருக்குப் பேஷ்கிஷ் செலுத்தி வந்த ஜமீன்தார்களை ஒழித்து விடச் செய்த பழைய ஏற்பாட்டை உண்மைச் சொந்தக்காரர்கள் விஷயத்திலும் அமுலாக்கி, சாஸனம் தந்துள்ள சொத்துரிமையை அழிக்கும் திட்டம் இந்த மசோதா. அரசியல் சாஸனத்துக்குக் குழி பறிக்கும் மசோதா இது. ஸுப்ரீம் கோர்ட்டின் நியாயமான அதிகாரத்தைப் பறிக்கும் மசோதா இது. விவசாயிகள் யாவரும் ஒருமுகமாக எதிர்க்கும் இந்த மசோதாவைச் சட்டமாக்கினால் உழவர் சுதந்திரமும், அதோடு உணவு உற்பத்தியும் அடியோடு நாசமாகும்.














1. சென்னை சட்டசபையில் திருவள்ளுவர் பெருமானின் திருவுருவப் படத்தை உதவி ஜனாதிபதி ஜாகிர் ஹுசைன் திறந்து வைத்தார். 2. சென்னைக்கு விஜயம் செய்து கர்நாடக மத்திய இசைக் கல்லூரியின் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஜெர்மானிய இசை கலைஞர் கோயல்ராப்ட்டர். 3. இந்தியாவுக்கும் போலந்துக்கும் கலை விஞ்ஞானப் பரிவர்த்தனைக்கான திட்டக் கடிதங்கள் கையெழுத்தாயிற்று. மத்திய சர்க்கார் கல்வி மந்திரி திரு சக்ளாவோடு போலந்து கலை மந்திரி காலின்ஸ்கி அவர்கள் கை குலுக்குகிறார். 4. சென்னை நாதஸ்வர வித்வான் திரு பி. ஜ. நடேச பிள்ளை அவர்களின் ஐம்பதாண்டு சேவையைப் பாராட்டி முசிரி அவர்களின் தலைமையில் ஒரு விழா நடந்தது. 5. 'வேங்கையின் மைந்தன்' சரித்திர நாவலுக்கு சாஹித்ய அகாதமியின் தமிழ்ப் பரிசைப் பெற்ற அகிலன் அவர்களுக்கு டெல்லி தமிழ்ச் சங்கம் பாராட்டு விழா நடத்திக் கௌரவித்தது. இவ்விழாவுக்குப் பேராசிரியர் ஆறுமுகம் அவர்கள் தலைமை வகித்தார்.

இதுவல்லவோ பெருந்தன்மை!

சட்ட சபை அங்கத்தினர்கள் சில ராஜ்ய சபை அங்கத்தினர்களைத் தேர்வு செய்வதற்காகச் சென்ற மாதம் தேர்தல் நடந்த போது, தி. மு. க. வும் சுதந்திரக் கட்சியும் ஒரு கூட்டணியாக நின்று இரண்டு பேர்களை நிறுத்தி வெற்றி வெற வாய்ப்பு இருந்தது. சென்னை சட்ட சபையின் பிரதான எதிர்க் கட்சியாகிய தி. மு. க. தனது கட்சியின் சார்பில் அபேட்சகர் எவரையும் நிறுத்தி வைக்கவில்லை. மாறாக, கழகத்துடன் கூட்டணி வகித்து, நகர சபைத் தேர்தல்களில் அது கணிசமான வெற்றிபெற மனப்பூர்வமாக உதவிய சுதந்திரக் கட்சி, முஸ்லிம் லீக் ஆகியவற்றைச் சேர்ந்த இரண்டு அபேட்சகர்களுக்குத் தனது முழு ஆதரவையும் அளித்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருந்தன்மைக்கும், நன்றி உணர்வுக்கும் இது சான்று. சுதந்திரக் கட்சியின் தமிழகக் காரியதரிசி திரு எஸ். எஸ். மாரிசாமி அவர்களும், முஸ்லிம் லீக் தலைவர் திரு அப்துல் ஸமத் அவர்களும் இன்று ராஜ்ய சபையை அலங்கரிக்கும் பெருமையைப் பெற்றிருக்கிறார்கள். தி.மு.க — சுதந்திரா — லீக் கூட்டணி எத்தகைய அந்தரங்கமான ஐக்கிய உணர்வுடன் செயலாற்றுகின்றன என்பதற்கு இது ஓர் அரிய அத்தாட்சியாகும். அரசியல்நேர்மையின் சிறப்பை இங்கே காணும் அதே சமயத்தில் இதன் மறுபுறத்தில் காங்கிரஸின் கை வரிசையைக் காண்கிறோம்.

நாலே அபேட்சகர்களைக் காங்கிரஸார் நிறுத்தி வைத்திருந்தால், வோட்டெடுப்புக்கு அவசியமில்லாமல் சுமுகமான முறையில் 1962-ல் நடந்தபடியே இந்த வருஷத்திலும் ஆறு காலி ஸ்தானங்களும் பூர்த்தியாகியிருக்கும். ஆனால் திரு மாரிசாமி அவர்களை எப்படியும் தோல்வியுறச் செய்ய வேண்டும் என்ற 'உத்தமமான' எண்ணத்தோடு ஓர் ஐந்தாவது நபரையும் காங்கிரஸார் கடைசி நிமிஷத்தில் நிறுத்திப் போட்டி



நடக்கும்படி செய்துவிட்டனர். தி. மு. க. சட்ட சபையாளர்களில் ஹிந்திப் பிரச்னையை முன்னிட்டுச் சிறை சென்றுள்ள இருவரை, 'பரோலில்' விடுதலை செய்து வோட்டளிக்க மறுத்த ஆட்சியாளர்கள், எதிர்க் கட்சிகளின் வாக்குகளை இதனால் ஓரளவுக்கு பலவீனப்படுத்தி, ஐந்தாவது ஸ்தானமும் தங்களுக்கே என்று எண்ணியிருந்தனர். ஆனால் எண்ணம் பொய்த்துப் போய் விட்டது. ஐந்தாவது ஸ்தானம் பறிபோய் விட்டது. அநாவசியமாகக் காங்கிரஸ் கட்சியானது வோட்டெடுப்பு வேலையை உண்டாக்கித் தனக்கு கர்வபங்கம் தேடிக் கொண்டு விட்டது. காங்கிரஸ் ஆட்சியில் மனம் கசந்த காங்கிரஸ் அங்கத்தினரே உள்ளனர் போலும். இவர்களில் நால்வர் — அல்லது இருவரேனும் திரு மாரிசாமிக்கு வாக்களித்திருப்பதாகத் தோன்றுகிறது. எப்படியாயினும் திரு மாரிசாமி முப்பத்தைந்து முதல் வோட்டுக்கள் பெற்று வெற்றி வீரர்களில் முதலிடத்தைப் பெற்றிருக்கிறார். அவருக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்களை அளிக்கிறோம்.

நன்மை யாருக்கு?

சர்க்கார் வர்த்தகத்தினால் வரி கொடுப்போருக்கும் நன்மையில்லை; சர்க்கார் விற்பனை செய்யும் பொருட்களை வாங்குவோருக்கும் நன்மையில்லை என்பது பார்லிமெண்டின் மதிப்பீட்டுக் கமிட்டியின் அறிக்கையிலிருந்து வெட்ட வெளிச்சமாகியிருக்கிறது. சர்க்கார் வர்த்தகத்தின் கீழுள்ள கர்ப்பூரம், பாதரஸம், கொப்பரை, கிராம்பு இவற்றில் 100 லிருந்து 200 சதவிகிதம் வரை கொள்ளை லாபம் ஈட்டப்படுகிறது. அதாவது தனியாரிடமிருந்து சர்க்காரிடம் வியாபாரம் மாறியதால் பொருட்களை வாங்குவோர் முன்னிலும் அதிக விலைதான் கொடுக்க நேரிட்டிருக்கிறது. இப்படிக் கொள்ளை லாபம் அடித்த போதிலும் மொத்தத்தில் சர்க்கார் வர்த்தகம் செழிப்பாக நடக்கிறதா என்று பார்த்தால், அதிலும் ஏமாற்றமே காண்கிறோம். ஆறு கோடி ரூபாய்க்குச் செய்த ஒரு வியாபாரத்தில் சர்க்கார் இரண்டு கோடி ரூபாய் நஷ்டப்பட்டிருக்கிறது! சர்க்கார் ஸ்தாபனங்கள் வரிப்பணத்தில் தான் நடைபெறுகின்றன. எனவே இந்த நஷ்டத்தை வரி கொடுக்கும் பொது மக்கள்தான் ஏற்க வேண்டும். இவ்வாறாக மக்களுக்கு எவ்வித நன்மையும் இல்லாத திட்டத்தை ஏன் ஆட்சியாளர்கள் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள் எனில் இந்தத் திட்டம் அவர்களுக்கு மட்டும் நன்மையளிப்பதுதான். சர்க்காரின் அதிகாரத்தைப் பெருக்கிக் கொள்ள நேரடி வர்த்தகம் பேருதவி புரிகிறதே!

ஏகபோக்கியமும், அதிகாரிகளின் நிர்வாகமும் வியாபாரத்தில் ஒருநாளும் நல்ல விளைவை உண்டாக்காது என்பதற்கு இந்திய சர்க்காரின் அநுபவங்கள் மறுக்க முடியாத அத்தாட்சியாகும். இந்த லட்சணத்தில்தான் இன்னும் பல தொழில்களையும் சர்க்கார் வசமாக்குவது பற்றிப் பேச்சுக்கள் நடக்கின்றன!

திண்டாட்டம் தீரவில்லை!

சென்ற நான்கு ஆண்டுகளில் படித்துப் பட்டம் பெற்று விட்டு வேலையில்லாமல் திண்டாடுவோரின் எண்ணிக்கை இரண்டு மடங்காகப் பெருகி யிருக்கிறது என்று மந்திரி திரு வி. ஆர். பட்டாபிராமனே கூறுகிறார். சர்க்காரின் நிர்வாகச் செலவு பல கோடி ரூபாயாகப் பெருகி யிருக்கிறது. அதாவது உத்தியோகஸ்தர்கள், குமாஸ்தாக்கள், சப்ராஸிகள் — இவர்கள் யாவருடைய எண்ணிக்கையையும் பெருக்கிச் சர்க்கார் சம்பளம் கொடுத்து வருகிறது. இருப்பினும், வேலை தேடித் தரும் சர்க்கார் ஸ்தாபனத்தில் நான்கு ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட இரு மடங்கினர் வேலை பெறுவதாகப் பதிவாகியுள்ளது. இந்த ஸ்தாபனத்தில் பெயரைப் பதிவு செய்து கொள்ளாமல் இன்னும் எத்தனையோ இளைஞர்கள் படித்து விட்டு அவதியுறுகிறார்கள். தொழிலுக்கும் வியாபாரங்களுக்கும் சர்க்கார் கடுமையான கட்டுத்திட்டங்களும் வரிகளும் விதிக்காமலிருந்தால் தேசத்தில் எத்தனையோ தொழில்கள் பெருகியிருக்கும். எத்தனையோ பேர்கள் வேலை வாய்ப்புக்களைப் பெற்றிருப்பார்கள். தேசத்தின் செல்வம் பெருகியிருக்கும். உலக அரங்கில் நமது செல்வாக்கும் அதிகரித்திருக்கும்.

'கூந்தலின் எழிலை எடுத்துக் காட்டுகிறது


ஸ்வஸ்திக் பர்ப்யூம்ட் காஸ்டர் ஆயில்

கூந்தலை மழமழப்பாகவும் கவர்ச்சியாகவும் ஆக்குகிறது



ஸ்வஸ்திக் ஹேர் ஸ்டைல் 'மயூர்'

சிறிதளவு ஸ்வஸ்திக் பர்ப்யூம்ட் காஸ்டர் ஆயிலைத் தடவி, கூந்தலை வாரி மூன்று கால்களாக்கிக்கொண்டு நடுப்பாகத்தைச் சுழற்றி ஒரு பக்கமாகச் சாய்த்துக் கொண்டை போடவும். இரு பகுதிகளையும், எதிரும் புதிருமாகக் கொண்டையைச் சுற்றிச் சொருகிவிடவும். பொருத்தமான அணிகளினால் கொண்டையை அலங்கரித்துக்கொள்ளவும்.



ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்.



Shilpi SOM S A Tam


அடுத்த வாரக் கல்கி
இன்னும்
• வழக்கறிஞர் வரிசை
என்ற சிறப்பு அம்சம் இந்த மலரில் ஆரம்பமாகிறது
• இளைய பாரதத்தினர்
வருங்காலத்தில் இந்நாட்டின் சிறப்புக்காகப் பல துறைகளில் பாடுபடப் போகும் இன்றைய இளைஞர் சமுதாயத்தைச் சேர்ந்த சிலரைப் புத்தாண்டு மலரி விருந்து நேயர்களுக்கு அறிமுகம் செய்ய விருக்கிறோம்
• இரு நெடுங் கதைகள்
இந்துமதி எழுதிய மோகன ரங்கன் என்ற நீண்ட கதையும் கோமதி சுவாமிநாதன் எழுதிய "காதல்-ரன் அவுட் 99" என்ற முழு நீள ஹாஸ்யக் கதையும் மலரில் இடம் பெறுகின்றன
• தி ஜானகிராமன், மாயாவி
ஆகியோரது அருமையான சிறுகதைகள் மலருக்கு மணம் கூட்டுகின்றன

புத்தாண்டு மலரில்

அகிலன் எழுதும்

சரித்திரத் தொடர் கதை

கயல்விழி

- **உண்மைக் கதை**

  அடுத்த இதழிலிருந்து ஒவ்வொரு வாரமும் மெய்சிலிர்க்கும் சம்பவங்களுடன் கூடிய ஓர் உண்மைக் கதையை நீங்கள் படித்து வரலாம்


- **படம் பிடிக்கும் போதினிலே**

  என்ற அம்சமும் திரைத் துணுக்குகள் என்ற பகுதியும் சினிமா ரசிகர்களுக்கு கல்விருந்தாக அமையும். சிரிக்கவும். சிந்திக்கவும், துக்கடா, எட்டிக்குப் போட்டி, குட்டிக் கதைகள் போன்ற பொழுது போக்கு அம்சங்கள் பலவும் அடுத்த இதழில் தொடங்குகின்றன

மேலும்,

★ ராஜி எழுதிய ஆளப் பிறந்தவன் என்ற சிறுவர்களுக்கான கதை வினுவின் வண்ண ஓவியங்களுடன் சித்திரத் தொடர்கதையாகக் கல்கியில் விரைவில் ஆரம்பமாக விருக்கிறது

★ சரித்திரப் பிரசித்திபெற்ற நீண்ட நடை பயணங்கள் பற்றி வெ. சாமிநாத சர்மா அவர்கள் கல்கியில் சீக்கிரமே எழுதப் போகிறார்.



ஆரம்பமாகிறது

சர்க்கரைக்குப் பதில்



க்ளூகோவிடா

ஏன் ?

இரவு தூங்குமுன் லக்ஷ்மிக்குத் தேவையானவை கொஞ்சம் பிஸ்கட்டுகள், சூடான பால், தவிர ...

க்ளூகோவிடா

விஷயமறிந்தவள் லக்ஷ்மியின் அன்னே. க்ளூகோவிடா இனிப்பூட்டுவதன்றி உடனடி சக்தி தரும் உணவுமாகும் என அவள் அறிவாள். வைடமின் டியும், கால்ஷியமும் செறிந்த தூய க்ளூகோஸ் பவுடர் தான் க்ளூகோவிடா. லக்ஷ்மிக்குத் தேவையான சக்தியை அது தருகிறது—அதிவிரைவாக!

தேநீரோ, காப்பியோ, சூடான பானமோ, குளிர்ந்த பானமோ, எதுவாயினும் க்ளூகோவிடா அதற்கு இனிப்பூட்டுவதுடன் எலும்புகள், நரம்புகள், உடல்திசுக்கள் ஆகியவற்றுக்கு வலுவூட்டவும் செய்கிறது.

க்ளூகோவிடா

இனிப்புக்கும் உடனடிச் சக்திக்கும்!



கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) ப்ரைவேட் லிட்.

'பாலிஸன்' உணவுப் பொருள்களுக்குப் பாரதத்தில் தலைமைவகிப்பவர்கள்.

BI-CP-38 TAM



நவீன ஓவியக் கலைபோல் கட்டடக் கலையிலும் நவீன பாணி புகுந்து கொண்டு தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்திருக்கிறது. டன்ஸல் டார்ப் என்ற மேற்கு ஜெர்மானிய நகரத்தில் ஒரு மாதாகோயிலைக் கட்டச் சாரம் அமைத்தார்கள். ஆனால் கட்டட வேலை முடிந்த பிறகு சாரங்களை எடுத்து விட வில்லை. நிரந்தரமாக அவை இருக்க வேண்டும் என்று நிர்மாணித்தே பிளான் போட்டாராம் கட்டடக் கலை நிபுணர்! எஃகுக் குழாய்களால் எழுப்பப்பட்ட சாரங்கள் மாதா கோயில் கட்டடத்தின் ஓர் அம்சமாகவே தொடர்ந்திருந்து வருகின்றன !

✿ பிரான்ஸில் இறந்து போன ஒருவர் உயிர் பிழைத்து வருவதோடு மட்டுமல்ல, அவர் சட்டப்படி கலியாணம்கூடச் செய்து கொள்ளலாம்! 1959 இறுதியில் ஒரு மாபெரும் அணைக்கட்டு உடைந்து அந்த விபத்தில் நானூறு பேர்கள் இறந்தார்கள். இறந்தவர்களில் ஒருவர் ஆண்டிரி காப்ரா. அவரைக் கலியாணம் செய்து கொள்வதாயிருந்தாள் ஐரீன். அவர் இறந்து போன செய்தி கேட்ட பின்னும் 'எப்படியும் அவரைக் கலியாணம் செய்து கொண்டே தீருவேன்' என்று சூளுரைத்தாள் ஐரீன். தகப்பனில்லாத குழந்தையைப் பெற விரும்பாத அவள் ஜனாதிபதி டிகாலிடம் முறையிட்டுக் கொண்டாள். பத்திரிகைகளும் அவளுக்காகப் பரிந்து பேசின. மத்திய சட்டசபை அங்கத்தினர்கள் இறந்து போன ஒருவருக்குத் திருமணம் செய்து வைக்கப் பிரெஞ்சுக் குடியரசின் ஜனாதிபதிக்கு உரிமை உண்டு என்று சட்டமியற்றினார்கள். ஐரீன் வெற்றி பெற்று விட்டாள் ! —டைம்

✿ பெங்குவின் என்கிற பறக்காத பறவையால் ஒரு நாளைக்கு நூறு மைல்வரை சற்றுக் களைப்படையாமல் நீந்திச் செல்ல முடியும். இதன் 'இறக்கைகள்' துடுப்பு போல் அமைந்துள்ளதால் இப்படி அதிக தூரம் அதனால் நீந்த முடிகிறது.

✿ மோட்டார் காருக்கு 'ஸ்பார்க் பிளக்' பழுதடைந்து விட்டால் புதிதாக ஒன்றை மாட்டிக் கொள்வது போல் வருங்காலத்தில் மனிதனுடைய இதயமோ கல்லீரலோ வீணாகி விட்டால் அவற்றை எடுத்தெறிந்து விட்டுப் புதிய உறுப்புக்களை வைத்துத் தைத்துக் கொள்ளலாம்! இப்போதே இந்தத்துறையில் சஸ்திர சிகிச்சை நிபுணர்கள் பெருமளவுக்கு வெற்றி கண்டிருக்கிறார்கள். இருதயம், கல்லீரல், நுரையீரல், ஸ்ப்ளீன், மூத்திரக் காய்கள் (கிட்னி), வயிறு, பெருங்குடல், சிறுகுடல், பற்கள், கண்கள், விரல்கள், நரம்புகள் போன்ற அவயவங்களில் எது ரிப்பேர் ஆனாலும் அவற்றை எடுத்து விட்டு, ஏற்கனவே இறந்து போனவர்களின் உடலிலிருந்து பிரிக்கப்பட்ட நல்ல உறுப்புக்களை வைத்துத் தைத்து விடுவார்கள். இதனால் மனிதனுடைய சராசரி ஆயுட் காலம் நூறாக உயரும். மாற்று உறுப்புக்கள் தேவையான அளவுக்குக் கிடைக்குமா என்பதைவிட இந்த விஞ்ஞான வளர்ச்சியால் ஒரேயடியாக அதிகரித்துவிடக் கூடிய ஜனத்தொகையை எப்படிச் சமாளிப்பது என்பதுதான் வருங்காலத்தில் பெரிய பிரச்னையாக இருக்குமாம்! இந்த அவயவங்கள் பரிவர்த்தனைத் துறையில் நிபுணர்களான டாக்டர்களின் மூளைக்கு இன்று வரை எட்டாத விஷயம் மூளை தானம் பற்றிய சிக்கல்தான். பாழாகிப் போன எந்த உறுப்புக்கு மாற்று உறுப்பை வைத்துத் தைத்தாலும் மூளை விஷயத்தில் தங்கள் ஜம்பம் சாயாது என்கின்றனர்! —பி.ஜி. கிருஷ்ணய்யா

✿ சௌந்திரி என்பவர் 'ஹிந்து' பத்திரிகைக்கு எழுதிய ஒரு கடிதத்தின் சாராம்சம்: ''அயல் நாடுகளிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் வந்துள்ள சுற்றுலாப் பிரயாணிகளை, சென்னையைச் சுற்றிப் பார்க்க ஏற்றிச் செல்லும் ஸ்பெஷல் பஸ்ஸுக்காக நாங்கள் நாற்பது பேர்கள் டிக்கெட் வாங்கிக் கொண்டு காத்திருந்தோம். மாலை 2-30க்கு வரவேண்டிய பஸ் 4-05க்கு வந்தது. மிருகக் காட்சிச் சாலைக்குப் போய் விட்டு மியூஸியத்துக்கு வருவதற்குள் நேரமாகி விட்டதால் மியூஸியத்தை மூடி விட்டார்கள். அங்கே பஸ் பழுதடைந்து நின்று விட்டது! ஒன்றரை மணி நேரத்துக்குப் பிறகு வேறு ஒரு பஸ் வந்தது. காந்தி மண்டபம் போனோம். ஒரே இருட்டு, ஒன்றும் தெரியவில்லை! ஒரு வழியாகப் பாரீஸ் கார்னருக்குத் திரும்பியபோது இரவு 9-30 ஆகிவிட்டது. இதற்குள் ஓட்டல்களையெல்லாம் மூடி விட்டார்கள். எங்களில் பெரும்பான்மையினர் அன்று இராப் பட்டினிதான்!'' இப்படியாகத்தானே நாம் 'டூரிஸ்டு'களை வரவேற்று அந்நியச் செலாவணி சம்பாதிக்கிறோம்!

✿ ஜப்பானில் ஷிபுயா ஸ்டேஷன் வாசலில் இருபது வருஷங்களாக ஒருவர் நின்று கொண்டு ஒரு நாளைக்குச் சுமார் அறுநூறு பேர்களுக்கு இலவசமாக வழிகாட்டி அனுப்புகிறார். திக்குத் திசை புரியாமல் திகைக்கும் பலரது பிரச்னையைத் தீர்க்கும் 77 வயதான கோபயாஷி தமது 82வது வயதில் ரிடையராகிவிடப் போகிறாராம்.



* ''எங்களுக்குக் கிடைத்துள்ள தகவல்களை ஆராய்ச்சி செய்து பார்த்ததில் பல கல்லூரி மாணவர்கள் எங்கள்......... என்ற படத்தைப் பார்க்க இடம் 'ரிஸர்வ்' செய்ய முடியாமல் சிரமப்படுகிறார்கள் என்பதைக் கேட்டு நாங்கள் உறக்கமின்றித் தவிக்கிறோம்.......'' என்ற முறையில் தற்சமயம் சென்னையில் திரையிடப்பட்டிருக்கும் ஒரு படத்தைத் தயாரித்தவர்கள் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து வருகிறார்கள்.

கல்லூரி மாணவர்கள் பதிலுக்குப் பின் வருமாறு விளம்பரம் செய்யலாம்:

''எங்களுக்குக் குளிக்க நேரமில்லை, புசிக்க நேரமில்லை, கண் விழிக்க நேரமில்லை, 'அவுட்' ஆகப் போகும் கேள்வித் தாள்களையே படிக்க நேரமில்லை, எனவே எதையாவது பார்த்துக் குதூகலிக்க நேரமில்லை......''

* சட்ட சபையிலிருந்து மிக அதிகமாக வெளியேற்றம் செய்ததற்காகவும், மிக அதிகமாக 'ஸஸ்பெண்டு' செய்யப்பட்டதற்காகவும் பரிசுகள் கொடுப்பதென்றால், லோக சபையில், சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த மணிராம் பாக்ரி முதற் பரிசைத் தட்டிக் கொண்டு போய் விடுவார். சட்ட சபைக் கட்டடத்திலேயே கல்லுளிமங்கன் மாதிரி பழியாகக் கிடப்பதற்கான பரிசும் அவருக்குத்தான்.

அவர் ஒரு போலீஸ் தடைச் சட்டத்தை மீறி நடந்து கொண்டதற்காகக் கைது செய்யப்படவிருந்தார். லோக சபை 'காம்பௌண்டு'க்கு வெளியே காலடி எடுத்து வைத்தால் கைது செய்யப்பட்டு விடுவார். அதற்காக அவர் தோட்டத்தில் கூடாரம் அடித்துக் கொண்டு தங்கியிருந்தார்.

இதுபோன்ற திருவிளையாடல்கள் புதியவையல்ல. அன்னிபெஸண்ட் அம்மையாரின் குருவான சார்லஸ் பிராட்லா, எந்த விஷயத்திலும் தீவிரவாதி; நாஸ்திகர். அவர் லண்டன் நகரில் பிரசங்கம் செய்யக் கூடாதென்று தடை விதித்திருந்தார்கள். அதற்காக அவர் தேம்ஸ் நதியில் ஒரு படகில் இருந்துகொண்டு பிரசங்கம் செய்தாராம். சென்ற யுத்தத்தின் போது ஹிட்லரை ஆதரித்த காப்டன் ராம்ஸே என்ற அங்கத்தினர் பார்லிமெண்ட் சபைக் கட்டடத்துக்குள்ளிருந்தார். ஆனாலும் அவர் கைது செய்யப்பட்டார்.

* ''கல்வி இலாகா, பரீட்சைகள் நடத்தும் இலாகா எல்லாம் திறமையாகவும், யோக்கியமாகவும் வேலை செய்பவை. ஆகையால் எஸ். எஸ். எல். ஸி. வினாத் தாள்கள் வெளியாகியிருக்க முடியாது என்பது நான் கல்வி மந்திரியாயிருப்பதால் நிச்சயம். தமிழ் நாட்டு உபாத்தியாயர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். ஆகையால் என்ன கேள்விகள் வரும் என்று உத்தேசமாகச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். தேசப்படங்களில் முக்கியமான ஊர்கள் இருக்குமிடத்தைக் குறிக்க வேண்டும் என்ற கேள்வியைக் கூட உத்தேசமாகத்தான் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்!'' என்கிற ரீதியில் பேசிய முதன் மந்திரி திரு பக்தவத்ஸலம் ஒன்று சொல்லாமல் விட்டு விட்டார். ''சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்திய பரீட்சை மார்க் ஜாபிதாவை ஒரு ஸெகரடேரியட் குமாஸ்தா திருத்திப் போட்டு விட்டார், 14 ஐ 44 என்றும், 19 ஐ 49 என்றும். அதற்காக ஃபோர்ட்ஸெயின்ட் ஜார்ஜ் கோட்டையில் வேலை செய்வதற்குப் பதிலாகச் சிறைச்சாலையில் போய் வேலை செய்து கொண்டிருக்கிறார். அது மாதிரி ஏதாவது நடந்து கொண்டிருக்குமேயன்றி இது போன்ற கேவலம், வினாத் தாள்களை வெளியாக்கும் அற்பமான வேலைகளில் கல்வி இலாகா முதலியன ஈடுபடாது'' என்று சொல்லவில்லை.


* டில்லியில் ஒரு புஷ்ப அலங்காரக் கண்காட்சியைத் திறந்து வைத்த ஸ்ரீமதி இந்திரா காந்தி பிரசங்கம் எதுவுமே செய்யவில்லை. ஒரே ஒரு கவிதையைக் கூறி அதைத் திறந்து வைத்தாராம். அதன் கருத்து இது:

'' மலர்களில்லா விட்டால் நமது உலகம்
எப்படியிருக்கும்?
புன்னகையற்ற முகம் போலத்தான்
வரவேற்பில்லாத விருந்து போலத்தான்
புஷ்பங்கள் பூமியின் நட்சத்திரங்கள்
நட்சத்திரங்கள் வானத்தின் மலர்கள்.''

* பங்களூரில் உள்ள ஒரு சர்க்கார் தொழிற்சாலையில் சென்ற இரண்டு வருஷ காலத்தில் 18 ஸைக்கிள்கள் (பதினெட்டு மாத்திரம்) உற்பத்தி செய்வதற்கு 1,80,000 ரூபாய் செலவாயிற்றாம்.

இந்தப் பதினாயிரம் ரூபாய் விலையுள்ள ஸைக்கிள்கள் மைசூர்க் காட்டிலுள்ள யானைக் குட்டிகள் ஏறுவதற்காகத் தயாரிக்கப்பட்டிருக்கலாம்!

— காசி






வியப்பூட்டும் விண்வெளி

மேலே: எம். ஆர். ஏ. குழுவினருக்கு எம். ஜி. ஆர். ஒரு வரவேற்பளித்தல்.

கீழே: ராஜ்மோகன் காந்தி

சென்ற வாரம் ஓர் அதிசயமான செய்தி வெளியாகியது. ரயிலிலும் பஸ்களிலும் டிக்கெட் வாங்காமல் ஏமாற்றிப் பிரயாணம் செய்த மாணவர்கள் ஐம்பது பேர் தாங்கள் செலுத்த வேண்டிய கட்டணத் தொகையை நேரே அதிகாரிகளிடம் செலுத்தியதாகவும் தாங்கள் ஏமாற்ற முயன்றதற்காக வருத்தம் தெரிவித்ததாகவும் இனி தாங்கள் நேர்மையாக நடந்து கொள்ள உறுதி பூண்டிருப்பதாகவும் செய்தி பத்திரிகைகளில் வெளியாகியதைப் படித்து மெய்சிலிர்க்காதவர்கள் கிடையாது.

இத்தகைய அதிசயத்தை விளைவித்தவர்கள் யார்? இத்தகைய மனப் புரட்சியை ஏற்படுத்தித் தர்ம உணர்ச்சியை மாணவர்களிடையே நிலைநாட்டியவர்கள் யார்? — என்று அறிய ஆவல் உண்டாகிறதல்லவா? இந்தச் சாதனையைப் புரிந்தவர்கள் மாரல் ரீ ஆர்மமெண்ட் — குழுவினர்தான். "தர்மம் என்னும் ஆயுதத்தை அணிவிக்க விரும்புவோர் குழு" என்று பொருள் சொல்ல வேண்டும். சுருக்கமாகச் சொல்லப் போனால் தார்மிகப் புரட்சி நடத்த உறுதி எடுத்துக் கொண்டவர்கள் என்று சொல்ல வேண்டும்.



உலகில் நாம் ஒவ்வொருவரும் எதிராளி தவறு செய்வதாகவும், அவன் மாற வேண்டும் என்றும் விரும்புகிறோம். நாம் அண்டை வீட்டுக்காரன் மாற வேண்டும் என்று விரும்புகிறோம். ருஷ்யா அமெரிக்காதான் குற்றவாளி என்று கருதுகிறது. அமெரிக்கா மாறிவிட்டால் உலகில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டுவிடுமென்றும் கூறுகிறது. இதையேதான் அமெரிக்கா ருஷ்யாவைப் பற்றிச் சொல்கிறது. ஆனால் இந்தக் குழுவினர், "பிறர் மாறுவது இருக்கட்டும். முதலில் உன் குற்றங்களைக் களைந்து நீ தார்மிக புருஷனாக மாறுவதற்கு முயற்சி எடுத்துக்கொள். பிறகு யாவும் சரியாகி விடும்" என்கின்றனர். அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் குறளாசிரியர் கூறிய கருத்தை வலியுறுத்த ஒரு மாபெரும் இயக்கமே உலகம் முழுவதும் நடத்தி வருகின்றனர்.

"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?"

என்பது தெய்வப் புலமை திருவள்ளுவரின் வாக்கல்லவா?

இக்கருத்தையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டவர்கள் உலகம் முழுதும் பரவி[illegible]னர். இக் கருத்தை உலகம் முழு



'வியப்பூட்டும் விண்வெளி'யில் ஒரு காட்சி

தும் பரப்பும் நோக்குடன் சுமார் நூற்றைம்பது பேர் உலகப் பிரயாணம் செய்து வருகிறார்கள். அவர்களில் பிரபல நடிகர்கள், பேராசிரியர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், இப்படிப் பல துறையைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பல நாடுகளுக்குச் சென்று பல நகரங்களில் தங்கி, இளைஞர்களையும், பல துறைத் தலைவர்களையும் சந்தித்து, விவாதங்கள், சர்ச்சைகள் நடத்தி வருகின்றனர். இந்தக் குழுவில் முக்கியமாக அங்கம் வகிப்பவர் காந்திஜி – ராஜாஜி பேரனான ராஜ்மோகன் காந்தி அவர்கள். இவர் இந்த இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றி வரும் இளைஞர். இவருடைய பிரசங்கங்களைக் கேட்டவர்கள் இவருடைய புத்தி கூர்மையையும் தார்மிக உணர்ச்சியையும் கண்டு ''இருபெரும் தலைவர்களுக்கு ஏற்ற பேரன்தான்'' என்று மகிழ்ந்து பாராட்டுகிறார்கள்.

ராஜ்மோகன் காந்தி அவர்கள் இன்றைய இந்தியாவின் நிலைமையைப் பற்றிக் கூறுவதைப் பாருங்கள்:

''சுதந்திரம் அடைந்த நாள் முதல் தவறான விஷயங்களிலேயே பற்றுக் கொண்டு விட்டோம். பணத்தாசை, புகழ், அந்தஸ்து, காம உணர்ச்சி இவையே நம்மை ஆட்கொண்டு விட்டன. கொள்கைகளை விட மனிதர்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கி விட்டோம். உண்மையை விடப் புகழுக்கு மதிப்புக்கொடுக்கிறோம். உழைப்பை விட சுக போகத்துக்கு இடம் கொடுக்க ஆரம்பித்து விட்டோம்.

''கடவுளைப் பற்றியோ, ஒழுக்கத்தைப் பற்றியோ, தர்மத்தைப் பற்றியோ பேசினால் அருவருப்புக் கொள்ளுகிறோம்.

''தர்மத்தையும், சுயநலமற்ற தன்மையையும் மூர்த்தண்யமாகக் கடைப்பிடிக்க உறுதி பூண்பதுதான் நம்மை ஆட்கொண்டுள்ள வெறுப்புக்கும், ஊழலுக்கும் தக்க பரிகாரமாகும்.

''பெரியோர்கள் இதைச் செய்யத் தவறினால் இளைஞர்கள் செய்ய முற்பட வேண்டும். எதிர் காலம் இந்திய இளைஞர்களை இந்தக் கஷ்டமான பாதையை மேற்கொள்ளும்படி அழைக்கிறது. இதுதான் பாரத நாட்டின் பெரும் புகழை நிலைநாட்ட வழி.''

இக்குழுவினர் இக் குறிக்கோளை நாடகமூலம் பல நாடுகளில் பரப்புகிறார்கள்.

சென்னையில் பதினைந்து நாட்களுக்கு மேலாக ''வியப்பூட்டும் விண்வெளி'' என்ற இசை நாடகத்தைப் போட்டார்கள்.

இப்பொழுதெல்லாம் விண்வெளியில் மனிதர்கள் சுற்றத் தொடங்கி விட்டார்கள் அல்லவா? இதைப் புறப்படமாக வைத்துக்கொண்டு ஒரு கனவில் நடப்பதாக ஓர் இசை நாடகத்தை அமைத்திருக்கிறார்கள்.

ருஷ்ய விண்வெளி வீரர்களுக்கும் அமெரிக்க விண்வெளி வீரர்களுக்கும் போட்டியும் சண்டையும் ஏற்படுகின்றன. இந்தச் சமயத்தில் விண்வெளியில் பிரயாணம் செய்து விட்டு வந்த ஒருவர் ''விண்வெளியில் கடவுளின் குரலைக் கேட்டேன். அந்தக் குரலை அங்கு மட்டும் அல்ல இங்கும் கேட்கலாம். அவர் சொன்னதெல்லாம் 'மாறுங்கள்' என்பதுதான்'' என்று கூறுகிறார்.

நித்திரைத்தேவனின் பெயர் மிஸ்டர் நாட். அவர் கையில் வெள்ளிப் பொடி வைத்திருக்கிறார். அதை அவர் தூவின மாத்திரத்தில் மக்கள் தூங்கி விடுகின்றனர்.

சிறுவன் நித்திரைத் தேவனைக் கேட்கிறான்: 'நீ ஏன் மக்களைத் தூங்கப் பண்ணுகிறாய்?'

மிஸ்டர் நாட்: அந்த ஒரு நேரத்தில் மக்கள் ஒற்றுமையாகக் கூடியிருக்கிறார்கள். அவர்கள் விழித்திருக்கும் நேரமெல்லாம் சண்டைபோட்டுக்கொண்டிருக்கின்றனர். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் சண்டை, ஆணுக்கும் பெண்ணுக்கும் சண்டை, கறுப்பருக்கும் வெள்ளையருக்கும் சண்டை, தொழிலாளிக்கும் முதலாளிக்கும் சண்டை, கிழக்குக்கும் மேற்குக்கும் சண்டை. தூக்கம் ஒன்றுதான் அவர்கள் சண்டை போடவிடாமல் சேர்த்துவைக்கிறது.

கதை வெகு நன்றாகப் பின்னப்பட்டிருக்கிறது என்பதை நாடகம் பார்த்துவிட்டு வந்து புத்தகத்தைப் படித்துத் தெரிந்து கொண்டேன். புத்தகத்தைப் படிக்காமல் நாடகத்துக்குப் போய்விட்டால் இந்தியர்களுக்கு என்ன புரிய முடியும் என்பது எனக்குப் புதிராகத்தான் இருந்தது! ஏனெனில் நாடகம் முழுதும் கவிதை நாடகமாக இருக்கிறது. நாடக முடிவில் அத்தனை நடிகர்களும் சேர்ந்து ஜனகணமண பாடலை அழுத்தமாகப் பதங்களை உச்சரித்துப் பாடியது மெய் சிலிர்க்க வைத்தது. இப்படியல்லவோ பாட வேண்டும் என்று தோன்றியது.

எஸ். வி. எஸ்.

நல்ல, கெட்டியான காபியிற்கு

—எப்பொழுதும் புத்தம் புதுமை

—சுத்தத்திற்கு உத்தரவாதம்!



தேர்ந்தெடுத்த விதைகளிலிருந்து தயாரிப்பு:- நறுமணமும் சுவையும் தரவென்று ப்ரூக் பாண்ட் நிபுணர்களால் மிகச் சிறந்த காபிக்கொட்டைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அதனால் தான் உங்களுக்கு ப்ரூக் பாண்ட், கூடுதலான கோப்பைகள் காபி கொடுக்கின்றனர்.

சாஸ்திரிய முறையில் வறுக்கப்படுகிறது:- கட்டுப்படுத்தப்பட்ட சீதோஷ்ண நிலைகளில் காபிக் கொட்டைகள் மிக நவீன யந்திரங்களால் வறுக்கப்படுகின்றன. அதனாலேயே ஒவ்வொரு பாக்கெட் ப்ரூக் பாண்ட் காபியிலும் நீங்கள் ஒரேவிதமான கெட்டி டிகாக்ஷனைப் பெறுகிறீர்கள்.

காற்றுப்புகாத ஸெலோபேன் பாக்கெட்டுகளில் ஸீலிடப்படுகிறது:- ப்ரூக் பாண்ட் காபி கையினால் தொடப்படுவதில்லை. அது சுகாதார முறைப்படி கைக்கடக்கமான ஸெலோபேன் பைகளில் பாக் செய்யப்படுகிறது. ஆதலால் நேர்த்தியான மணமும் புத்தம் புதுமையும் அதில் பாதுகாக்கப்படுகிறது.



ப்ரூக் பாண்ட் சுத்தமான காபி
அல்லது சிகரி கலந்த ப்ரூக்
பாண்ட கபே ப்ராண்டு ப்ரெஞ்சு
காபி குடித்துப்பாருங்கள்.

JWTBB 1294



ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் தம் கடமையில் கருத்தாயிருக்கும்போது உடன் பிறந்தவனின் பாசத்துக்கும், ஒரு பெண்ணின் காதலுக்கும் இடையில் சிக்கிக் கொண்டு தவிப்பதும், இன்ஸ்பெக்டர் தம் கடமையைச் செய்ய முற்படும்போது அவருடைய காதலியின் குடும்பத்தினரே குற்றவாளிகளாகும் நிலைமை ஏற்படுவதும் நம் தமிழ்ப் படவுலகின் சிரஞ்சீவிக் கதை என்பதைச் சொல்லிவிட வேண்டியது என் கடமை.

எம். ஜி. ஆர். கடமை வீரர், காதலர்; கதாநாயகர். ஆகவே, காதல், மோதல், குத்து, அடி, மாறு வேடம் ஆகியவற்றுக்குப் பஞ்சம் இல்லை. இவைகளெல்லாம் போதாக் குறைக்கு ஆங்கில நடனமும் ஆடுகிறார். தம் கடமையைவிடக் காதலில்தான் அதிகமாகக் கவனம் செலுத்துகிறார்.

பாவம், சரோஜா தேவி! கதாநாயகியாக வரும் சரோஜா தேவி காதல் காட்சிகளில் ஆடிப்பாடிக் களிப்பதைத் தவிர நடிப்பில் சிறிதும் கவனம் செலுத்தவில்லை. திரைப்பட உலகின் திலகமென விளங்கும் சரோஜா தேவி தமக்கு ஏற்ற பாத்திரத்தை ஏற்று நடிக்க முயல்வது நல்லது. ''என் கடமை''யில் தளுக்கு நடையோடு நிறுத்திக் கொண்டு விட்டாரே! சரோஜா தேவி படத்தில் நடிக்கிறார் என்பதே நினைவில் நிற்கவில்லையே!

டாக்டராக வந்து எம். ஆர். ராதாவுக்கு ஊசி போடுவதோடு இருந்த பாலாஜி பின்னும் கொடிய வில்லனாக மாறியதும் சுருக்கென்று ஊசி போல் குத்துகிறார்! வில்லனாக வரும் எம். என். நம்பியார் பிற்பகுதியில் நல்லவனாக மாறி விடுகிறார். (படத்தில் திடுக்கிடும் சம்பவம் இதுதான்! யாரும் இதைப் பார்த்துத் திடுக்கிடவில்லையென்றால் அது படம் பார்ப்பவர்களின் தவறு!)

எல். விஜயலக்ஷ்மிக்கு ஒரு 'சான்ஸ்' கொடுத்தவர்கள் அவருக்கு நடனமாட 'சான்ஸ்' கொடுக்காதது அதிசயம்தான்.

எம். ஆர். ராதா குழி பறிக்கிறார். வழக்கம் போல் கத்துகிறார்.

படத்தில் சுவாரசியமாக இருக்கும் கட்டம் நாகேஷ் — மனோரமா நடிக்கும் காட்சிகள்தான். ஆனால் அவர்கள் இருவரும் குத்துச் சண்டை போடுவதை ரஸிக்க முடியவில்லையே! (சமையல் அறைக் காட்சிகள் புதியவை அல்ல என்பதையும் நினைவில் வைக்க வேண்டும்!)

கதை, வசனம், பாடல்கள், டைரக்ஷன் என்று தனித் தனியாகக் குறிப்பிட்டுப் பாராட்டிக் கூறும்படி எதுவுமே அமையாதது வருந்தத் தக்கதுதான். அதுவும் பாடல்கள் படுத்தும் பாட்டைப் பற்றி என்ன சொல்லுவதென்றே தெரியவில்லை. எம். ஜி. ஆர். நடித்த படமாயிருந்தும் தியேட்டரில் நிறைய இடம் கிடைப்பது ஒரு புதுமைதான்!

தமிழகத்தில்தான் நிறையப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறோம். அது உண்மைதான். என்றாலும் பாதியும் பதராகப் போய்விடுகின்றனவே! கதை அம்சத்திலோ, காட்சி அமைப்புக்களிலோ, நடிப்பிலோ, டைரக்ஷனிலோ கொஞ்சம்கூட நாம் முன்னேறவில்லை என்பதைத்தான் இப்பொழுது வெளி வரும் படங்களெல்லாம் உறுதிப்படுத்தி வருகின்றன. இதை நினைத்து நாம் வெட்கப்படுவதில் மட்டும் பயனில்லை. இந்நிலை மாற ஏதாவது செய்தாக வேண்டும்.

படத்தின் முடிவில் தேசிய கீதம் பாடப்படும் போது எழுந்து நின்று மரியாதை செலுத்தாமல் பலர் தியேட்டரை விட்டு வெளியேறி விடுகிறார்கள் என்பது பற்றி என் நண்பர் என்னிடம் குறைப்பட்டுக் கொண்டார். 'அது தவறுதான் என்றாலும் தேசிய கீதம் பாடப்படும்போது மக்கள் படம் பார்த்த வேதனையில் சோர்ந்து எழுந்து சில விநாடிகள் நிற்கும் தெம்பைக்கூட இழந்து விடுகிறார்கள் என்பதும் உண்மைதானே?" என்றேன் நான். நம் படங்களைப் பார்த்து வருபவர்கள் என் கருத்தை ஒப்புக் கொள்வார்கள் என நினைக்கிறேன்.

''என் கடமை''யைப் பற்றி என் அபிப்பிராயத்தை என்னவென்று சொல்லுவேன்!— ஐயோ, என்ன கொடுமை! —காந்தன்



குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்.



பிச்சமணியிடமிருந்து வந்த கடிதத்தைப்பற்றி டாக்டர் ஜகந்நாதன் துச்சமாக மதித்துப் பேசியதைக் கேட்ட உமா மேலே மேலே பதிலெதுவும் சொல்லி வம்பு வளர்க்க விரும்பவில்லை. தலையைத் தொங்கப் போட்டபடி தன் வீட்டுக்குக் கிளம்பினாள். ஏதோ சிந்தனைகளில் சுழன்ற வண்ணம் தெருவில் நடந்தாள். அவள் போகும் திசையையே ஜகந்நாதன் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார்.

உமா தன் வீட்டுக்கு வந்து சேர்ந்ததும், ''என்னடி, உமா! இன்னிக்குச் சீக்கிரமாக வந்து விட்டாய்? இதற்குள் டியூஷன் முடிந்துபோய் விட்டதா?'' என்று ஜானகிப் பாட்டி வியப்போடு கேட்டாள்.

''ஒண்ணுமில்லே, பாட்டி! கொஞ்சம் அலுப்பாக இருந்தது; வந்து விட்டேன்!'' என்றாள் உமா.

அதற்கு மேல் ஜானகிப் பாட்டி எதுவும் தன் பேத்தியிடம் விசாரிக்கவில்லை. கல்யாண வயதைக் கடந்து நிற்கும் இளம் பெண்களுக்கு நாளாக நாளாக வாழ்க்கையில் ஏதோ ஓர் அலுப்போ அல்லது விரக்தியோ ஏற்படுவது இயற்கைதான்!

ஜானகிப் பாட்டி ஒரு பெருமூச்சு விட்டுத் தன் சமையலறை 'டிபார்ட்மெண்டு'க்குள் புகுந்தாள்.

கூடத்தில் உள்ள மேஜையின் மீது உமா தன் கைப் பையை வைத்தாள். அந்தக் கைப் பைக்குள்தான் பிச்சமணியின் கடிதம் இருந்தது! உமாவின் கையும் கண்ணும் படுவதற்காக அந்தக் கடிதம் ஏங்கிக் காத்துக் கொண்டேயிருந்தது!

உடனே அந்தக் கடிதத்தை உடைத்துப் பார்க்க வேண்டும் போல் இருந்தது உமாவுக்கு. அதிலுள்ள வாசகங்களையெல்லாம் படிக்க வேண்டுமென்று அவளுடைய கண்களும் தவித்தன. ஆனால் கைகள் மட்டும் தயங்கின.

அந்தக் கடிதத்தில் பிச்சமணி என்னவெல்லாம் எழுதியிருப்பானோ?.... ஒருவேளை எழுதக் கூடாத விஷயங்களையெல்லாம் எழுதியிருந்தால்....?

அப்படியானால் டாக்டர் ஜகந்நாதன் சொன்னபடியே, அந்தக் கடிதத்தை உடைத்துப் பார்க்காமலேயே நெருப்பில் போட்டு விடலாமா?

ஊஹூம்! அது பிச்சமணியின் இருதயத்தையே நெருப்பில் போட்டது போல் ஆகும்! தன்னம்பிக்கை இல்லாதது போலவும் முடியும்!

உமா குழம்பியவாறு மெல்ல அந்த மேஜையை விட்டு அப்பால் நடந்தாள். தேங்காய்ப் பூத் துண்டை எடுத்துத் தன் தோள் மீது போட்டுக் கொண்டு கைகால் முகம் கழுவிக் கொண்டு வந்தாள். கண்ணாடியில் முகத்துக்கு அழகாகப் பொட்டிட்டுக் கொண்டாள். ஆனால் இவ்வளவையும் ஒரு யந்திரம் போல் செய்தாளே தவிர, அவளுடைய மனமெல்லாம் கடிதத்தின் மீதே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

இந்த மனம் இன்று மட்டும் ஏன் அடங்கவில்லை....?

உமா விருட்டென்று பூஜையறைக்குள் புகுந்து குத்து விளக்கை ஏற்றி வைத்து, சுவர் மாடத்திலுள்ள தன் சின்னப் பிள்ளையாரைக் கும்பிட்டாள்.

மின்னலைப் போல் திடீரென ஒரு நினைவு அவள் நெஞ்சத்தில் பதிந்தது! இதே பிள்ளையார் முன்தானே முன்பொரு சமயம் பிச்சமணி ஏதோ வரம் கேட்டதாகச் சொன்னான்? அது என்ன வரமாக இருக்கும்?

உமாவுக்கு மெய்சிலிர்த்தது! உடம்பின் உணர்வுகளிலெல்லாம், நாடிநரம்புகளிலெல்லாம் ஏதோ ஓர் அனல்

வேகம் பாய்ந்து முகம் குப்பென்று வியர்த்தது.

தன்னைச் சமாளிக்க முடியாத நிலையில், ''பிள்ளையாரே! பிள்ளையாரே!'' என்று உமா கூப்பிட்டாள். பிள்ளையார் புன்முறுவல் பூப்பது போல ஒரு பிரமை உண்டாயிற்று. அப்படியானால் தன் சின்னப் பிள்ளையாரும் பிச்சுமணியின் கட்சியில் சேர்ந்து கொண்டு விட்டாரா? சை, இது என்ன பைத்தியக்காரத்தனம்!

உமா வேகமாக மேஜையை நோக்கிப் பாய்ந்து வந்தாள். தன் கைப் பையைத் திறந்து அதில் உள்ள கடிதத்தை வெளியே எடுத்தாள்!

கடிதத்தைப் பிடித்திருந்த அவளுடைய கை வெடவெடவென ஆடியது!

'ம்! பிச்சுமணி அப்படி யென்ன எழுதியிருக்கப் போகிறான்? தன் பிரயாண அநுபவங்களைத்தான் வர்ணித்திருப்பான்!'

அவ்வாறே தன் மனத்துக்கு அழுத்திச் சொல்லி வலியுறுத்தி விட்டு உமா தன் கண்களை மூடிக் கொண்டு கடிதத்தின் உறையை உடைத்தாள். பிறகு அவள் மெல்லக் கண்களைத் திறந்து அக்கடிதத்தைப் படிக்கலானாள்.

கடிதத்தின் தலைப்பில் 'பிச்சுமணி, ரூம் நம்பர் 8, கேப் ஹோட்டல், கன்னியாகுமரி' என்று அனுப்பியவரின் விலாசம் எழுதப்பட்டிருந்தது.

கடிதத்தின் ஆரம்பத்தில் 'அன்புள்ள' என்ற வாசகமோ அதற்கும் அதிகப்படியான வார்த்தைகளோ எதுவும் இல்லை. ''மிஸ் உமா!'' என்ற அழைப்புடன்தான் கடிதம் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. நல்ல வேளை என்று உமா பெருமூச்சு விட்டாள். ஆனால் 'மிஸ். உமா' என்ற ஒரு வார்த்தையிலேயே பிச்சுமணியின் இருதயம் முழுவதும் எதிரொலிப்பது போன்ற ஓர் உணர்ச்சியும் தட்டியது.

நெஞ்சு 'திக் திக்' என்று அடித்துக் கொள்ள உமா அக் கடிதத்தைத் தொடர்ந்து படிக்கலானாள்.

பிச்சுமணியின் அந்த நீண்ட கடிதம் அவள் முகத்தில் பலவித உணர்ச்சிகளைத் தோற்றுவித்தது.



அத்தியாயம் நாற்பத்தியொன்று

பிச்சுமணியின் கடிதம்

"மிஸ் உமா!

இந்தக் கடிதத்தை நீங்கள் உடைத்துப் படிப்பீர்களோ, மாட்டீர்களோ, எனக்குத் தெரியாது! ஆனால் என் உள்ளத்தின் மூலையில் ஒரு குரல் நீங்கள் படிப்பீர்களென்றே சொல்லுகிறது. ஒருவேளை நீங்கள் இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது உங்களுக்குப் பிடிக்காத விஷயம் ஏதாவது இருந்தால், பாதியிலேயே போட்டு விடாதீர்கள். கடைசி வரை படித்து முடித்தபிறகு வேண்டுமானால் இதைக் கசக்கி எறியுங்கள், அல்லது சுக்குநூறாகக் கிழித்தெறியுங்கள். ஆனால் கடைசி வரையில் கடிதத்தை மட்டும் படிக்காமல் இருந்து விடாதீர்கள்.

உமா, இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதலாமா கூடாதா என்று பல தடவைகள் யோசித்தேன். கடைசியில் எழுதாமலிருக்க என்னால் முடியவில்லை. மேலும் என் தாத்தாவோடு நான் திடீரென்று தீர்த்த யாத்திரை புறப்பட்டு வரும் போது உங்களிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லி விடை பெறாமல் வந்து விட்டேன். ஒருவேளை உங்களை நான் மறந்து விட்டேனோ என்று நீங்கள் நினைத்திருக்கலாம். அல்லது அதைப் பற்றி எதுவுமே நீங்கள் நினைக்காமலும் இருந்திருக்கலாம். ஆனால் உங்களை நான் பிரிந்து வந்த பிறகு இத்தனை நாட்களில் என்னைப் பற்றி நீங்கள் ஒரு தடவையாவது நினைத்தீர்களா ? அதை நீங்கள் மனம் விட்டுச் சொல்ல மாட்டீர்கள்! அது எனக்குத் தெரியும்! ஆனால் என் மனத்திலுள்ளதை என்னால் சொல்லாமலிருக்க முடியாது; அது என்னால் முடியவே முடியாது!

உமா, கடைசியாக உங்கள் வீட்டுக்கு நான் வந்தது உங்களுக்கு நன்றாக ஞாபகமிருக்கும். அப்போது என் மனத்தில் உள்ள ஆசைகளை யெல்லாம், என் வாழ்க்கையின் கனவுகளையெல்லாம் உங்களிடம் சொன்னேன். அதற்காக என் மீது கோபம் கொண்டீர்கள்; இல்லையா? அந்தக் கோபம் தணியும் வரை உங்கள் முகத்துக்கு நேரில் வரக் கூடாதென்று எண்ணியிருந்தேன். மேலும்.... மேலும்..... இன்னொரு விஷயமும் நடந்து விட்டது. மகா சூழ்ச்சிக்காரரான டாக்டர் ஜகந்நாதன் உங்களை என்னிடமிருந்து பிரித்து அபகரித்துக் கொள்வதற்காகவே என்னை என்தாத்தாவோடு திடீரென்று தீர்த்த யாத்திரைக்கு அனுப்பத் திட்டமிட்டிருக்கிறார் என்று சந்தேகித்தேன். அதை என்னால் தாங்கவே முடியவில்லை. அந்த நரக வேதனையோடு அன்றிரவு என்னால் தூங்கவும் முடியவில்லை. அதனால் நடு ராத்திரியிலேயே எழுந்து டாக்டரின் வீட்டுக்கு விரைந்து சென்று நான் திரும்பி வரும் வரை அவருடைய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கூடாதென்று எச்சரித்தேன். அந்த அகம்பாவக்காரரோ 'பொறுமை வளரட்டும்' என்று ஏளனம் செய்து சிரித்து எனக்கு அளவில்லாத ஆத்திரத்தை மூட்டி விட்டார். அந்த வெறியில் நான் அவரைத் தாக்கினேன்; அவரைக் கொலை செய்து விடுவதாகவும் கூவினேன். ஆனால் அவருடைய மூக்குக் கண்ணாடியை உடைத்ததோடு அந்தச் சண்டை முடிந்து விட்டது. இதையெல்லாம் டாக்டர் ஜகந்நாதன் உங்களிடம் சொன்னாரா? நிச்சயம் அந்த மனுஷர் சொல்லியிருப்பார்! அதனால் தான் அந்தச் சமயம் உங்கள் முகத்தில் விழிக்க நான் மனம் கூசி என் தாத்தாவோடு புறப்பட்டு வந்து விட்டேன்.

உமா! நீங்கள் யாரைக் காதலித்தாலும் காதலிக்கா விட்டாலும் நிச்சயமாக டாக்டர் ஜகந்நாதனை நீங்கள் காதலிக்கவில்லை; காதலிக்கவும் மாட்டீர்கள். உணர்ச்சியே இல்லாத அந்த அறிவு மூட்டையை எந்தப் பெண்ணுமே காதலிக்க முடியாது! அது இப்போது எனக்கு நன்றாகப் புரிகிறது! ஆனால் அப்போது உங்களைப் பற்றிய நினைவில் நான் பித்துப் பிடித்தது போல் இருந்ததால் அவர் மீது பொறாமையும் ஆவேச உணர்ச்சியும் கொண்டேன். அவரோடு அநாவசியமாகக் குஸ்திச் சண்டை போட்டது முட்டாள்தனமென்று கூட இப்போது எனக்குத் தோன்றுகிறது. இதற்குமேல் என்ன எழுதுவது?

உமா! என் பிரயாண அனுபவங்களை யெல்லாம், என் மனத்தில் எழுந்த எண்ணங்களை யெல்லாம் உங்களிடம், உங்கள் ஒருவரிடமே சொல்ல வேண்டும் போல் என் மனம் தவிக்கிறது. பொறுமையாகப் படியுங்கள்.

என் தாத்தாவோடு நான் தீர்த்த யாத்திரை புறப்படும்போது ஏதோ வேண்டா வெறுப்போடுதான் புறப்பட்டேன். சென்னையிலேயே ஏதோ ஒன்றை இழந்து விட்டு என் இதயத்தையே, பிய்த்து வைத்து விட்டுப் போவதைப்

போன்ற உணர்ச்சிதான் அப்போது எனக்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் இந்தத் தீர்த்த யாத்திரைகளின் விளைவாக என் மனத்தில் பல மாறுதல்களும் புது நம்பிக்கைகளும் பிறந்திருக்கின்றன. பார்வைகளிலெல்லாம் ஒரு புதுக் கண்ணோட்டமும் தெரிகிறது. நானே ஒரு புது. மனிதனாக மாறி விட்டதைப் போன்ற குதூகலமும் உண்டாகிறது.

நானும் தாத்தாவும் சென்னையிலிருந்து ரயிலில் புறப்பட்டதும் முதலில் திருநெல்வேலியை அடைந்தோம்.... அங்கே என் தாத்தாவுக்குத் தெரிந்த சிநேகிதரான விநாயகப் பிள்ளை என்பவர் எங்கள் தீர்த்த யாத்திரைக்குத் தேவையான வசதிகளை யெல்லாம் ஏற்பாடு செய்து எங்களுக்கென்றே ஒரு பெரிய காரும் கொடுத்துதவினார். அவருக்குத்தான் என்ன அன்பு? என்ன பெருந்தன்மை? தமிழரின் பழைய பண்பாட்டிலுள்ள விருந்தோம்பல் என்னும் பண்பை அவரிடம் கண்டு நான் வியந்தேன். அது மட்டுமா? என் தாத்தாவுக்குத்தான் எத்தனை சிநேகிதர்கள்? எத்தனை ராஜோபசாரம்? எவ்வளவு செல்வாக்கு? 'பாத்தியாடா — பாத்தியாடா' என்று தாத்தா தம் பெருமையை என்னிடமே சொல்லிச் சொல்லிக் காட்டித் தம் பழங் காலத்து வீரப் பிரதாபங்களை யெல்லாம் அளக்க ஆரம்பித்து விட்டார். செல்வம், செல்வாக்கு இவையிரண்டும்தான் என் தாத்தாவுக்கு வாழ்க்கையின் பிரதான அம்சங்கள்! ஆனால் அவ்விரண்டின் மீதும் எனக்கிருந்த மதிப்போ நெல்லையப்பர் கோவிலில் ஒரு பெரியவரைப் பார்த்ததும் மாறி விட்டது. அந்தக் கோவிலில் முருகன் சந்நிதிக்கெதிரில் அந்தப் பெரியவர் உட்கார்ந்திருக்கிறார். திருப்பணியில் இறங்கி அந்தச் சந்நிதியைச் சுற்றியுள்ள பிரும்மாண்டமான பிராகாரத்தை எழுப்பியவரே அவர் தானும்! இப்போது அவருக்கு நூறு வயதுக்கு மேல் ஆகி விட்டதாம்! அந்தச் சந்நிதியின் எதிரிலேயே யாசகர் போல் உட்கார்ந்திருக்கிறார். பக்தர்கள் பலர் அவருக்குக் காசு கொடுத்து அவரிடம் விபூதிப் பிரசாதம் வாங்கிச் செல்கிறார்கள். அவர் எத்தனையோ காலமாக அந்தச் சந்நிதியிலேயே உட்கார்ந்திருக்கிறாராம். எத்தனையோ விதமான பக்தர்களையும், எத்தனையோ தலைமுறைகளையும், கால மாறுதல்களையும் அவர் பார்த்திருப்பார். ஆனாலும் அவர் திருப்பணி செய்த இடத்திலேயே, முருகனின் திருவருளைத் தரிசித்துக் கொண்டே கடைசிக் காலம் வரை உட்கார்ந்திருப்பதுதானே தம் ஆத்மாவின் உண்மையான செல்வம் என்று மதிக்கிறார்? அதை அளவில்லாத பக்தி என்கிறார்கள். ஆனால் பக்தி என்பதுதான் என்ன? மனித அன்பில் ஒரு பிரிவு தானே! அப்படி யென்றால் அன்பு தானே வாழ்க்கையின் உண்மையான செல்வம்....?

அன்பு என்றதும் நெல்லையப்பப் பெருமானைப் பற்றி என் தாத்தாவிடம் சிநேகிதர் சொன்ன ஒரு கதை என் நினை




வுக்கு வருகிறது. ஒரு சமயம் கருவூர் சித்தர் நெல்லையப்பரின் சந்நிதானத்தின் முன் வந்து நின்று, 'நெல்லையப்பா! நெல்லையப்பா!' என்று மூன்று முறை கூவியழைத்தாராம். அச்சமயம் நிவேதன காலமாதலால் இறைவனிடமிருந்து மறுமொழி வரவில்லை! அதனால் கருவூர் சித்தர் கோபமுற்று, 'நெல்லையப்பா! நீ இங்கேயில்லையப்பா!' என்று சொல்லி விட்டு நீங்கிச் சென்றாராம். உடனே அந்த ஆலயத்தில் எருக்கு முதலியன முளைக்கவே, நெல்லையப்பப் பெருமான் ஓடி வந்து கருவூர் சித்தரை மானூரில் சந்தித்து அடிக்கொரு பொன் கொடுத்து அவரைத் திருநெல்வேலிக்கு அழைத்து வந்து காட்சி கொடுத்தாராம். அதனால் ஆலயத்தின் முன் முளைத்த எருக்கு முதலிய பூண்டுகள் மறைந்து பழைய பிரகாசம் உண்டாயிற்றாம்.

ஆகவே, மனிதர்களின் மனப்பூர்வமான அன்புக்கு ஆண்டவனும் பணிந்து ஆட்பட்டு விடுகிறார்! அப்படியிருக்கும் போது சக மனிதர்களை அத்தகைய அன்பினால் ஆட்படுத்த முடியாதா? அதிலும் பெண்ணுள்ளத்தைத் தன் வயப்படுத்த முடியாதா? முடியுமென்றே எனக்கு நம்பிக்கை பிறந்திருக்கிறது; உமா! கோபித்துக் கொள்ளாதீர்கள்! ஆண்டவன் சந்நிதானத்தில் எனக்குள் எழுந்த ஒரு நம்பிக்கையைத்தான் சொல்கிறேன்.

அதே ஆலயத்தில் மற்றுமோர் அதிசயம் என் மனத்தைக் கவர்ந்தது. அங்குள்ள நிருத்த மண்டபத்தில் இன்னிசைக் கல் தூண்கள் இருக்கின்றன. கல் தூணில் நாதக் கம்பிகள் போல் பல கல்லிழைகளைச் சிற்பி வெகு அற்புதமாக அமைத்திருக்கிறான். அக்கல்லிழைகளைத் தேங்காய் மூடியினால் தட்டினால், ஒவ்வொரு கல்லுருண்டையிலும் ஒவ்வொரு விதமான இசைநாதம் எழும்புகிறது. இது மிகவும் அதிசயமில்லையா? கல்தூணின் நாத இழைகளை என் விரல்களாலேயே மீட்டி நான் கீதம் வாசிக்க, அதன் இசையலைகளுக்கு ஏற்றபடி நீங்கள் அந்த நிருத்த மண்டபத்தில் நடனமாட அதை நான் பார்த்தால் எப்படியிருக்கும் என்று நினைத்தேன். உமா, உங்களுக்கு வீணை வாசிக்கவும், கானம் பாடவும் தெரியுமே தவிர உங்களுக்கு நடனமாடத் தெரியுமோ, தெரியாதோ? ஆனால் அப்படி ஒரு கற்பனை செய்து பார்த்தேன். நீங்கள் காற்றினிலே மிதந்து வந்து, தெய்வீக மணம் கமழும் அந்தத் திருக்கோயிலின் நிருத்த மண்டபத்திலே காலம் முழுவதும் நடனமாடிக் கொண்டே யிருக்கிறீர்கள். நானும் உங்களைப் பார்த்தபடியே காலம் முழுவதும் கீதம் இசைத்துக் கொண்டிருக்கிறேன். சுற்றிலுமுள்ள சிலைகளெல்லாம் உயிர்பெற்று எழுந்து வந்து நம்மைக் கண்கொட்டாமல் கவனிப்பதையும் மறந்து விடுகிறோம். அப்படி ஒரு பிரமை எனக்கு உண்டாயிற்று....

உணர்ச்சி வசப்பட்டுப் பக்கம் பக்கமாகப் பிச்சுமணி எழுதித் தள்ளியிருந்த கடிதத்தில் உமா பாதியளவே படித்து முடித்திருந்தாள். கற்பனையிலேதான் தன்னை அந்த நிருத்தமண்டபத்தில் வைத்துப் பார்த்திருக்கிறான் பிச்சுமணி. அப்படியிருந்தும் அம்மண்டபத்தை விட்டே வெளிவர அவனுக்கு மனம் வரவில்லை. இதை எண்ணிப் பார்த்த போது உமாவின் இதய அடிவாரத்திலிருந்து ஒரு விம்மல் வெளிப்பட்டுக் கண்களில் நீர்த்திரையிட்டது. அதனால் கடிதத்தில் எழுத்துக்கள் கலங்கலாகத் தெரிந்தன. கண்ணீரை ஒரு விரலால் வழித்து எறிந்து விட்டு மெய்சிலிர்ப்புடன் உமா கடிதத்தை மேலே படிக்கலானாள். (தொடரும்)



பாகிஸ்தானிலுள்ள சிறுபான்மையினரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகக் கல்கத்தாவில் ஒரு நாள் ஹர்த்தால் நடந்தது. அடுத்தாற் போல் எதற்கெடுத்தாலும் ஹர்த்தால் ஆரம்பிக்கும் கல்கத்தாவாசிகளைக் காப்பாற்ற ஒரு ஹர்த்தால் கல்கத்தாவில் நடைபெறலாம்.

ஃ ஃ ஃ


சென்னை மிருகக் காட்சிச் சாலையில் வரிப்புலி உஷா குமாரிக்குப் பிறந்துள்ள நான்கு புலிக் குட்டிகளுக்கு முறையே சொத்துவரி, கொடை வரி, செலவு வரி, கட்டாய சேமிப்பு வரி என்று பெயர் வைக்கலாம் என டி.டி.கே. யோசனை கூறியிருக்கிறாராம்.



ஃ ஃ ஃ

கானாவில் சமீபத்தில் ஏற்பட்ட பூகம்பத்தினால் ஊமையாக இருந்த ஒருவர் திடுமெனப் பேசும் சக்தி பெற்றதையொட்டி, தாங்கள் வோட்டுப் போட்டதன் விளைவாக லோக சபையிலும் ராஜ்ய சட்டசபைகளிலும் உட்கார்ந்திருக்கும் பலரைப் பூகம்பம் தாக்காதா என்று ஆயிரக்கணக்கான வாக்காளப் பெருமக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

காலம் பறக்கிறது...ஆயினும் அவள் எழில் நிலைக்கிறது




கண்டான். கண்டதும்
மையல் கொண்டான். அவளு
டைய பேரெழில் அவனை மயக்கிற்று.
காதல் கடிமணம் நடந்தது. ஆண்டுகள்
இருபது ஆகிவிட்டன. ஆனாலென்ன? அன்று
முதல் தடவையாக அவனைக் கண்ட காட்சி அவள்
நினைவில் பசுமையாக நிலைத்துவிட்டது. அவள்
எழிலோ இன்னும் ஒளி குன்றாது சுடர் விடுகிறது. தன்
நாயகன் போற்றும் தனது அழகுப் பராமரிப்புக்கு
அவள் உபயோகிப்பது "'ஹேஸலின்' ஸ்னோ"...
தனியாகவோ, பவுடர் படியும் தளமாகவோ எழிலுக்கு
மெருகூட்டிப் பாதுகாக்கிறது "'ஹேஸலின்' ஸ்னோ".

'ஹேஸலின்' ஸ்னோ

உங்களுக்கு எழிலூட்டுகிறது.

'ஹேஸலின்' வரிசையில் மேலும் கிடைப்பவை கோல்ட் க்ரீம், டால்கம்

பர்ரோஸ் வெல்கம் & கம்பெனி
(இந்தியா) ப்ரைவேட் லிட்.
த. பெ. நெ. 290, பம்பாய்-1



BI-BW-19



ராணி துர்க்காவதி

நாடாண்ட நங்கையர்

மொகலாய சக்கரவர்த்தியாகிய அக்பர் (1542 – 1605) பாரத நாட்டின் பெரும் பகுதியை ஒரே ஆட்சிக்குட்படுத்தி அதன்மூலம் ஒற்றுமையை உண்டு பண்ண முனைந்ததாக ஆங்கில சரித்திராசிரியர் சிலர் கூறுவர். இது ஒருவகையில் உண்மை. ஆனால் இதற்காக நூற்றாண்டுகள் கணக்கில் சுதந்திரமாக வாழ்ந்த எத்தனையோ ராஜ்யங்கள், தங்கள் சுதந்திரத்தைப் பலி கொடுக்க வேண்டியதாயிருந்தது! எத்தனை ராஜ்யங்கள் தங்கள் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்க மனமின்றி எதிர்த்துப் போராடி, அதன் விளைவாகச் சீரழிந்து போயின! இப்படிச் சீரழிந்து போன ராஜ்யங்களில் கூர் ராஜ்யம் ஒன்று.

தற்போதைய மத்தியப் பிரதேசத்தின் வடக்கில் ஒரு சிறு பகுதி, முன்பு கரா - கடாங்கா என்ற ராஜ்யமாயிருந்தது. இதனைக் கோண்ட்வானா என்றும் கூர் என்றும் அழைப்பர். சிங்களகிரி என்பது இதன் தலைநகரம். இந்தக் கூர் ராஜ்யத்தைப் பதினாறாவது நூற்றாண்டின் இடைக் காலத்தில் தளபதி ஷா என்பவன் ஆண்டு வந்தான். இளமையும் அழகும் வீரமும் இவனிடம் சேர்ந்து குடி கொண்டிருந்தன.

ஏறக்குறைய இதே காலத்தில் தற்போதைய மத்தியப் பிரதேசத்தின் வேறொரு பகுதியை ராஜ புத்திரர்களில் ஒரு பிரிவினரான சந்தேல் வமிசத்தினர் வழிவந்த சந்திரவர்மன் என்பவன் ஆண்டு வந்தான். இந்தப் பகுதிக்கு ஜெஜகபுக்தி அல்லது புண்டேல் கண்ட் என்று பெயர். இதன் தலைநகரம் மகோபா. இது தற்போது ஜான்ஸி நகரத்துக்குக் கிழக்கே எண்பத்தாறு மைல் தொலைவில் ஒரு பெரிய ஊராக இருக்கிறது.

சந்திரவர்மனுக்கு ஒரே மகள்; துர்க்காவதி என்று பெயர். இவள் 1528ஆம் வருஷம் பிறந்ததாகத் தெரிகிறது. சிறு வயதிலேயே இவள் அரச பரம்பரையினருக்குரிய வில்வித்தை முதலிய ஆயுதப் பயிற்சிகளையும், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் போன்ற பயிற்சிகளையும் பெற்று, வீர உணர்ச்சி நிரம்பப் பெற்றிருந்தாள். நல்ல சுரமெடுத்துப் பாடுவாள்; வீணை வாசிப்பாள்; ஓவியம் தீட்டுவாள்; அழகான பொருள்களைச் சேகரித்து வைத்துப் பார்ப்பதில் மகிழ்ச்சி கொள்வாள். இப்படிப் பட்டவளுக்கு நல்ல வரன் கிடைக்க வேண்டுமென்று சந்திரவர்மன் ஆவல் கொண்டிருந்தான். அவனுடைய ஆவலும் 1545ஆம் வருஷம் நிறைவேறியது. அந்த வருஷம் பிப்ரவரி மாதம் தளபதி ஷாவுக்கும் துர்க்காவதிக்கும் சிங்களகிரியில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. அப்பொழுது துர்க்காவதிக்கு ஏறக்குறைய பதினேழு வயது. தளபதி ஷாவும் துர்க்காவதியும் மனமொத்த தம்பதிகளாய் இல்லறக் கப்பலை இனிதாக இயக்கி வந்தனர். அதனோடு துர்க்காவதி தன் கணவன், அரச கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றி வரப் பெரிதும் துணை செய்து வந்தாள். இவளுடைய அரசியல் அறிவில் தளபதி ஷாவுக்கு அதிக மதிப்பு இருந்து வந்தது.



திருமணமான ஒரு வருஷம் கழித்து இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இதற்கு வீர நாராயணன் என்று பெயரிட்டார்கள். குழந்தையும் பொலிவுடன் வளர்ந்து வந்தது. ஆனால் கூடவே துரதிர்ஷ்டமும் அதனுடன் வளர்ந்து வந்ததென்று சொல்ல வேண்டியிருக்கிறது.

வீர நாராயணனுக்கு மூன்றாவது வயது நடந்து கொண்டிருக்கையில் தளபதி ஷா உடல் நோயுற்று இறந்து போனான். துர்க்காவதி துக்கக் கண்ணீர் வடித்தாள் என்பதை விரித்துச் சொல்ல வேண்டுமோ? ஆனால் இந்தத் துக்கத்தில் தன்னுடைய கடமைகளை மறந்து விடவில்லை. வீர நாராயணனுக்குப் பட்டம் சூட்டச் செய்தாள். அவனுக்கு யுக்த வயது வரும் வரையில் தானே கூர் ராஜ்யத்தின் ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதென்று தீர்மானித்து அப்படியே ஏற்றுக் கொண்டாள். ஏற்றுக்கொண்ட தருணத்திலிருந்து கணவன் இல்லாக் குறையை வெளிக்காட்டிக்கொள்ளாமல் ராஜ்யத்தின் நலன் ஒன்றிலேயே தன் கவனம் அனைத்தையும் செலுத்தி வந்தாள். இவளுடைய திறமையான நிர்வாகத்தின் கீழ் கூர் ராஜ்யம் நாளுக்கு நாள் சுபிட்சம் அடைந்து வந்தது. இது இப்படியிருக்க, கூர் ராஜ்யத்துக்கு அருகில் தற்போதைய அலகாபாத்

சரித்திரமாணிக்கன்




மாவட்டத்தைச் சேர்ந்தாற்போல் காரா — மாணிக்பூர் என்ற ஒரு சிறிய பிரதேசம் இருந்தது. இப்பொழுதும் இந்தக் காராவும் மாணிக்பூரும் கங்கை நதி ஓரத்தில் சிறிய ஊர்களா யிருக்கின்றன.

இந்தக் காரா-மாணிக்பூர் பிரதேசத்தை ஆஸப் கான் என்பவன் அக்பர் பாதுஷாவின் பிரதிநிதியாக, அதாவது தற்காலத்துக் கவர்னராக இருந்து நிருவாகம் செய்து வந்தான். இவனுக்குத் தன் பக்கத்திலுள்ள கூர் ராஜ்யம் சுபிட்சமா யிருப்பது பொறுக்க வில்லை. அக்பரிடம் செல்ல நேரிடும் சமயங்களிலெல்லாம் கூர் ராஜ்யத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டுமென்று சொல்லி, அவனுடைய ராஜ்ய விஸ்தரிப்பு ஆசைக்குத் தூபம் போட்டுக் கொண்டு வந்தான்.

இது துர்க்காவதிக்குத் தெரிய வந்தது. அக்பரின் படை வலிமையை நன்கு அறிந்தவளா யிருந்தபடியால், அவனுடன் சமாதானமாகப் போகவே விரும்பினாள். தான் அக்பருக்கோ, அவனுடைய ஆதிபத்தியத்திற்கோ இதுவரை எந்த விதத் தடையாகவும் இருந்ததில்லை என்றும், இனியும் இருக்கப் போவதில்லை என்றும், அக்கம் பக்கத்திலுள்ள ராஜ்யங்களின் சுதந்திரத்துக்குத் தான் ஊனம் உண்டுபண்ணப் போவதில்லை என்றும், அது போலவே தன்னுடைய ராஜ்யத்தைச் சுதந்திரமாக வாழ விடுமாறு வேண்டுகோள் விடுப்பதாகவும் அவனுக்கு — அக்பருக்கு — தூது விடுத்தாள். ஆனால் இந்த வேண்டுகோளை அக்பர் நிராகரித்து விட்டான்.

கூர் ராஜ்யத்தின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி காணுமாறு ஆஸப் கானுக்கு உத்தரவிட்டான்.


மொகலாயர் படையெடுத்து வருவது தெரிந்ததும், துர்க்காவதி தலைநகரமாகிய சிங்களகிரியின் கோட்டை கொத்தளங்களைப்



பலப்படுத்தினாள். முற்றுகை ஏற்பட்டால் அதைச் சமாளிக்கத் தேவையான உணவுப் பொருள்களைச் சேகரித்து வைக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டாள்.

மொகலாயர் படை, கர் ராஜ்யத்தின் எல்லைக்குள் புகுந்து முன்னோக்கி வந்தது. அதனை எதிர் நோக்கிச் சென்று தாக்கத் துர்க்காவதி தயாரானாள். அப்பொழுது இவளுடைய தளபதிகளில் ஒருவன் மொகலாயர் படை பலத்தை எடுத்துக் காட்டி, பணிந்து போவதே நல்லதென்ற கருத்தில் பேசினான். அதைக் கேட்டுத் துர்க்காவதி சீறியெழுந்தாள். ''அபகீர்த்தியுடன் வாழ்வதைக் காட்டிலும் கீர்த்தியோடு இறப்பதே மேல். அக்பர் பாதுஷா நேராக வந்திருந்தால் அவன் எதிர் நின்று நான் சமாதானம் பேசலாம். என்னுடைய அந்தஸ்துக்கு இந்த ஆஸப் கான் எம்மாத்திரம்? வீரத்தோடு போர் புரிந்து மரணமடைவதே சிறந்தது'' என்று வீராவேசத்துடன் கூறினாள். உடனே கவசமணிந்து கொண்டாள். பட்டத்து யானை மீது ஏறி அமர்ந்து கொண்டாள். வில்லையும் அம்பறாத் தூணியையும் பக்கத்தில் வைத்துக் கொண்டாள். கையில் பளபளவென்று பிரகாசிக்கின்ற ஒரு வேலைப் பிடித்துக்கொண்டாள். தன் படைகளுக்குத் தானே தலைமை தாங்கி நடத்திச் செல்ல முற்பட்டாள்.

இந்தப் போர் தொடங்குகிற போது துர்க்காவதியின் மகன் வீர நாராயணன் ஒரு கட்டிளங் காளை. சுமார் பதினெட்டு வயதிருக்



கும். அவனும் தன் வயதொத்த இளைஞர்களடங்கிய ஒரு படையுடன் புறப்பட்டான்.

கடைசியில் துர்க்காவதியின் படைகளும் மொகலாயர் படைகளும் 1564ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் ஒரு நாள் தற்போதைய ஜபல்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பரந்த திடலில் சந்தித்தன. ஒரே நாளில் இரண்டு தடவை மும்முரமாகப் போர் நடைபெற்றது. இரண்டு தடவைகளிலும் மொகலாயர் படை தோல்வியுற்றுப் பின்வாங்கிச் சென்றது. அதைத் துரத்திச் சென்று திரும்பி வராதபடி செய்துவிட வேண்டுமென்று துர்க்காவதி விரும்பினாள். ஆனால் அப்பொழுது இருட்டி விட்டது. இரவு நேரத்தில் சத்துருப் படைகளைத் துரத்திச் செல்வது உசிதமில்லை என்று இவளுடைய படைத் தலைவர்கள் கூறித் தடுத்து விட்டார்கள்.

மறு நாள் காலை மீண்டும் போர் தொடங்கியது. முந்திய நாள் நடைபெற்ற போரினால், துர்க்காவதியின் படைவீரர்கள் சோர்வுற்றுப் போயிருந்தனர். இறந்துபட்டவர் போக எஞ்சியிருந்தவர்களில் அநேகர் போர்க்களத்திலிருந்து உயிர் தப்பி ஓடிவிட்டனர். சுமார் முந்நூறு பேர் மட்டுமே கடைசி வரையில் உறுதியாக நின்றனர். இவர்களைக் கொண்டு துர்க்காவதி இரண்டாவது நாள் போரை நடத்தினாள். யானை மீதமர்ந்து மொகலாயப் படை மீது அம்பு மாரி பொழிந்து கொண்டிருந்தாள். அப்பொழுது மொகலாயர் பக்கத்திலிருந்து ஓர் அம்பு வந்து இவளுடைய வலது கண்ணில் பாய்ந்து விட்டது. அதைப் பிடுங்கி எறிய முயன்றாள். ஆனால் அதன் முனை ஒடிந்து இவள் கண்ணுக்குள்ளேயே தங்கி விட்டது. ரத்தமும் வந்துகொண்டிருந்தது. அதைப் பொருட்படுத்தாமல் மேலும் மேலும் சத்துருக்கள் மீது அம்புகள் விடுத்து அநேகரை யமனுலகுக்கு அனுப்பி வந்தாள். இந்த நிலையில் மொகலாயர் பக்கத்திலிருந்து வந்த ஓர் அம்பு இவள் நெஞ்சில் ஆழப் பாய்ந்தது. அதையும் பிடுங்கி எறிந்து விட்டு, தொடர்ந்து அம்புகளை விடுத்து மேலும் சத்துருக்களுக்கு நாசத்தை உண்டுபண்ணி வந்தாள்.

இங்ஙனம் இவள் வீராவேசத்துடன் போர் நடத்திக் கொண்டிருக்கையில், இவளுடைய மகன் வீர நாராயணன் சத்துருக்களினால் தாக்கப்பட்டுக் காயமடைந்து மூர்ச்சித்துப் போய், குதிரையிலிருந்து கீழே விழுந்து விட்டானென்று போர்க்களத்தின் ஒரு பக்கத்திலிருந்து கூக்குரல் கேட்டது. கூக்குரல் வந்த திசையை நோக்கினாள். வீர நாராயணனை அவனுடைய படைவீரர்கள் வெளி தூக்கிச் செல்வதைக் கண்டாள். அவ்வளவுதான்; இவளுடைய சப்த நாடிகளும் அடங்கி விட்டன. இனி தான் உயிர் பிழைத்திருப்பது எதற்கு என்று எண்ணினாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மொகலாயர் படையினர் நெருங்கி வந்தனர். அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டால் மான பங்கம் செய்வார்கள் என்று தீர்மானித்துத் துர்க்காவதி யானைமீதிருந்தபடியே தன் உடைவாளை எடுத்து மார்பில் குத்திக் கொண்டாள்.



"அப்பப்பா! ஒரு மாதிரியா அவங்களை ரயிலேத்தி விட்டு வந்தேனய்யா!"

"யாரை?"

"விருந்தாளிங்களை!"

"எப்ப வந்தாங்க?"

"என் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு வந்து விட்டு, என் ஷஷ்டியப்த பூர்த்தி வரையிலும் இருந்து விட்டு இப்பத்தான் போறாங்க!"

ரத்தம் பெருக்கெடுத்தோடியது. அவள் உடையை நனைத்து யானையின்மீதே வழிந்து வந்து மண்ணிலே பாய்ந்தது. தாய் நாட்டின் சுதந்திரத்தைக் காப்பதற்காக, தாய் நாட்டு மண்ணிலேயே தன் உதிரத்தைக் கொட்டி உயிரையும் கொடுத்துவிட்டாள் துர்க்காவதி.

துர்க்காவதி இறந்து பட்டாள் என்ற செய்தி தெரிந்ததும், மொகலாயப் படையினர் வெறி கொண்டு தலைநகரமாகிய சிங்களகிரியை வேகமாக அடைந்து அரண்மனைக்குள் புகுந்து கொள்ளையிட்டனர். அங்கு காயமடைந்து சக்தியற்றுக் கிடந்த வீர நாராயணனைக் கொலை செய்தனர். நகரம் முழுவதையும் கொலைக் களமாக்கினர். கர்ராஜ்யத்தின் சுதந்திர வாழ்வு முற்றுப்பெற்று மொகலாய ஆதிக்கத்துக்குட்பட்டது.

ஜப்பல்பூர் நகரத்துக்குச் சுமார் பன்னிரண்டு மைல் தொலைவில் துர்க்காவதி வீழ்ந்து இறந்துபட்ட இடத்தில் இன்றளவும் ஒரு நடு கல் காணப்படுகிறது. அவ்வழி செல்வோர் அனைவரும் அந்தக் கல்லை வழிபட்டுச் செல்வர். அந்த நடு கல்லுக்குப் பக்கத்தில் யுத்த பேரிகைகள் வடிவத்தில் இரண்டு பாறைகள் காணப்படுகின்றன. இவை, துர்க்காவதி ஆண்ட காலத்தில் அரச விருதுகளாக உபயோகிக்கப்பட்டவை என்றும், இப்பொழுது கல்லுருவம் பெற்றிருக்கின்றனவென்றும் துர்க்காவதி நடத்திய போர்களில் உயிர் நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்ற முறையில் இவ்விரண்டினின்றும் தினந்தோறும் நள்ளிரவில் பேரொலி எழுகிறதென்றும் அக்கம்பக்கத்திலுள்ள கிராமவாசிகள் நம்புகிறார்கள்.

நீரோட்டம்

எட்டாம் அத்தியாயம்

ரயில் கடகட வென்று வாயு வேகமனோ வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. யசோதை கொடுத்த பழங்களை யெல்லாம் தீர்த்துக் கட்ட வேண்டும் என்று தியாகு சொன்னதும் சுசிலா உடனே மறுதளித்து விட்டாள்.

''ஐயையோ! எனக்கு வயிறு நிறைந்து கிடக்கு. சித்தியோ முட்ட முட்டச் சாதத்தைப் போட்டுவிட்டாள். எனக்கு ஒரு பழம்கூட வேண்டாம்.''

''சும்மா கதையெல்லாம் அளக்காதே. நீ இனிமேல் நிறையச் சாப்பிடப் பழகிக் கொள்ள வேண்டும் சுசி! பெரிய குடும்ப பாரத்தை வகிக்கப் போகிறாய்! பிறகு இளைத்து விட்டால் யசோதைக்கு யார் பதில் சொல்ல முடியும்? துளைத்துக் கொட்டி விடுவாளே!''

''சித்திக்கு ரொம்பப் பயந்தவர்கள் தாம் போங்கள்! அதுதான் சித்தி எது கூறினாலும் முரண்டு பிடித்தீர்களாக்கும்..... அப்பப்பா, ஒரு நாள் சினிமாவுக்கு என்னை அழைத்துப் போகச் சொன்னதற்கு எவ்வளவு பிடிவாதம் பிடித்து மறுத்தீர்கள்!'' என்றாள் சுசிலா கேலியாக.

''சுசிலா! உனக்குத் தானாகவே எல்லாம் புரிந்து விட்டிருக்கும் என்றுதான் நினைத்தேன்.'''

''புதிதாக என்ன புரிய வேண்டும்?''

''நான் சென்னைக்கு வந்தபோது உனக்கும் எனக்கும் விவாகமாகியிருக்கவில்லை. பிறகு நாம் விவாகமான தம்பதிகள் என்பதை மறந்து விட்டாய். உன் வீட்டுச் சூழ்நிலையையும் நீ நினைத்துப் பார்த்திருக்க வேண்டும்.''

''அப்படியானால்...''

''உனக்கு இன்னும் புரியவில்லையா சுசிலா? யசோதையும் பருவப் பெண். அவள் எதிரில் நாம் இருவரும் குதித்துக் கூடிப் பேசுவது மூலம் அவள் தன் வாழ்க்கையை நினைத்து வருந்தும்படி செய்வதை நான் விரும்பவில்லை. உன் தந்தை அவளிடம் சரளமாகப் பழகுவதாக இருந்தால் நான் அவ்வளவு கட்டுப்பாடுடன் இருந்திருக்க மாட்டேன். அதனால்தான் இந்த இரவை அங்கே கழிப்பதை நான் சிறிதும் வரவேற்கவில்லை.''

சுசிலாவின் மனத்தில் ஏதோ பெரிய பாரம் அழுத்துவது போல் இருந்தது. தியாகு கூறியது அவ்வளவும் அவளுக்கு உண்மையாகவே பட்டது. தனக்கிருந்த குதூகலத்தில் யசோதையின் நிலையை யோசிக்காமல் இருந்து விட்டதைப் பற்றி வருந்தினாள். யசோதைக்குச் சமமாகத் தியாகுவும் உயர் குணம் படைத்தவனாக அச்சமயம் அவள் நினைத்தாள். மேற்கொண்டு தன் எண்ணம் மாறிவிடப் போவதை அவள் அப்போது அறிந்திருக்க வில்லை.

''ஆமாம். சித்தியை நினைத்தால் பரிதாபமாகத்தான் இருக்கிறது. நான் அப்பாவிடம் இது பற்றி எவ்வளவோ தடவை வாதாடி விட்டேன்.... சித்தியின் நல்ல குணத்திற்கு நீங்களே அவளை மணம் செய்து கொண்டிருந்திருக்கலாம்.'' கடைசி வார்த்தைகள் அவள் வாயிலிருந்து எப்படி வெளிப்பட்டன என்று அவளுக்கே புரியவில்லை. கேட்டுவிட்டுச் சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டாள் சுசிலா.

தியாகு ஒரு விநாடி அவளை ஊடுருவி நோக்கினான். பிறகு ஜன்னலுக்கு வெளியே தன் பார்வையைச் செலுத்தியபடி ''அப்படித்தான் நினைத்திருந்தேன். மாமா அவசரப்பட்டு விட்டார். அதனால் நான் வருந்தப் போவதில்லை. உன்னை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துக் காப்பாற்றுவேன், சுசிலா!'' என்றான். அவ்வேளைக்குச் சுசிலா அவ்வார்த்தைகளைப் பெரிதாக மதிக்கவில்லை.


தியாகு சற்று மௌனமாக இருந்தான். பிறகு சுசிலா கேட்டாள்: ''சித்தியின் மனம் நோகக் கூடாது என்று நீங்களாக ஏற்பாடு செய்தீர்களா?''

தியாகு முதலில் சிறிது மௌனம் சாதித்துவிட்டுப் பிறகு, ''இல்லை சுசிலா!

எஸ். ரங்கநாயகி

அவை தானாகவே நேர்ந்தவை. ஆனால் அதன் விவரங்களைப் பற்றி அறிய நீ அதிகம் கவலை கொள்ளாதே சுசிலா. நீ அவற்றை மறந்துவிடு'' என்று கூறியவன் ஒரு வாழைப் பழத்தை எடுத்து உரித்தான்.

கணவன் தன்னிடமிருந்து ஒரு ரகசியத்தைக் காப்பாற்றுவதை அவள் விரும்பவில்லை. ஆயினும் கணவனுடன்



முதல் பிரயாணத்
இன்போது அவன்
பழையபடி பேச முற்பட்டுள்ளபோது அந்த இன்ப நேரத்தைக் கெடுத்துக் கொள்ளவும் அவன் விரும்பவில்லை.

கல்கத்தாவை ரயில் அடைந்தபோது இரண்டு மணி நேரம் தாமதமாகி விட்டது. கல்கத்தா நகரைக் கண்டு களித்தபடியே அவள் டாக்ஸியில் சென்று கொண்டிருந்தாள். எவ்வளவு பெரிய பெரிய வீதிகள்! சென்னையைப் போல் மும்மடங்கு கார்கள் சாலையில் சென்று கொண்டிருந்தபோதும் நெருக்கடி கிடையாது. டாக்ஸி டிரைவர்கள் எவ்வளவு வேகமாக முன் செல்லும் வண்டிகளைக் கடந்து செல்கிறார்கள்! ஓரோர் இடத்தில் சாலைகளுக்கு நடுவே புல் வெளிகள்... தெருக் கரையில் டிராம்கள்... இரு இரவுகள் ரயிலில் கழிந்தபோதிலும் நகர்க் காட்சிகள் அந்த அலுப்பை மறைத்து விட்டன. சதர்ன் அவென்யூவில் டாக்ஸி வந்து நின்றதும்தான் அவள் மீண்டும் தன் நினைவுக்கு வந்தாள்.

இயாகு இருந்த பிளாக் ரொம்பப் பெரியது என்று சொல்ல முடியாது. இரு அறைகளும் ஒரே ஒரு வராந்தாவும் இருந்தன. அந்த இரு அறைகளில் எப்படிக் குடித்தனம் செய்வது என்பது தான் அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால் அதற்கு வாடகை நூற்றைம்பது ரூபாய் என்று கேட்ட பிறகு இதைவிடப் பெரிய வீட்டைத் தேடும்படி அவள் வாய் திறந்து கேட்கவே இல்லை. வீட்டிலிருந்த சௌகரியங்களையெல்லாம் கவனித்த போது அவள் திருப்தி அடைந்தாள்.

இரவுச் சாப்பாட்டுக்கு ஹோட்டலி லிருந்து வரவழைத்து விட்டான் இயாகு. அன்று அவன் வெளியே எங்கும் போகவில்லை. இரவு வெகுநேரம் கதைகளெல்லாம் பேசிப் பேசி மகிழ்ந்தனர்.

அந்த இரவு நேரத்தை இருவரும் ஆனந்தமாகக் கழித்தனர். கண்களை மூடிய போது, சென்னையில் இருந்திருந்தால் இவ்வளவு ஆனந்தமாகக் கழித்திருக்க முடியாது எனச் சுசிலா உணர்ந்தாள். கழித்திருந்தாலும், பாவம், சித்தி எவ்வளவு உள்ளம் நொந்து போயிருப்பாளோ! எவ்வளவு முன் யோசனையோடு தியாகு நடந்து கொண்டிருக்கிறார்!

மறு நாள் காலை சுசிலா விழித்துப் பார்த்த போது தியாகு காப்பி போட்டு விட்டிருந்தான். சுசிலா பரக்கப் பரக்கப் பல் தேய்த்து விட்டு வந்தாள்.

''உங்களுக்கு என்ன அவசரம்? என்னை எழுப்பியிருக்கக் கூடாதா? இவ்வளவு நாட்களாக நீங்களே தயாரித்துக் குடித்தது போதாதா?''

''இனிமேல் நீ தினமும் தயாரிக்கும் இரண்டாம்தர காப்பியைக் குடிக்க வேண்டுமே! நான் தயாரிக்கும் முதல் தர காப்பியை உனக்கு என் கையினால் முதல் சமர்ப்பணம் அளிக்க வேண்டும் என்று தான் நானே ஹீட்டரில் ஜலத்தை வைத்து விட்டேன்.... என் காப்பி எப்படி? கொஞ்சம் ருசித்துப் பாரேன்!'' டம்ளரில் காப்பியை ஊற்றி அவள் வாயருகே எடுத்துச் சென்றான்.

''யாராவது பார்க்கப் போகிறார்கள். இப்படிக் கையில் கொடுங்கள்'' என்று கூறி டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டாள் சுசிலா.

''கவலையே படாதே, சுசிலா. இந்த இரு அறைகளில் நானும் நீயும் என்ன செய்து கொண்டாலும் வெளியே ஒருவரும் அறியாதபடி வீட்டைக் கட்டி விட்டிருக்கிறான் வீட்டுக்காரன்!''

சுசிலா காப்பியை ருசித்தாள். ''ஏதேது, கல்கத்தாவில் சர்க்கரைப் பஞ்சமே கிடையாது போலும்.''

''என் கைப்பண்டம் ருசியாக இருக்கட்டுமே என்றுதான் நிறைய போட்டேனடி, தங்கமே.... நான் சொல்வதைக் கேள். சர்க்கரையே போடாமல் இன்னும் கொஞ்சம் காப்பி குடி. இரண்டும் வயிற்றில் ஈடுகட்டிக் கொள்ளும்...''

பேச்சிலும், வேடிக்கையிலுமே மணி ஏழாகி விட்டது. வீட்டு வேலைக்காரி 'ஜீ' வந்தாள். சுசிலாவுக்கு அவளையும், அவளுக்குச் சுசிலாவையும் அறிமுகம் செய்து வைத்தான் தியாகு. பிறகு காய்கறி வாங்கிக் கொண்டு வர மார்க்கெட்டுக்குச் சென்றான்.

போகும் போது, ''சுசிலா, பக்கெட் அடுப்பு அவசியமானால் பற்ற வைத்துக் கொள். இல்லாவிடில் ஹீட்டரை உபயோகிக்கலாம். அதற்குத் தனி லைன் உண்டு. யூனிட் பணம் அதிகம் ஆகாது. 'ஸ்டவ்' வேண்டுமானால் மூட்டிக்கொள். மூன்றையும் மூட்டி விட்டுச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டு வேண்டுமானாலும் நிற்கலாம்'' என்று கூறி விட்டுச் சென்றான்.

சுசிலா வடை பாயசத்தோடு சாப்பாடு தயாரிக்கத் திட்டம் போட்டாள். தியாகு தரிகாய்களை வாங்கிக் கொடுத்து விட்டு வெளியே போய் விட்டு வருவதாகக் கூறிச் சென்றான்.

பாதிச் சமையல் ஆகிக் கொண்டிருந்த போது 'மிஸ்டர் தியாகு' என்ற குரல் கேட்டது.

சுசிலா கதவைத் திறந்தாள். அங்கு பளிங்கு போல் தீர்ந்த அழகுடன் ஒரு பெண் நின்றிருந்தாள். இரட்டைப் பின்னல் சாட்டைபோல் வளைந்து தொங்கிக் கொண்டிருந்தது. சந்திரன் போன்ற குளுமையான முகத்தில் அர்த்த சந்திர வடிவத்தில் திலகம். நீல நிற நைலான் புடவையும் அதற்கேற்ற சோளியும் அவள் அழகைப் பன்மடங்காக எடுத்துக் காட்டின.

''அவர் வெளியே போயிருக்கிறார்'' என்று ஆங்கிலத்தில் கூறினாள் சுசிலா.

''ஓ, அப்படியா? நீங்கள்தான் அவர் மனைவியா? என்னுடைய நல் வாழ்த்துக்களை நீங்கள்தான் ஏற்க வேண்டும்.'' அவள் தமிழிலேயே பேசினாள்.

''வாருங்கள். உள்ளே வந்து உட்காருங்கள்.....'' என்று சுசிலா அவளை வரவேற்றாள்.

''இல்லை. நான் போகிறேன். நான் எழுதிய கடிதம் அவருக்குக் கிடைத்ததுமே அவர் புறப்பட்டிருப்பார் என்றுதான் நினைத்தேன். அவர் வந்து விட்டாரா என்று பார்த்துப் போகத்தான் வந்தேன். அதே போல் அவர் வந்து விட்டது குறித்து மிக்க மகிழ்ச்சி'' என்று கூறிப் படி இறங்கினவள் மீண்டும் திரும்பி நோக்கி, ''அவர் வீட்டுக்குத் திரும்பியதும் சீதா வந்திருந்தாள் என்று சொல்லி விடுங்கள். அது போதும்'' என்று கூறி விட்டு, வீதியில் சென்று மறைந்து விட்டாள்.

சுசிலாவுக்கு மேற்கொண்டு சமையலில் புத்தி ஓடவில்லை. ஒரு பெண் அவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறாள். அதற்கு மதிப்பு வைத்து யசோதையையும் எதிர்த்துக் கொண்டு இவர் புறப்பட்டு வந்து விட்டார். அந்தக் கடிதத்தைப் பற்றி ஒன்றுமே கேட்க வேண்டாமென இவர் எதற்காகச் சொல்லியிருக்க வேண்டும்? தந்தி கொடுத்தவளும் இவள் தானோ! தந்தியும் தபாலுமாகப்பறக்க அப்படி என்னதான் விஷயம் இருக்கும்?

அடுப்பில் வடைக்காக வைத்த எண்ணெய் தீய்ந்து காய்ந்து கொண்டிருந்தது. சுசிலாவோ தன் உணர்ச்சியே யில்லாது யோசனையில் ஆழ்ந்து கிடந்தாள்.

''என்ன சுசி, அடுப்பில் ஏதோ தீய்ந்த வாசனை வருகிறதே!'' என்று கூறிக் கொண்டே தியாகு உள்ளே நுழைந்தான்.

''ஒன்றுமில்லே. தலே சுற்றியது. உட்கார்ந்து விட்டேன். வடைக்கு வைத்த எண்ணெய் காய்கிறது......''

''அப்படியே உட்கார்ந்து விடு. இதோ நானே வடை தயாரித்துக் குழந்தையின் வாயில் போட்டு விடுகிறேன். தலே சுற்றல் வந்த இடம் தெரியாமல் ஓடி விடும் பார்.'' தியாகு வேஷ்டியை முழங்காலோடு மடித்துக் கட்டிச் சமையலறைக்குள் புகுந்தான்.

''வேண்டாம். நீங்கள் நகருங்கள். நானே தயாரித்து விடுகிறேன்...யாரோ கீதாவாம், உங்களுக்குக் கடிதம் எழுதினாளாம்..... தந்தியும் கொடுத்தாளாம். என்னென்னவோ செய்தாளாம்.'' சுசிலா ஏதேதோ வேகமாகக் கூறிக் கொண்டே போனாள்.

''அடாடா! கீதாவா வந்தாள்? அவளைத் தேடி நான் அங்கே போனேன். அவள் இங்கு வந்து விட்டாளாக்கும்'' என்று கூறியபடி தியாகு நாற்காலியில் அமர்ந்து விட்டான்.

''யார், அவள்? எதற்காக வந்தாள்? அவள்தான் கடிதமும் எழுதியதாகச் சொன்னாள்......'' சுசிலா கேட்டாள்.

''அவள் யாரானால் என்ன சுசிலா? கடவுள் சில பெண்களை இது போல் ஆட்டி வைப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லே......'' எனக் கூறியவன் சடக்கென நாற்காலியை விட்டு எழுந்திருந்தான். ''சுசிலா! நான் மீண்டும் கீதாவைப் போய்ப் பார்க்கிறேன். நான் வருவதற்குச் சற்று நேரமானாலும் எனக்காக நீ காத்திருக்காதே. சாப்பிட்டு விடு.....''


சுசிலா ஏதும் கூறு முன்னே தியாகு படி இறங்கி விட்டான். சுசிலா செயலற்று நின்று விட்டாள்.

சௌராங்கியில் பல தெருக்களைக் கடந்து அந்த ஒற்றை அறையை அடையத் தியாகுவுக்கு முக்கால் மணி நேரமானதே குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். கீதாவைக் காண அவன் பரபரப்புடன் சென்றான்.


''கீதா!'' என விளித்தபடி கதவைத் திறந்தான் தியாகு. கீதா கைகூப்பி,

குடந்தையில் ஒரு குடமுழுக்கு

சிற்பக் கலையில் என்னென்னவோ புதுமைகளைப் புகுத்துகின்ற இந்நாட்களிலும்கூட, பாரதத்தின் புராதனமான கோயில்கள் உலகெங்கிலுமுள்ள சிற்பக் கலை நிபுணர்களைப் பிரமிப்பில் ஆழ்த்திக் கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றன. எந்தக் கலையிலும் தெய்வீகத்தைப் புகுத்தியதுடன் தெய்வ வழிபாட்டையே ஓர் அற்புதமான கலையாகவும் கொண்ட நம் தமிழ் நாட்டில் நமது மூதாதையர்கள் நமக்கு விட்டுச் சென்ற அரிய கலைப் பொக்கிஷங்கள் புராதனமான நமது கோயில்களாகும். அவற்றை நன்கு பாதுகாத்து வர வேண்டியது நமது தலையாய கடமையாகும்.



மகாமகக் குளம் காரணமாக அகில பாரதத்தில் மட்டுமின்றி அயல் நாடுகளிலும் புகழ் பெற்ற திருக் குடந்தை நகரில் கங்கை, யமுனை, நருமதை, சரஸ்வதி, காவேரி, கோதாவரி, துங்கபத்திரா, கிருஷ்ணா, சரயூ ஆகிய ஒன்பது புனிதமான நதிகளும் ஒன்பது கன்னிகைகளாகக் காசி விசுவநாத ஸ்வாமி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கின்றனர். நவ கன்னிகைகளுக்கும் தரிசனம் தந்த காசி விசுவநாதரின் ஆலயத்துக்கு முக்கிய திருப்பணிகளைச் செய்து அஷ்டபந்தனம் மருந்து சாத்திக் குடமுழுக்கு நடத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் புனித கைங்கரியத்தில் பங்குபற்ற விரும்புவோர் கும்பகோணம், ஸ்ரீ காசி விஸ்வநாதஸ்வாமி ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத் திருப்பணிக் கமிட்டியுடன் தொடர்பு கொள்ளலாம்.



நீங்கள் அப்படிச்
சொல்லமாட்டீர்கள்...
ஆனால் அவள் சரும
த்தில் ஏதோ
குறையுள்ளது!

நீங்கள் அப்படி
எண்ணமாட்டீர்கள்...
ஆனால் இப்பொழுது
அக்குறை நீங்கிவிட்டது!

அதைப்பற்றி நீங்கள் அறிந்திருக்க நியாயமில்லை. அத்தனை நுட்பமாக, துல்லிய மாக அதை மறைத்திருக்கிறது இலேசான, லாவண்யமான லாக்டோ-காலமைன்! குறை எதுவாயினும் சாமர்த்தியமாக மறைக்கவல்ல மழமழப்பான இப்பவுடர் தளம்... உங்கள் மேனியெழிலுக்கு மேன்மை அளிக்கிறது.



"போன வருடம் பெயிலானபோது என்னப்பா சொன்னீங்க?"

"அடுத்த வருடமாவது பாஸ் பண்ணித் தொலை என்றேன்!"

"இந்த வருடமும் அதையே சொல்லி விடுங்களப்பா!"

"வாருங்கள் தியாகு. உங்களுக்கு என் வாழ்த்துக்கள். அருமையான மனைவியாகத் தான் பெற்றிருக்கிறீர்கள்." என்று புன்னகையுடன் கூறினாள். ஏக்கத்தை மனப் பெட்டியில் அடைத்து விட்டுக் கண்ணீரைக் கண் விழிக்குள் அடக்க முயன்றாள்.

"உன் வாழ்த்துக்களுக்கு இப்பொழுது நான் வந்தனம் செலுத்தத் தயாராக இல்லை. உன் விஷயத்துக்கு முதலில் வா. நீ தந்தி கொடுத்த போதே நான் புறப்பட்டு வந்து விடத் தான் நினைத்தேன்..." என்றான் தியாகு.

"தியாகு! நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். தந்தி கொடுத்ததும், தபால் எழுதியதும் தவறு என்பதை நினைத்து இப்பொழுது வருந்துகிறேன்."

"தந்தி கொடுக்காமலிருந்தால் அத்தை பிழைத்து எழுந்து விடுவாள் என்று நினைத்தாயா? அல்லது கடிதம் எழுதாமலிருந்தால்...."

"அதற்காகச் சொல்ல வில்லை. நீங்கள் விவாகம் செய்து கொண்டு குதூகலமாக இருந்த வேளையில்....."

"நீ குறுக்கே விழுந்து கலைத்து விட்டாயோ!.... சீதா, இந்த மேல் பேச்செல்லாம் எனக்கு அவசியமில்லை. ஆபத்துக் காலத்தில் மனப் பாரத்துக்கு ஒரு துணை வேண்டியிருந்தது. அதற்குச் சரியான துணை கிடைத்திருக்கிறது என சந்தோஷப்படு. முதலில் இதைக் கூறு. உன் அத்தைக்குத் திடீரென்று இப்படி சுவர்க்கத்துக்கான பிரயாணச் சீட்டு எப்படிக் கிடைத்தது?"

"ஐயோ, தியாகு! இதை நான் எப்படிக் கூறுவேன்? அவள் மரணத்துக்கு நானே காரணம். நான் அவளிடம் ஒன்றுமே கூறியிருக்கக்கூடாது."

திடீரென்று விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டாள் சீதா.

"சீதா!" தியாகுவுக்கும் குரல் அடைத்தது. அவனுக்குத் தெரியும், சீதா தன் அத்தையிடம் எப்படி ஒட்டிக் கொண்டிருந்தாள் என்று.

சீதா இன்னமும் விக்கிக் கொண்டிருந்தாள்.

"சீதா! யாவற்றையும் எதிர்க்கும் துணிவைத் தரத்தான் இது போன்ற துன்பங்கள் நேரிடுகின்றன என்பதை நீ மறந்து விடக் கூடாது."

"இந்த வேதாந்தமெல்லாம் மனம் ஒப்புக் கொள்ள மறுக்கிறதே தியாகு. ஒரே ஆதாரமாக இருந்தவள் அத்தை. தந்தையற்ற நான் தாயுடன் இந்தக் கல்கத்தாவுக்கு அத்தையிடம் வந்த சில நாட்களுக்குள் விஷ ஜுரத்தின் காரணமாக என் தாயும், அத்தை புருஷனும் அடுத்தடுத்து இறந்து விட்டார்கள். தன் புருஷன் இறந்ததை மறந்து என்னைத் தேற்றியவள் அத்தைதான்......"

"அந்தக் கதை யெல்லாம் முன்பே தான் சொல்லியிருக்கிறாயே! அவ்வளவு ஆதரவளித்தவள் திடீரென்று...."

"அதற்கும் என் துரதிர்ஷ்டம்தான் காரணம் தியாகு. நீங்கள் சென்னை சென்றதுமே என் விவாகத்தைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்துவிட்டாள். என் மனத்தை நான் திறந்து காட்டியபோது அவள் உணர்ச்சிவசப்பட்டுத் திக்குமுக்காடி விட்டாள். பல துன்பங்களைத் தாங்கியவள் கடைசியில் இந்த உணர்ச்சியைத் தாங்க முடியாதவளாய் மகனிடம் பேசியபடியே உயிரை விட்டு விட்டாள்." சீதா மீண்டும் விசிக்க ஆரம்பித்து விட்டாள்.

தியாகு தலை குனிந்தபடி அமர்ந்து கிடந்தான். சீதாவின் வாழ்க்கை அவனுக்குத் தெரியாத விஷயமல்ல. அவளது மேம்பட்ட குணத்தைக் கண்டு அவனே வியந்திருக்கிறான். அந்தக் குணத்தை அவன் வியந்து போற்றத் தக்க பக்குவம் அடைந்து விட்டிருந்தான். ஆனால் அத்தையோ சீதாவுடனே பழகியவள். சீதாவினுடைய குணத்தை ஆராய்ந்து பார்க்கச் சக்தியற்றவளாக இருந்து விட்டாளோ, அல்லது மனத் துயர் அம்மாதிரி அவளைப் பார்க்கத் தூண்டவில்லையோ! சீதா தன் மனத்தைத் திறந்து காட்டியபோது அத்தை தாங்க முடியாமல் திணறினாள். எதிர்பாராத முடிவு அவள் வாழ்க்கையையே முடித்து விட்டது. (தொடரும்)



அறிவுக் கனலே, அருட்புனலே!

ரா. கணபதி 61

நாடும், ஏடும் பாராட்டினாலும் ஸ்வாமிஜி சர்வமத மகாசபையில் தாம் பேசியதைப் பற்றி எவ்வளவு பணிவுடனும், பக்தியுடனும் எழுதுகிறார், பாருங்கள்!

"பயந்து நின்றேன் நான். பிரபு பலம் தந்தான். நான் என் பணியை நன்றாகச் செய்திருப்பேனாயின் ஆண்டவன் எனக்கு ஆற்றல் அளித்தான் என்பதே அதன் அர்த்தம்...ஈசுவரன் என்னைத் தினந்தோறும் எப்படி வெல்லாம் காத்து வருகிறான் தெரியுமா? இதற்காகக் கோடி கோடி யுகங்கள் வாழ்ந்து, கந்தல் உடை உடுத்தி, பிச்சை எடுத்துண்டு அவனுக்குச் சேவை செய்தாலும் போதாது.

"அமெரிக்காவுக்கு வந்த புதிதில், இனி 'ஆண்டவன் விட்ட வழிபோகட்டும்' என்றிருக்க முடியாது என எண்ணி, என்னை நானே கவனித்துக் கொள்ள நினைத்தேன். என்ன பயங்கரமான விஷமம் அது! எத்தகைய நன்றியின்மை! இப்போது தான் தெளிவாகக் காண்கிறேன் — ஹிமாலயப் பனி முடிகளின் கடுங் குளிரிலும், இந்தியச் சமவெளிகளின் கடுவெயிலிலும் எவன் எனக்கு வழிகாட்டினானோ அவன் இங்கும் எனக்குத் துணை நிற்கிறான், வழி காட்டுகிறான்....."

முன்பு ஸ்வாமிஜியின் முகத்தில் கதவைச் சாத்தியவர்களின் இல்லங்களெல்லாம் இப்போது அவருக்காகத் திறந்து கொண்டன. மகாசபை நடந்தபோது ஸ்வாமிஜி ஜான் பி. லயன் என்பவரது இல்லத்தில் தங்கியதாகத் தெரிகிறது. பேருரை நிகழ்த்திவிட்டு வந்த இரவு தமக்காகப் பட்டுப் பஞ்சு மெத்தை விரித்திருப்பதைக் கண்டவுடன் அவரது வயிற்றில் துக்கப் பந்துகள் திரண்டு மேலே மேலே எழும்பி வந்து நெஞ்சை அடைத்தன. அவரது கண்கள் தாரை தாரையாக நீரைப் பொழிந்து அந்த அடைப்பைக் கரைத்தன. நாள் முழுதும் கனம் தூக்கி விட்டு, எலும்பெல்லாம் நொந்து நொறுங்கி விடும் போல் வலிக்க, சாலை ஓரத்திலே கட்டாந் தரையிலே கையை மடித்துத் தலையணையாக வைத்துப் படுக்கும் லட்சம் — லட்சம் — லட்சம் பாரத மக்கள் அவர் கண் முன் தோன்றினர். வாய் விட்டுக் குமுறிக் குமுறிக் கண்ணீர் பெருக்கிய ஸ்வாமிஜி பட்டு மெத்தையினின்று எழுந்தார். தள்ளாடித் தள்ளாடிச் சாளரத்தருகே சென்றார். நக்ஷத்திரங்கள் மினுக்கும் கார் நிறவானத்தைக் கண்டார்.

'அம்பிகை! சர்வேசுவரியான தாய்!' வைர அங்கி அணிந்த நீல நிறத்து நாயகியாகத் தோன்றியது ஆகாசம்.

தரையில் விழுந்து தண்டனிட்டார் ஸ்வாமிஜி.

"ஜகன்மாதா! என்னுடைய தாயகம் தரித்திரத்தில் திண்டாடும் போது எனக்கு ஏனடி இந்தப் பெயரும் புகழும்? ஆயிரமாயிரம் இந்தியர்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்கு இல்லாமல் சாகும் போது இங்கே சொகுசுப் பொருள்களுக்காக இவர்கள் கோடி கோடியாகச் செலவழிக்கிறார்களே! இது ஏனம்மா? பாரத மக்களை உயர்த்துவது யார்? அவர்களுக்கு உணவளிக்கப் போவது யார்? வழிகாட்டு, தாயே, எனக்கு வழிகாட்டு!" என்று நீராளமாய் உருகினார் விவேகானந்தர்.

இந்தியாவில் சமூக — சமய ஸ்தாபனம் நிறுவ வேண்டும் என்று ஸ்வாமிஜிக்கு இருந்த ஆர்வம் தீவிரமாயிற்று.

"என்னுடைய வாழ்க்கையில் இந்த அமெரிக்காவில்தான் பெரியதொரு சபலத்துக்கு ஆளாகி விட்டேன்" என்றார் ஸ்வாமிஜி.

"அப்படிச் சபலிக்கச் செய்தவள் யாரோ?" என்று சிரித்தபடி கேட்டாள் ஸ்ரீமதி லயன்.

"அவள் இல்லை; அது என்று சொல்லுங்கள்; உங்களுடைய ஸ்தாபன அமைப்புத்தான் என்னைச் சபலமடையச் செய்து விட்டது" என்றார் ஸ்வாமிஜி பதில் சிரிப்புடன்.

ஸ்தாபனம் தொடங்க நிதி வேண்டும். எனவே இந்தச் சந்நியாசி இனி சம்பாதித்தாக வேண்டும். அமெரிக்காவில் நல்ல பேச்சாளர்கள் பெரும் சம்பாத்தியம் பெறுவது அந்தக் காலத்தில் வெகு லகுவாக இருந்தது. பல இடங்களில் பிரசங்கங்கள் அமைத்துத் தரும் 'லெக்சர் பீரோ'க்கள் பல இருந்தன.

ஸ்வாமிஜி ஒரு 'லெக்சர் பீரோ'வின் அழைப்பை ஏற்றுப் பல மேடைகள் ஏறி உரைகள் நிகழ்த்தத் தொடங்கினார்.

சம்மானத் தொகைகளைக் கைக் குட்டையில் முடிந்து வந்து, பெருமிதம் படைத்த பாலகனைப் போல அவற்றை ஸ்ரீமதி ஹேலின் கையில் அவிழ்த்துக் கொட்டுவார் ஸ்வாமிஜி. எந்த நாணயத்துக்கு என்ன மதிப்பு என்பதையெல்லாம் ஸ்ரீமதி ஹேல் படித்துப் படித்துச் சொல்லிக் கொடுப்பாள். 'ஏகசந்தக்ராஹி'யாகக் கடினமான வேதாந்த தத்துவங்களையெல்லாம் புரிந்து கொண்ட விவேகானந்தருக்கு இந்தக் காசு பணம் விஷயம் மட்டும் எளிதில் விளங்காது! 'உங்கள் ஜனங்கள் எங்கேயோ பதினாயிரம் மைலுக்கு அப்பாலுள்ள என் நாட்டு மக்களுக்காக இவ்வளவு தாராளமாக உதவுகிறார்களே' என்று கூறிக் கூறி மகிழ்ச்சியடைவார்.

ஒரு விதமான முன்னேற்பாடும் இன்றி, ஒரு குறிப்புத் தான்கூட இல்லாமல் சிகாகோவின் இலக்கிய சங்கங்கள் பலவற்றிலும், மாதா கோயில்களிலும் உரைகள் பல ஆற்றினார் ஸ்வாமிஜி. சிகாகோ நகரம் முழுவதும் அறிந்து, வணங்கி, போற்றிய புள்ளியாகி விட்டார். சநாதன தர்மத்தை அவர்களுக்கு அளித்த அதே சமயத்தில் அமெரிக்க வாழ்முறைகளையும், முக்கியமாகக் கல்வித் துறையில் அமெரிக்கா கண்ட முன்னேற்றத்தையும் விஞ்ஞான உண்மைகளையும் அறிந்தார்.

ஸ்வாமிஜியை விருந்தினராகப் பெறும் பேற்றினை அடைந்திருந்த இல்லங்களில் முக்கியமானது ஜார்ஜ் டபிள்யூ. ஹேலுடையதாகும். ஸ்வாமிஜி அமெரிக்காவில் பல இடங்களில் பிரசங்கம் புரிந்த போதும் 1894ம் ஆண்டு முழுதிலும் ஹேல் இல்லத்தையே தமது ராஜதானியாக வைத்துக் கொண்டு அவ்வப்போது திரும்பி வருவார்.

ஹேல் தம்பதியருக்கு இரண்டு பெண்கள். மேரி ஹேல், ஹேர்ரியட் ஹேல் — என்று. ஹேர்ரியட் மக்கிண்ட்லி, இஸபெல் மக்கிண்ட்லி என்ற இரு மருமான்களும் ஹேல் தம்பதியுடன் வசித்தனர். நாலு பெண்களும் மணமாகாதவர்கள். 'புஷ்பம் போன்றவர்கள், நல்லவர்கள், தூயவர்கள், புனிதமானவர்கள், சந்தோஷப் பிராணிகள்' என்றெல்லாம் ஸ்வாமிஜி இவர்களைப் பற்றிக் கூறியிருக்கிறார். இரண்டு ஹேர்ரியட்களும் சாந்த சுபாவமுள்ளவர்கள். மேரியும் இஸபெல்லும் சரியான 'வம்பி'கள். ஆனாலும் ஸ்வாமிஜிக்கு இந்த வாயாடிகளிடம்தான் அதிகப் பிரியம்.

'போன ஜன்மத்தில் நாங்கள் உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்திருக்க வேண்டும்' என்று ஸ்வாமிஜி சொல்லுமளவுக்கு அந்த இல்லம் அவருக்குப் பந்தப்பட்டு விட்டது; பாத்தப்பட்டும் விட்டது.

சிகாகோவிலிருந்து அமெரிக்கா முழுதும் ஸ்வாமிஜியின் புகழ் காட்டுத் தீயெனப் பரவி விட்டது. புகழுக்குரியவர் அமெரிக்க ஐக்கிய நாடுகள் முழுதும் பயணம் சென்று பிரசங்கம் புரிந்து தமது புகழைப் பாரதத்தின் புகழாக நிலைநாட்டலானார்.

சிகாகோவிலிருந்து மேற்கு முகமாகப் புறப்பட்ட ஸ்வாமிஜி பிறகு மத்திய-கிழக்கத்திய ராஜ்யங்களில் பயணம் தொடர்ந்தார். எல்லா முக்கிய நகரங்களும் அவரைக் கண்டன.

ஸ்வாமிஜியின் உரைகளை அமெரிக்க மக்கள் எவ்வளவு பெருந் திரளாகக் கேட்டனர் என்பது அவருடைய ஒரு பிரசங்கத்துக்கே 2500 டாலர்கள்வரை வசூலாயிற்று என்பதிலிருந்து தெரிய வரும். இவ்வளவு நல்ல வசூல் இருந்தும் லெக்சர் பீரோக்காரர்கள் ஸ்வாமிஜியை ஏமாற்றத் தொடங்கினர். ஆரம்பத்தில் அவருக்கு ஓர் உரைக்கு 900 டாலர்கள் வழங்கி, மிகுதியைத் தாங்கள் எடுத்துக் கொண்ட லெக்சர் பீரோவினர் சிறுகச் சிறுக அவருக்குரிய தொகையைக் குறைத்துக் கொண்டே வந்து இருநூறு டாலர்களாக்கினர். பண விஷயத்தில் அக்கறை செலுத்த இயலாத ஸ்வாமிஜிக்கே இந்த ஏமாற்று வித்தை புரியலாயிற்று. பொருள் ஆசை அவருக்கில்லாவிடினும் அப் பொருளைக் கொண்டு தாய் நாட்டில் சமூக-சமய நிறுவனம் அமைக்க அவர் நோக்கம் கொண்டிருந்தார். எனவே, தம்மை ஒரு கருவியாக வைத்து ஏமாற்றிக் கொள்ளை லாபம் ஈட்டப்படுவதை அவரால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. சில காலத்துக்குப் பின்பு அவர் லெக்சர் பீரோவிலிருந்து விலகிக் கொண்டார். தமது சொந்த ஹோதாவிலேயே பிரசங்கங்கள் புரியலானார்.

அமெரிக்காவின் பொது மக்களிடம் மட்டுமின்றி, மதத் தலைவர்களில் பெரும்பான்மையினரிடமும் ஸ்வாமிஜி பெரு மதிப்பைப் பெற்றார். பத்திரிகைகள் அவர் சென்றவிடமெல்லாம் அவரை வானளாவப் புகழ்ந்தன. ஆனால் ஸ்வாமிஜியோ, 'பொது வாழ்க்கை ஒரு பிதற்றல், பத்திரிகைப் புகழ் ஒரு பிதற்றல்' என்றே எண்ணினார்; எழுதினார்.

ஸ்வாமிஜி எங்கு சென்றாலும் அங்குள்ள மக்கள் அவரை ஆழ்ந்து அறிய முயன்றது போலவே ஸ்வாமிஜியும் அந்த மக்களை அறிய முயன்றார். ஆத்மிகத்தை அமெரிக்காவுக்குத் தந்து அமெரிக்கரிடமிருந்து இந்தியாவுக்குப் பண உதவி பெற வேண்டும் என்ற கருத்தைப் பெற்றார். இன்றோ, நாம் ஆத்மிகத்தில் எதுவும் தராமலே மேல் நாடுகளிடமிருந்து பொருளாதார உதவி மட்டும் பெற முயன்று வருகிறோம்! இதற்கு ஸ்வாமி விவேகானந்தரையே முன்னோடியாக வேறு காட்டுகிறோம்!

ஸ்வாமி விவேகானந்தரின் பிரயாணத்தைப் பற்றிய எல்லாத் தகவல்களும் நமக்குத் தெரியவில்லை. தெரிந்தாலும் அவற்றையெல்லாம் விவரிக்க இடம் பற்றாது. ஆங்காங்கு எதிர்ப்புகள் இருந்தாலும் அவர் எங்கு சென்றாலும் அங்கு சீரும் சிறப்பும் பெற்று ஹிந்து தர்மத்தின் பெருமையை அமெரிக்க மக்களுக்கு உணர்த்தினார் என்பது சரித்திரபூர்வமான உண்மையாகும்.

அவரது பிரயாண - பிரசங்க விவரங்களில் சிலவற்றையேனும் இங்கு பார்ப்போம் — இனிப்புப் பண்டசாலையில் ஒரு சில பூந்திகளை ருசி பார்க்கும் பாவனையில்தான்!

அசத்தியத்தைக் கண்டால் ஸ்வாமிஜி எப்படிச் சினந்து எழுந்தார் என்பதற்கு மின்னியாபோலிஸில் அவர் நிகழ்த்திய ஓர் உரை சான்றாகும். தாம் எந்த நாட்டில் பேசினாரோ அந்த நாட்டினரையே கண்டித்து அவர் வீரமுடன் விளம்பினார்:

"கிறிஸ்துவராகிய நீங்கள் உங்களிடையே தான் கடவுள் இருப்பதாக எண்ணுகிறீர்கள்? அப்படிக் கடவுள் உங்களிடம் இருப்பாராயின் இவ்வளவு குற்றங்கள் இங்கு இருக்குமா? பத்தில் ஒன்பது பேர் போலிகளாக இருப்பீர்களா?''

இவ்வாறே அன்புடன், அன்பு தருகிற உரிமையுடன், அந்த உரிமை தருகிற நெஞ்சுரத்துடன் அமெரிக்க மக்களிடம் பேசிப் பேசி, பாதிரிமார்கள் இந்து மதத்தைப் பற்றி மிகவும் பழித்துப் பிரசாரம் செய்திருந்த இடங்களிலெல்லாம் ஸ்வாமிஜி அதற்கு வெற்றிப் பாவட்டா வீசிக் கொண்டு சென்றார். ஸ்வாமிஜி தவறான வழியில் மத மாற்றம் செய்யும் கிறிஸ்துவப் பிரசாரகர்களைத்தான் தாக்கினார். கிறிஸ்துவ சமயத்தைத் தாக்கவில்லை. மாறாக அதன் பெருமையைப் பெருமிதத்துடன் விளக்கினார்.

''கடவுளிடம் பயப்படுவது என்பதே மதத்தின் தொடக்கம்; கடவுளிடம் அன்பு கொள்வதே மதத்தின் முடிவு'' என்று மெம்ஃபிஸ் உரை ஒன்றில் குறிப்பிட்ட ஸ்வாமிஜி, கிறிஸ்துவ மதம், இந்து மதம் இரண்டும் இதனையே கூறுகின்றன என்றார்.

உயிரானது ஓர் உடல் விழுந்த பின் தனது கர்மத்துக்கு ஏற்ப வேறு உடலை அடைகிறது என்ற கொள்கையை—மேல்நாட்டினர் ஒப்பாத மறுபிறவிக் கொள்கையை—இன்னொரு நாள் மெம்ஃபிஸில் விளக்கினார் ஸ்வாமிஜி. பிறப்பில் நாம் காணும் ஏற்றத் தாழ்வுகளுக்கு இந்தக் கொள்கையே விடை பளிக்கிறதென்றும் என்றோ ஒரு நாள் — ஆனால் நிச்சயமாக— நம்முடைய வினையின் பயனை நாம் அநுபவித்துத்தானாக வேண்டும் என்ற இந்தக் கொள்கை மக்களை நல்வழிப் படுத்துவதில் மிகவும் சக்தி வாய்ந்தது என்பதையும் அமெரிக்கரின் உள்ளத்தில் பதியுமாறு விளக்கினார்.

உத்வேகம் ததும்பும் டெட்ராய்ட் நகரில் தான் ஸ்வாமிஜியைப் பூஜித்தவர்கள், தூஷித்தவர்கள் இருவரும் பெருமளவில் கலந்திருந்தனர். ஸ்வாமிஜியை எதிர்த்துக் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் மிகவும் காரசாரமான, விரசமான அபவாதப் போரைத் தொடங்கியது இங்குதான். ஸ்வாமிஜி 1894-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் டெட்ராய்ட்டில் பிரவேசித்த அன்று வீசிய பனிப் புயல் அவருடைய டெட்ராய்ட் வாழ்க்கைக்கே ஒரு பொருத்தமான முகவுரையாக இருந்தது. ஆனால் அந்தப் பனியில் கரையாத அறிவுக் கனலாக— பனியை இல்லாமற் செய்த அறிவுக் கனலாகவே திகழ்ந்தார் ஸ்வாமிஜி.

டெட்ராய்ட்டில் தம்மைப் பேட்டி கண்ட நிருபரிடம் ஸ்வாமிஜி, இதன்பின் பலமுறை வெளியிட்ட அற்புதமான கருத்தைக் கூறினார்: ''மேற்கும் கிழக்கும் இணைய வேண்டும்; சிம்மத்தின் சக்தியும் ஆட்டுக்குட்டியின் மென்மையும் இணைய வேண்டும்'' என்றார்.

சிம்மத்தின் சக்தியும், ஆட்டுக்குட்டியின் மென்மையும் நிரம்பிய ஸ்வாமிஜியிடம் பக்திப் பிச்சேறிய டெட்ராய்ட் மக்கள் பலர். அங்கு பள்ளி ஆசிரியையாக இருந்த மிஸ் குக் என்ற ஜெர்மன் மாது 'ஸ்வாமிஜியின் புனிதக் கையைக் குலுக்கியபின் என்னுடைய கையைக் கழுவிக் கொள்வதே மூன்று நாட்களுக்குத் தாங்கமுடியாத செயலாக இருந்தது' என்று கூறுகிறாள்.

விதவைகளையெல்லாம் இறந்த கணவனுடன் சேர்த்துப் பிடிவாதமாகக் கொளுத்துவது, குழந்தைகளை முதலையிடம் விட்டெறிவது, கல்லையும் கட்டையையுமே இறைவன் என்று நினைப்பது, புரிஜகந்நாதம் போன்ற க்ஷேத்திரங்களின் ரதத்தில் அறைபட்டுச் செத்தால் மோட்சம் கிடைக்குமென்றெண்ணி ஆயிரக் கணக்கான மக்கள் தேர்ச் சக்கரத்தடியில் விழுந்து மரிப்பது — இதுதான் இந்தியா என்று அமெரிக்கா எண்ணுமளவுக்குப் பாதிரிகளின் துஷ்பிரசாரம் நடந்திருந்தது. மக்கள் இவற்றைப் பற்றியே ஸ்வாமிஜியிடம் கேட்டார்கள். இந்த அபிப்பிராயத்தைக் கண்டு ஸ்வாமிஜி வெகுண்டெழுந்தார். அதன்மீது, அவரது எதிர்ப்பாளர்களும் வெகுண்டெழுந்தார்கள்.

என்றாலும், நாளுக்கு நாள் ஸ்வாமிஜியின் அன்பர்கள் அதிகமாகிக் கொண்டேதான் இருந்தனர். சில கிறிஸ்துவ மதத் தலைவர்களே ஸ்வாமிஜியைப் பெரிதும் ஆதரித்து, அவரது பிரசாரத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் எழுதினர். சிறப்புக்கள் நிறைந்த இந்து மதத்தினரைக் கிறிஸ்துவராக்குவது சரியல்ல என்ற அளவுக்கு இவர்கள் மனம் விட்டு எழுதினர்:

வள்ளுவர் பெருமான் கூறியதற்கேற்ப, சுடச் சுட ஒளிரும் பொன் போல, தாக்குதல்கள் அதிகமாக ஆக ஸ்வாமிஜியும் கனன்று ஜ்வலித்தார். அந்தப் பிரகாசம் மேலும் பலரை அவர்பால் ஈர்த்திழுத்தது.

இந்தியாவில் ஸ்வாமிஜி தொடங்க விருந்த இயக்கத்துக்காகப் பலர் நிதி வழங்கினர். 'அழகில் லக்ஷ்மியாகவும், சீலத்தில் சரஸ்வதியாகவும், திவ்விய மாதாவின் அவதாரங்களாகவும் விளங்குவதாக' அவர் குறிப்பிட்ட அமெரிக்கப் பெண்கள் பலர் அவருக்குப் பெருதவி புரிந்தனர். இதையெல்லாம் கண்டு எதிர்ப்பாளருக்கு வயிற்றெரிச்சல் உண்டாயிற்று. '' 'இவன் எங்கிருந்து ஒரு தொத்து வியாதியாக வந்து சேர்ந்தான்? இவன் நம்முடைய மதத்தையே வேரோடு கெல்லி விடுவான் போலிருக்கிறதே' என்று என்னைப் பற்றிப் பலர் கூறுகிறார்கள்'' என்று ஸ்வாமிஜி எழுதியிருக்கிறார்!

கிறிஸ்துவ நாடுகளில் கிறிஸ்துவ ஆசாரங்களைக் கெல்லுவது நமது அபிப்பிராயம் அல்லவே அல்ல வென்றும், கிறிஸ்துவர்கள் இந்துக்களின் ஆ சா ர ங் க ளைக் கெல்ல முயல்வதையே நாம் தடுப்பதாகவும் அவர் மொழிந்தார்.

''கிறிஸ்துவின் உண்மையான பிரசாரகர்களை இந்தியா வரவேற்கிறது. கிறிஸ்துவின் வாழ்க்கையை எங்களுக்கு வழங்குங்கள். எங்கள் சமூகத்தின் ரத்தத்தில் அதனை கலக்கச் செய்யுங்கள். ஆனால் இந்து தர்மத்தை அழித்துக் கிறிஸ்துவத்தைப் பரப்பாதீர்கள்'' என்று அடித்துச் சொன்னார் ஸ்வாமிஜி.

''இந்தியாவைக் கிறிஸ்துவ நாடாக்க முடியும் என்று நீங்கள் எண்ணினால் அது நிச்சயம் நடவாது'' என்று அழுத்தம் திருத்த

மாகக் கூறினார்: ஆகா, அந்த வாக்கைத் தமது வாழ்க்கையால் எவ்வளவு சிறப்பாக நிரூபித்து விட்டார்! ஸ்வாமிஜியின் அவதாரம் மட்டும் நிகழாதிருந்தால் இன்று நாமெல்லாம் ஹிந்துக்களாக இருப்போமா?

''ஹிந்து மதத்தில் மூட நம்பிக்கைகள் உண்டு. ஆனால் மூட நம்பிக்கை மட்டுமே ஹிந்து மதம் அல்ல. அது சரி, உங்களுடைய மதத்தில் மூடநம்பிக்கைகளே கிடையாதா?'' என்று துணிவாகக் கேட்டார் ஸ்வாமிஜி.

தைரியமாக எதிர்க்கச் சக்தியற்ற நயவஞ்சகரிடமும் ஸ்வாமிஜி சிக்கிக் கொண்டதுண்டு. டெட்ராய்ட்டில் இப்படிப்பட்ட வஞ்சகர்கள் ஸ்வாமிஜிக்கு ஒரு விருந்து நடத்தினார்கள். ஸ்வாமிஜி விருந்தில் வைத்திருந்த காப்பியைப் பருக எடுத்தார். அதை அவர் வாயருகே கொண்டு போகும் போது திடீரென குருமஹராஜின் திருஉருவம் அவர் முன் தோன்றியது. ''குடிக்காதே. அதில் விஷம் கலந்திருக்கிறது'' என்றார் அவர்.

ஸ்வாமிஜி காப்பாற்றப்பட்டார்!

ராமகிருஷ்ணானந்தருக்கு ஸ்வாமிஜி எழுதிய கடிதத்தில், ''ஆசாரியர் என்னுடனேயே இருக்கிறார்! என்னை யார் என்ன செய்துவிட முடியும்?'' என்று கேட்கிறார். ''சாவு என்பது நிச்சயமானபோது, நல்ல காரியமொன்றுக்காகத் தன்னையே தியாகம் செய்து கொள்வது சிலாக்கியம்தானே?'' என்கிறார்.

ஸ்வாமிஜி அமெரிக்காவில் தமது அன்புக் கிளைகளைப் பரப்பிக் கொண்டே இருந்த போதிலும் இந்திய சிந்தனையில்தான் அவரது மனசு ஆழ ஆழ வேர் ஊன்றிக் கொண்டிருந்தது.

அமெரிக்காவை ஆத்மிகத்தில் காப்பதை விட, பாரதத்தைப் பொருளாதாரத்தில் காப்பதே அப்போது ஸ்வாமிஜிக்குப் பிரதான லட்சியமாக இருந்தது என்று 'புதுவிவரங்கள்' எழுதியுள்ள பர்க் கருதுகிறார்.

பாரத மக்களின் பணிக்கு நிலையம் அமைப்பதற்காகத் திரவியம் வேண்டியே அவர் உடலைத் திருணமாகக் கருதி, சற்றும் ஓய்ச்சல், ஒழிவு இன்றிப் பிரசங்கங்கள் புரிந்து வந்தார். ''பிரசங்கங்கள் செய்வதற்காக நான் பலமுறை பயங்கரமான குளிர்காலத்தில் பனிமூடிய மலைகளையெல்லாம் கடந்து சென்றிருக்கிறேன். இரவு ஒரு மணி, இரண்டு மணி என்றும் பாராமல் பிரயாணம் செய்திருக்கிறேன்'' என்று ஸ்வாமிஜி எழுதியிருக்கிறார்.

இதனாலேயே அவரது கட்டுமஸ்தான உடலும் ஆரோக்கியம் குன்றத் தொடங்கியது. அம்பிகையின் சித்தம்தான் எவ்வளவு புதிராக இருக்கிறது! பவளமல்லிகையை மலர்த்தி மகிழ்விக்கும்போதே, அது எப்போது வாடி விடுமோ என்று மனம் கலங்கவும் செய்கிறாள் அவள்! விவேகானந்தரைப் பெற்றதற்காக உலகம் எப்போது பூரிக்கத் தொடங்கியதோ, அப்போதே அவரை எப்போது இழக்க நேருமோ என விசனிக்கவும் செய்து விட்டாள் தேவி.

நற்பணிக்காக ஆன்மத் தியாகம் செய்வது பற்றி எழுதிய ஸ்வாமிஜி அதைத் தாமே நிரூபிக்கத் தொடங்கிவிட்டார்.



''என் நகைகள் எல்லாவற்றையும் யாரோ வந்து பிடுங்குவதாகச் சொப்பனம் கண்டேன். திடுக்கிட்டு விழித்துக் கொண்டு பார்த்தால் கழுத்திலும் கையிலும் நகை ஏதும் இல்லை. நடந்தது நிஜம்தானோ என்று பீதியடைந்தேன். என் அருமைக் கணவர் சொல்லிச் சிரித்தார் சமாதானமாக, 'அது வெறும் சொப்பனம்தான். நிஜ வாழ்க்கையில் உனக்கு ஏது நகை!' என்றார்.''

1894ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒருமுறை ஸ்வாமிஜி சிகாகோவுக்குத் திரும்பினார்.

அப்போது வேறொரு பிரபல புள்ளியும் சிகாகோவுக்கு வந்திருந்தது. ஸ்வாமிஜி மக்களைக் கவர்கிறார் என்றால் இந்தப் புள்ளியும் மக்களைத் தன் நிலையில் பித்தாக்கிக் கொண்டிருந்தது. ஆனால் ஸ்வாமிஜி எந்தத் துறையில் மக்களைக் கவர்ந்தாரோ அதற்கு முற்றிலும் மறு திசையில் இந்தப் புள்ளியின் ஆகர்ஷணம் இருந்தது. எம்மா கால்வி என்ற புகழ் பெற்ற நாடக நக்ஷத்திரம்தான் அந்தப் புள்ளி. ஏற்கனவே பெரும் புகழ்பெற்றிருந்த எம்மா கால்வி சமீபத்தில் ஐரோப்பாவுக்குச் சென்று ஒளியின் உச்சியில் சிகாகோவுக்குத் திரும்பி வந்து சேர்ந்திருந்தாள்.

அவளது மேடை வாழ்வு ஜாஜ்வல்யமாக இருந்தாலும் பிரத்தியேக வாழ்வு இருள் மயமாகக் கிடந்தது. இதற்கு அவளது இயல்பான நரம்புத் தளர்ச்சியும், பிடிவாத குணமும் ஒரு காரணம். இரண்டாவது, அவளுடைய தொழிலிலுள்ளவர்கள் பெரும்பாலும் எத்தகைய வாழ்க்கையை வாழ்வார்களோ— எத்தகைய வாழ்க்கையைத்தான் வாழ முடியுமோ — அத்தகைய வாழ்வையே எம்மா கால்வி வாழ்ந்தாள். மூன்றாவதாக, அவளுடைய ஒரே ஆறுதலாக இருந்த அருமை மகளும் சமீபத்தில் ஒரு தீ விபத்தில் மரணமடைந்திருந்தாள்.

வாழவே முடியாமல் தவித்த கால்விக்குத் தற்கொலையே தேவலை என்று தோன்றியது.

இச்சமயத்தில் அவளுடைய சிநேகிதி ஒருத்தி ஸ்வாமி விவேகானந்தரின் அருள் கோலத்தைக் கால்வியிடம் வர்ணித்தாள். ''சஞ்சலிக்கிற உன் உள்ளம் அவரால் சாந்தி பெறும். அவரை அடைந்து வழி கேள்'' என்றாள். ஆனால் புனிதம் மிக்க ஒருவனைத்

நான் பார்ப்பதா என்று எவ்வளவோ என்னவோ கால்வி மறுத்து வந்தாள்.

ஸ்வாமிஜியைப் பார்க்கத் துணிவுபெறாத கால்விக்குத் தற்கொலை செய்து கொள்ளத் துணிவு ஏற்பட்டது. மிசிகன் ஏரியில் விழுந்து பிராணனைவிட முடிவு செய்தாள். கோடானு கோடி மக்கள் எந்த உடம்பைக் கண்டு பித்தேறிக் கிடந்தார்களோ அந்த உடம்பை ஏரியில் விடுவதற்காகக் கிளம்பினாள்.

கிளம்பினாளாவது? அவள் எங்கே கிளம்பினாள்? ஏரியில் உடம்பைவிட 'உத்தேசித்தாள்' என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். உத்தேசம் இவ்வாறானாலும் அவளுடைய கால்கள் அந்த உத்தேசத்தை நிறைவேற்றி வைக்கத் தயாராக இல்லை.

அதை மாயம் என்பதா, மந்திரம் என்பதா, இல்லாவிடில் மாய மந்திரங்களுக்கு மேம்பட்ட அன்பின் சக்தி என்பதா? ஏரிக்குச் செல்லவேண்டும் என அவள் உத்தேசித்திருக்க அவளது கால்களோ பிடிவாதமாக வேறொரு சாலையில் சென்று கொண்டிருந்தன. 'ஆஹா, ஸ்வாமி விவேகாநந்தர் இருக்கிற சாலையல்லவா இது?'

ஒரு முறை மட்டுமல்ல; இரண்டாம் மூன்றாம் முறைகள் அவள் ஏரிக்குப் புறப்பட்ட போதும் அவளது கால்கள் ஸ்வாமிஜி தங்கியிருந்த சாலையிலேயே சென்றன.

நாலாம் முறையும் இப்படி மெஸ்மெரிஸத்தின் கீழ் நடப்பவளைப் போலச் சென்ற கால்வி விவேகாநந்தர் வசித்த வீட்டு வாசலிலேயே தான் வந்து நிற்பதை உணர்ந்தாள். உள்ளே சென்றாள். ஆழமான ஒரு நாற்காலியில் நன்றாக அமர்ந்தாள். எல்லாமே ஏதோ கனவு காண்பது போலிருந்தது.

அப்போது கனவைக் கலைத்துக் கொண்டு பக்கத்து அறையிலிருந்து தேன் சொட்டுகிற ஒரு இனிமையான குரல் கேட்டது. ''என் குழந்தே! இங்கே வாம்மா! பயப்படாமல் வா அம்மா'' என்று அவளை அழைத்தது.

முடுக்கிவிட்ட இயந்திரம் போல் கால்வி உடனே எழுந்திருந்து அந்த அறைக்குள் சென்றாள்.

விவேகாநந்தர் அங்கு அமர்ந்திருந்தார்.

தியான நிலையில் இருந்தபடியே 'வாம்மா' என்று அவர் அழைத்திருந்தார் என்பது அவருடைய கமலக் கண்கள் தரை மீதாகப் பதித்திருப்பதிலிருந்து தெரிந்தது.

க்ஷணகாலத்துக்குப் பின் தலையைத் தூக்கிக் கால்வியைப் பார்த்தார் விவேகாநந்தர். இப்படியும் ஒரு பார்வையா? ஆஹா, என்ன அருள் பொழிவு?

''என் மகளே, ஏன் இப்படிக் கிடந்து தத்தளிக்கிறாய்? எவ்வளவு வேதனைகளை இழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறாய்? அமைதியாக இரு மகளே, அமைதியாயிரு. சாந்தம் தான் தேவை.''

கால்வி யார் என்பதுகூடத் தெரிந்திராத ஸ்வாமிஜி இவ்வாறு கூறியதும் அவளுக்குப் பேராச்சரியமாயிற்று.

துஷிராகக் குளிர்விக்கும் குரலில் ஸ்வாமிஜி பேச்சைத் தொடர்ந்தார். தம்மிடமே பேசிக் கொள்வதுபோல அவளுடைய வாழ்க்கையின் சகல மர்மங்களையும், சிக்கல்களையும், துயரங்களையும் சொல்லிக் கொண்டு போனார்.

''ஸ்வாமி, தங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது? என்னைப் பற்றித் தங்களிடம் யாரேனும் பேசியதுண்டா? ஆனால் எனக்கு அந்தரங்கமானவர்களிடம்கூட நான் இவ்விஷயங்களை யெல்லாம் சொன்னதில்லையே?'' என்றாள் கால்வி.

கால்வியை நோக்கிச் சாந்த மென்னகை புரிந்தார் விவேகாநந்தர். அசட்டுக் கேள்வி கேட்கும் குழந்தையை நாம் எப்படிப் பார்ப்போமோ அப்படி அவளைப் பார்த்தார்.

''யாரும் உன்னைப் பற்றி என்னிடம் பேசியதில்லை'' என்று கூறிய ஸ்வாமிஜி குரலைத் தணித்து, ''அது அவசியமென்று நினைக்கிறாய்? திறந்து கிடக்கும் ஒரு புத்தகத்தைப் படிப்பது போல உன்னிலேயே உன் கதையைப் படிக்கிறேன்'' என்றார்.

''எல்லாவற்றையும் நீ மறக்க வேண்டும். சந்தோஷத்தையும், குதூகலத்தையும் உண்டாக்கிக் கொள். தேக ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள். தனியாயிருக்கும் போதெல்லாம் துயரத்தையே எண்ணி வாடாதே. உன் உணர்ச்சிகளை இடைவிடாமல் ஏதேனும் ஒரு விதத்தில் திருத்தி வெளியிட்டுக் கொண்டே இரு. உன்னுடைய கலை இதைத்தான் கோருகிறது'' என்று ஸ்வாமிஜி கால்வியிடம் ஒரு தந்தைக்குரிய பிரியத்துடனும், அநுதாபத்துடனும் கூறினார். தந்தை யாதும்கூடப் புரிந்து கொள்ள முடியாத அவளுக்கு அவளது உள்ளுணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு, உணர்ச்சிகளைச் செம்மைப்படுத்தி வெளியிடக் கலை எவ்வளவு சிறப்பான சாதனம் என்பதையும் உணர்த்தி விட்டார்.

ஸ்வாமிஜி பேசப் பேசக் கால்வியின் தவிப்பு எவ்வாறோ அடங்கலாயிற்று. வறண்ட பாலைவனத்தில் நீர் ஊறுவது போல், ஏதோ ஒன்று அவளது இதயத்தில் இதமாகப் பாயலாயிற்று. 'அவர் என்னுடைய மனத்திலிருந்த தங்கும் சிக்கல்களை யெல்லாம் கொட்டிக் கவிழ்த்து, அதனைக் காலி செய்து விட்டுப் பின்னர் தமது சுத்தமான சாந்த சிந்தனைகளை அதில் நிரப்புவது போல இருந்தது'' என்று கால்வி எழுதியிருக்கிறாள்.

'அவர் ஹிப்நாடிஸம் செய்யவில்லை; மெஸ்மெரிஸம் செய்யவில்லை. அவருடைய சீரிய நடத்தையும், நோக்கத்திலிருந்த தூய்மையும், தீவிரமுமே என்னை அவரது வார்த்தைகளில் ஆழப் பதித்து விட்டன. நான் மீண்டும் உயிர்த் துடிப்புடனும், மகிழ்ச்சியுடனும் வாழலானேன்' என்கிறாள் கால்வி.

ஸ்வாமிஜி நாடகக்காரியான எம்மா கால்வியின் துயர் துடைத்ததைப் படிக்கும் போது, கௌதம புத்தர் அம்பா பாலிக்கு அருள் புரிந்ததும், இயேசுநாதர் மேரி மக்தலீனுக்குக் கருணை ஸ்நானம் செய்ததும் நினைவு வரவில்லை?

கலை உலகில் பெரும் கியாதி பெற்ற கால்வியைக் கண்டது போலவே தொழில் உலகில் அழியாப் புகழ் கொண்ட ஜான் டி. ராக்கபெல்லரையும் ஸ்வாமிஜி சிகாகோவில்

காஷ்மீர் போக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்



உன்னதமான காஷ்மீர் போக்கே யின் தரம், ஒரு அழகுசாதன டால்க்... ஒரு குழந்தைக்கான பவுடர் இவ்விரண்டையும் அளிக்கிறது.

காஷ்மீர் போக்கே டால்க்கின் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தை நீங்கள் உணரும்பொழுது ஒரு பூச்செண்டிற்குள் இருப்பது போலவே தோன்றும். உடல் முழுவதும் தடவிக் கொண்டு அதன் ஊற்றுப்பெருக் கென எழும் புதிய நறுமணத்தில் திளைத்து மகிழுங்கள்



குழந்தையை இதமுடனும் சுகமுடனும் வைத்திருங்கள். காஷ்மீர் போக்கே, எந்த ஒரு விசேஷ குழந்தைக் கான பவுடரைப் போலவே, மிருதுவும் பட்டுப்போன்றது மானது. நீங்கள் இருவருமே உபயோகிக் கக்கூடிய அவ்வளவு சௌகரியமான ஒரே பவுடர்!

காஷ்மீர் போக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

கண்டு வியப்படைந்ததாக நம்பப்படுகிறது. பார்க்கின் 'புதுவிவரங்க'ளில் இச்சம்பவம் கூறப்படுகிறது.

ராக்கஃபெல்லரின் நண்பர்களில் சிலர் ஸ்வாமிஜியின் உரைகளுக்கு வருவதுண்டு. இவர்கள் ராக்கஃபெல்லரையும் தங்களுடன் வருமாறு அழைத்தனர். அவர் எக்காரணத் தாலோ மறுத்தே வந்தார்.

ஆனாலும் ஒரு நாள் தாமே அறியாத ஒரு வேகத்தில் அவர் ஸ்வாமிஜி தங்கியிருந்த இல்லத்துக்கு வந்தார். கதவைத் திறந்த பட்லரை ஒரு தள்ளுத் தள்ளிக் கொண்டு, 'நான் அந்த ஹிந்து சாதுவைப் பார்க்கப் போகிறேன்' என்று கூறியபடி திடும்பிரவேச மாக நுழைந்தார். எடுத்ததற்கெல்லாம் 'கர்ட்டிஸி'யை எதிர்பார்க்கும் அமெரிக்கா வில், பெரும் தனவந்தரொருவரிடம், சற்றும் எதிர்பார்க்க முடியாத செய்கை இது!

ஸ்வாமிஜி இருந்த அறைக்குள்ளேயே புயல் காற்று போல் சென்றார் ராக்கஃபெல்லர். ஸ்வாமிஜியோ இதனால் சற்றும் நிலை குலை யாது, தம் கண்ணைக்கூட உயர்த்தாமல் அமர்ந்திருந்தார்.

சுணை காலம் சென்றது. கால்வியிடம் கூறியது போலவே ராக்கஃபெல்லரின் அந்த ரங்க வாழ்க்கையையும் ஸ்வாமிஜி கூற லானார்.

''நீங்கள் சேர்த்துள்ள பெருஞ் செல்வம் உங்களுடையதல்ல. மக்களுக்குப் பாய்ச்சுவ தற்காகச் செல்வத்தை எடுத்துச் செல்லும் ஒரு வாய்க்கால்தான் நீங்கள். மக்களுக்கு நீங்கள் நன்மை செய்ய ஒரு வாய்ப்பாகவே ஆண்டவன் உங்களுக்கு இவ்வளவு செல்வத்தை அளித்திருக்கிறான்'' என்று ஸ்வாமிஜி ராக்கஃபெல்லரிடம் கூறினார்.

அவர் இப்படி உபதேசித்தது ராக்கஃ பெல்லருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. எரிச்ச லடைந்த அவர், 'குட் பை' கூடச் சொல் லாமல், வந்தது போலவே வேகமாக வெளி யேறிச் சென்றார்.

ஒரு வார காலம் சென்றது.

மறுபடியும் முன்னறிவிப்பு இல்லாமலே ராக்கஃபெல்லர் ஸ்வாமிஜியின் இருக்கைக்கு வந்தார்.

முன் போலவே ஸ்வாமிஜி அவரை ஏறிட்டும் பாராமல் சிறு நோக்குடன் அமர்ந் திருந்தார்.

ராக்கஃபெல்லர் தாம் கொண்டு வந்திருந்த ஒரு காகிதக் கட்டை ஸ்வாமிஜியின் முன் பிருந்த மேஜை மீது போட்டார்.

''தான தர்மங்கள் செய்வதற்காக நான் போட்டுள்ள திட்டமே இது. நீங்கள் இப் போது திருப்தி அடைந்து என்னிடம் நன்றி சொல்லலாம்'' என்றார்.

சில விநாடிகள் ஸ்வாமிஜி சிலை போல அமர்ந்திருந்தார். புருவத்தைக் கூட உயர்த்த வில்லை. பிறகு அந்தக் காகிதத்தை எடுத்துச் சாவதானமாகப் படித்தார். ராக்கஃபெல் லரை நோக்கி ''நீங்கள்தான் என்னிடம் நன்றிசொல்ல வேணும்'' என்று மிருது வாகக் கூறினார்.

இந்தச் சம்பவத்தை அறுதியிட்டு உறுதிப்படுத்த முடியவில்லை என்றும், எனி னும் ஸ்வாமிஜி சிகாகோவில் இருந்த சமயத் தில்தான் ராக்கஃபெல்லர் தமது தானதர்மப் பணியைத் தொடங்கினார் என்றும் பார்க் எடுத்துக் காட்டுகிறார். (தொடரும்)



சில சரக்கு

✓ உலகில் எந்த அரசியைப் பற்றி மக்கள் மிக அதிகமாகப் பேசியிருக்கிறார்கள்? உலகில் எந்தத் திரைப்படத்தைப் பற்றி மக்கள் மிக அதிகமாகப் பேசியிருக்கிறார்கள்? இரண்டுக்கும் ஒரே பதில்தான்—கிளியோபாட்ரா. படத்தில் காதலர்களாக நடித்த ரிச்சர்ட் பர்டனும் எலிஸபெத் டெய்லரும் அசல் வாழ்க்கையிலும் காதலித்தார்கள். அந்தக் காதல் திருமணத் தில் முடிய இருந்த தடை நீங்கி விட்டது. சமீபத்தில் எலிஸபெத் டெய்லருக்கு விவாகரத்து கிடைத்து விட்டது. ரிச்சர்ட் பர்டனை மணந்து கொண்டாலொழிய 'இந்த நூற்றாண்டின் கிளியோபாட்ரா' என்ற பட்டத்தை எலிஸபெத் இழந்துவிட வேண்டியதுதான் என்ற அவள் விசிறிகள் தோல்வியை ஒப்புக்கொண்டு புதுமணத் தம்பதிகளுக்குத் தங்கள் நல்வாழ்த்துக்களைக் கூறுகின்றனர்.

✓ நம் நாட்டு சினிமா நட்சத்திரங்கள் சோப்பு, பவுடர் போன்றவற்றை விளம்பரப் படுத்துவதைப் பத்திரிகைகளிலும் சினிமாவிலும் காண்கிறோம். ஆனால் மேலநாடுகளில் ஏற்றுமதியை அதிகரிக்கத் தேசிய உணர்ச்சியுடன் பெரிய அளவில் வெள்ளித்திரை நட்சத் திரங்களின் பிரசாரம் நடக்கிறது. உலகின் மிகப் பெரிய வியாபார ஸ்தலங்களுள் ஒன்றான ஹாங்காங்குக்கு இத்தாலியிலிருந்து ஜீனா லாலோபிரிஜிடாவும் பிரான்ஸிலிருந்து மைலீன் டெமாஞ்ஜியாட்டும் வந்து தங்கள் தங்கள் நாட்டுப் பொருள்களை அதிகமாக வாங்குமாறு தீவிரப் பிரசாரம் செய்தார்கள்.

✓ நியூயார்க்கில் நாய்களை 'வாக்கிங்' அழைத்துப் போகும் தொழிலை மேற் கொண்ட ஒருவர் அத்தொழிலில் மாதம் மூவாயிரம் ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கிறார்!

சனிக்கிழமை. பிற்பகல் நேரம்; சாரு சாமான்கள் வாங்கி வர வெளியே போய் விட்டாள். நாராயணன் நாற்காலியில் உட்கார்ந்து செய்தித்தாளைப் புரட்டிக் கொண்டிருந்தான். மனம் படிப்பில் இல்லை. ஜன்னல் சட்டத்தில் உட்கார்ந்து 'ட்விக் ட்விக்' என்று கத்தும் குருவியின் சத்தம். வாசற் கதவருகே நறுக்கினாற் போல் வெளிச்சத்தை மறைத்துக் கொண்டு நிழல் தெரிந்தது. திரும்பிப் பார்த்தான். ஒரு பையன் நின்று கொண்டிருந்தான்.

பம்மென்று பக்கவாட்டில் விம்மிய கிராப்பு. வளையம் வளையமாகச் சுருண்ட தலைமயிர். நடனமாடுகிற வெள்ளைக்காரிகள், குடை, பலூன், விமானம் எல்லாம் அச்சிட்ட வர்ண பனியன். காக்கி அரைக்கால் சட்டை. பனியனுக்குள்ளிருந்து சங்கிலி எட்டிப் பார்த்தது. பையன் தலையைக் குனிந்து, "அம்மா இல்லீங்களா?" என்று கேட்டபோது.

"நீ யார்?"

"அம்மா கடைக்கு வந்திருந்தாங்க, ரெண்டு நாளைக்கு முன்னாலே. ஸ்டவ் ரிப்பேர்னு சொன்னாங்க. பார்த்திட்டுப் போவலாம்னு வந்தேன்."

உண்மையாகவே ஸ்டவ் ரிப்பேர்தான். ஒரு வாரமாகவே சாரு அதை வைத்துக் கொண்டு குடைந்து கொண்டிருந்தாள். காற்று அடித்தால் ஏறுவதில்லை. சரியாக எரிவதில்லை. எண்ணெய் தெறிக்கிறது; ரசத்தில், காப்பியிலும்கூட செண்ட் போட்ட மாதிரி இலேசாக மண்ணெண்ணெய் வாசனை. உள்ளே போய் ஸ்டவ், ஸ்பிரிட், மண்ணெண்ணெய் புட்டி, நெருப்புப் பெட்டி எல்லாவற்றையும் கொண்டு வந்தான். பையன் கீழே உட்கார்ந்து கையில் கொண்டு வந்திருந்த மரப் பெட்டியைத் திறந்து வைத்துக் கொண்டான். ஸ்பானர், ஊசி, கறுப்புக் கந்தல் துணி, அட்டையில் கத்திரித்த வாஷர்—இப்படி கடை பரப்பியாயிற்று. நாராயணன் நாற்காலியை எதிரே இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

ஸ்டவ்வைக் கழற்றிக் கொண்டே பையன் சொன்னான். "நான் ஐயாவைப் பார்த்ததில்லே. ஆனால் அம்மா அடிக்கடி கடைக்கு வரும்; ரெண்டு வருசமா எனக்குப் பழக்கம்; நல்ல மாதிரி."

சாருவைப் பற்றி அவன் அப்படிச் சொன்னது பெருமையாகத்தான் இருந்தது அவனுக்கு. அவளைப் பற்றி எல்லாருமே அப்படித்தான் சொல்வது வழக்கம். மீந்த பதார்த்தங்களை எடுத்துக் கொண்டு போகும் வேலைக்காரக் கிழவி; இரண்டாவது விலை கேட்காமல் சில்லறையைக் கொடுத்ததும் வாங்கிக் கொண்டு இஷ்டப்படி நிறுத்துப் போடும் கறிகாய்க்காரன்; பால் எப்படி இருந்தாலும் குறை கூறாமல் முதல் தேதிக்கு முன்னாலேயே பணத்தைக் கொடுத்ததும் வாங்கிக் கொண்டு போய் விடும் சைக்கிள் பையன்; எல்லாருமே அவளுக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கத் தயார். விட்டுக் கொடுத்துப் போகிறவர்களுக்கு என்றைக்குமே நல்ல பெயர்தானே?

"அம்மாவுக்கு ஒரு கால் அடுப்பு வாங்கிக் கொடுக்கிறதுதானுங்களே?" என்று நிமிர்ந்தான் பையன். மயிர்ச் சுருள் வளையமாய் ஆயிற்று. என்ன விஷயம்? எதற்காக அடி போடுகிறான் இப்படி?

"எதற்காகவாம்?"

"சமையலுக்குச் சௌகரியம்; அம்மா அடிக்கடி சொல்லும், வீட்டில் வேலை ஜாஸ்தின்னு."

"உங்க கடையிலே அதுவும் வியாபாரம் வச்சிருக்கீங்களா?"

"அதுக்காகச் சொல்லலீங்க; பொதுவாகச் சொன்னேன்" என்று அவன் காவிப் பல் தெரியச் சிரித்துக் கொண்டான். "அம்மாவுக்குக் கொஞ்சம் சுளுவா வேலை செய்யறதுன்னு பிரியம். கடையிலே புதுசா வந்ததை யெல்லாம் பார்ப்பாங்க."

நாராயணன் பத்திரிகையை மடித்து மடியில் போட்டுக் கொண்டான். சாருவைப் பற்றி இந்தப் பையன் என்னவெல்லாமோ தெரிந்து வைத்திருக்கிறான். விஷயம் புதியது அல்ல; ஆனால் அவன் பார்வையிலிருந்து அந்தக் கோணத்திலிருந்து அவளைப் பார்க்கும் தோற்றம் புதுமையாக இருந்தது; கொஞ்சம் ஸ்வாரஸ்யமாகவும்கூட.

"அம்மா அடிக்கடி கடைக்கு வருவாங்களா?" என்று கேட்டான் நாராயணன்.

"ஓ! பதினொரு மணிக்கு மேலே கடையிலே அவ்வளவு வேலை இருக்காது. அப்போ அந்தப் பக்கம் வந்தால் வருவாங்க. கடையிலே வைச்சிருக்கிற பண்டங்களிலே பூரால் வேலே; பினான்



டிக் கூடை, பூத்தையல், மணிப்பை, இப்படிப் பொட்டிக்கிட்டே இருக்கும். பொழுது போவுறதும் இல்லீங்களா?''

சாருவுக்குப் பொழுது போகவில்லை என்று சொல்ல முடியாது. ஓரளவு அவளை வேலை வாங்கி விடக் கூடிய வீட்டுக் காரியங்கள். அனு பிறந்து இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டன. அவளைக் கவனிப்பது முதலெல்லாம் ஒரு சுவாரசியமான பொழுது போக்கு அவளுக்கு. இப்போது கொஞ்சம் சிரமமான வேலை. குழந்தை செய்கிற விஷமம் அதிகம். கொட்டின எண்ணெய்க் கறை, உடைத்த பாட்டில், நசுங்கிய பொம்மை, கிழிந்த புத்தக அட்டை, எல்லாம் அதற்குச் சாட்சி. சில நாட்களில் மயிலாப்பூரிலிருந்து அவள் தங்கை வந்து எடுத்துக் கொண்டு போய் விடுவாள். இரண்டு நாட்களுக்கு வீடு சத்தமில்லாமல் இருக்கும். ஆனால் அதுவும் அவளுக்குப் பிடிக்காது. அப்படி நேரம் தேங்குகிற வேளையில் போட்ட பூத்தையல், ஜிப் வைத்த மணிப்பை, கம்பிக் கூடை எல்லாம் ஜன்னல் புறமாக ஷெல்பில் இருந்தன: கண்ணில் பளிச்சென்று விழுகிற மாதிரி. அந்தக் கடை வியாபாரமாகத்தான் இருக்கும்.

''ஒங்க கடையிலே வேறே என்ன வைச்சிருக்கீங்க?''

பையன் வாஷரைக் கழற்றி விட்டு எண்ணெய்த் துவாரத்தில் வாயை வைத்து ஊதிக் கொண்டிருந்தான். நிமிரும்போது மூக்கு நுனியில் கறுப்புக் கீற்று தெரிந்தது. புறங்கையால் தேய்த்து விட்டுக் கொண்டான்.

''நம்ப கடை ஷாப்புதான். பக்கத்துக் கடையும் மொதலாளி வைச்சிருக்கிறதுதான். அங்கே துணி வியாபாரம்.''

''அங்கேயும் அம்மா போவுமா?''

''போவும். அம்மாவுக்குத் துணி நிறுகளில் கொஞ்சம் ஆசை. சாஸ்தி வாங்காட்டியும்கூட டக்கா புரல் பண்ணிக்கணும், மாட்சா செருப்பு, வளை யெல்லாம் போட்டுக்கணும்னு சொல்லுவாங்க. காலேஜுக்குப் போக பஸ் ஸ்டாண்டுக்கு வரும் பெண்களைப் பார்த்தா எனக்கும்கூட அம்மா சொல்றது சரின்னு படும். அம்மா காலேஜிலே படிச்சாங்களா ஐயா?''

''ஆமாம்.''

''வேலைக்குக் கூடப் போறாங்களா?''

''ரெண்டு வருஷம்.''

சாரு தன் உடைகளில் அவ்வளவு அக்கறை செலுத்தியது அவனுக்குத் தெரியாது. ஆனாலும் அவளுக்குப் பாங்காக உடுத்திக் கொள்ளப் பிடிக்கும். சிவப்புச் சோளியும் அதற்குத் தகுந்தபடி ரோஜாப் பூப்போட்ட நைலான் புடவையும் அணிந்து கொண்டு கண்ணாடிக்கு முன்னால் நிற்கும் போது, அவன் விஷமமாகக் கிள்ளுவது விரல்களின் பிடியில் நிற்காது. அவள் சிரிப்பாள். ''உங்களுக்குப் பிடித்த டிரஸ் இல்லையா?'' என்று தலையை அசைத்துக் கொண்டு கேட்பாள்: அந்த நறுக்கு மூக்கைக் கடிக்கத் தோன்றும். கிட்டே வந்து பார்க்கும் போது புதிது புதிதாகத் தோன்றுகிற அழகு.

அவளுடைய உடுப்புகளைத் நிறுக இறுசாக அடுக்கி வைத்துக் கொள்வாள். அவனுக்குத் தெரியும்: அவள் கல்லூரியில் போட்டுக் கொண்ட பஞ்சாபி பாணி உடை. கமீஸ்— அதைக்கூட இன்னும் பத்திரமாக வைத்திருக்கிறாள். ஒரு நாள் அனு பெரியவளானால் போட்டுக் கொள்வாளோ என்னவோ? அவன் பார்த்ததில்லை; கமீஸும் ஒட்டின காலுறையுமாக இரட்டைப் பின்னலோடு அவள் நிற்கும் காட்சி அவன் கற்பனையில் விரிந்ததுதான்.

வேலைக்குப் போகும் போதெல்லாம் மடிப்புக் கலையாத உடைதான். அவனே தோய்த்துக் கஞ்சி போட்டு எதிர்க் கடையில் இஸ்திரி செய்து கொண்டு வந்து விடுவான். அவன் கை விஷமமெல்லாம் பலிக்காது. அவளுக்கு உடை கசங்கினால் கொஞ்சம்கூடப் பிடிக்காது: மாலையில் வீடு திரும்பும் போது கூடத் துளிக் கலையாத பாங்கான உடை. அது உடுத்துக் கொள்ளும் லாகவமா? அவள் உருவ அமைப்பின் சோபிதமா? அவன் தனக்குள்ளேயே வியந்து கொள்வான்.

அனு பிறந்தபின் அவள் வேலைக்குப் போவது நின்று விட்டது. குழந்தை செய்கிற அமர்க்களத்தில் தன்னைக் கவனித்துக் கொள்ளும் அக்கறையும் மழுங்கி விட்டது போலத் தோன்றியது. எப்பொழுதாவது அவனுடன் வெளியில் கிளம்பும் போதுதான் கொஞ்சம் தீவிரமாக இருப்பாள். மனத்துக்குள் அது அவளுக்குக் குறையோ என்னவோ? பையன் சொல்வதைப் பார்த்தால் அவள் ஆசைகள் இன்னும் மங்கவில்லை என்று தெரிந்தன. அவனிடம் சொல்லாமல் அவள் தனக்குள்ளேயே வைத்து ஏங்குவதைப் போல இருந்தது: அவள் செயல்களைப் பையன் வருணித்த விதம்.

தட்டு நிறைய எண்ணெயை ஊற்றி ஒவ்வொரு பாகமாக ஊற வைத்துக் கழுவிக் கொண்டிருந்தான் பையன். அவன் அவைகளை ஆராய்கிற மாதிரி நாராயணன் தனக்குள்ளே ஆராய்ந்து கொண்டிருந்தான் சாருவைப் பற்றி.

''பின்னே அம்மா ஏன் வேலையை உட்டுட்டாங்க?'' என்று பையன் பழையபடி பேச்சை ஆரம்பித்தான்.

''உனக்கென்ன அதைப் பற்றி?'' என்று கேட்கத் தோன்றியது. ஆனால் கேட்கவில்லை. அவன் வாயிலிருந்து இரண்டு பேச்சு வருகிற மாதிரி பதில் கொடுக்கும் ஆர்வம். அவன் சுவாரசியமாக எதையாவது சொல்லலாம்.


''கொழந்தையை வைச்சுக்கிட்டு வேலைக்குப் போக முடியலே. அவுங்களே உட்டுட்டாங்க. கொஞ்சம் வருத்தம்தான்.''

''நெனைச்சேன் ஐயா. அவுங்களுக்குக் கொறைதான் அதுலே. வேலைக்குப் போறவங்களைப் பார்த்தா அந்த மாதிரிப் பெருமூச்சு விட்டுச் சொல்லுவாங்க.''

''இப்போ வேலைக்குப் போறதுக்கூடத் தேவையில்லெங்கிற மாதிரியா?''

''வேலை கெடைச்சால் போக ஆசைதான். என்ன ஆனாலும் அந்தச் சுதந்திரம் தனிதானே? இல்லையா ஐயா? வீட்டைக் கட்டிக் காத்துக்கிட்டு அடைச்சுப் போட்ட மாதிரி—'' பையன் ஸ்குருவின் துளையில் 'நச்' என்று ஊதினான்: அடைபட்டதை வெளியேற்ற. அவனுக்கும் மனத்தில் ஓர் அடைப்பு.

சில சமயம் அதிகமாக நெருங்குவதும், கடமையே குறியாக ஒட்டிக் கொள்வதும்கூட




பிலிப்ஸ்



தொடக்கத்தி
லிருந்தேயுள்ள

மில்க் ஆப்
மக்னீஷியா



குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற, மிகச் சிறந்த அமிலநாசினியும் பேதி மருந்தும் ஆகும்

கோடிக்கணக்கானவர்கள் இந்த நம்பகமான முறையில் சமனம் காணுகின்றனர்

தொடக்கத்திலிருந்தேயுள்ளதும் உண்மையானது மான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா, உலகெங்கும் கோடிக்கணக்கானவர்கள் தெரிந்து உபயோகித்து வரும் [illegible] அதிருப்தியுண்டாகும் [illegible] பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவைப் போல் வேறில்லை. குடும்பத்தில் எல்லோருக்கும் ஏற்ற பேதி மருந்து! பிலிப்ஸ்!

[illegible]

[illegible]

சலிப்பைத்தான் தந்து விடுகின்றன. மண வாழ்க்கையின் அம்சங்களாக நினைத்துக் கொள்ளும் குடும்பப் பொறுப்பு, வேலைகளின் அவசரம், குழந்தை வளர்ப்பு, வருவோர் போவோரின் உபசரணை, எல்லாம் சுவாரசியமாக இருக்கக் கூடும் ஒரளவுக்கு. அவைகளே தொல்லைகளாகவும் தோன்றலாம் எல்லைமீறும் போது. ஒருவருக்கொருவர் நெருங்கிப் பழகும் போது புதுக் கதவு திறந்தது போல் இவ் வாழ்க்கையின் புதுத் திருப்பங்கள் தோன்றும் ஆவல். அதில் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளும் பேச்சில், ஆதரவான புன்னகையில், உடல், மனம் எல்லாவற்றையும் நனைக்கும் ஒட்டுறவில் — இவற்றில்தான் அவள் மெருகழியாமல் நிற்க முடியும்.

குடும்ப வாழ்க்கை இரண்டு ஆண்டுகளுக்கு முன் புது முனையில் திரும்பியபோது அவளுக்கு மறுபடியும் ஒரு சுவாரசியம் பிறந்தது. இரண்டு பேருமே குழந்தையுடன் விளையாடும் போது குழந்தைகளாகி விடுவார்கள். கைக் குழந்தையை முழங் காலில் போட்டுக் கொண்டு எண்ணெய் தடவிக் கொண்டிருப்பாள். சிக்காய் தேய்க்கும் கட்டம் வரும் வரை அது அவள் கைத்தட்டலைப் பார்த்துத் தலையைத் தூக்கிப் பொக்கை வாயைக் காட்டிச் சிரிக்கும்.

குழந்தைக்குச் செய்யும் அலங்காரம், புதிதாகத் தைக்கும் உடைகள், அவைகளில் சாரு பின்னால் ஒதுங்கி விட்டாள். அவனும் அதைப் பொருட்படுத்த வில்லை. முன்னைப் போல ஒரு நளினம், அவளைக் கவர வேண்டி அவன் காட்டிய அலாதியான ஆர்வம், அவன் பார்வையைக் கண்டு இழுக்கும் கவர்ச்சி — அவைகள் இல்லை இப்போது.

வீடும் குழந்தையும் பொறுப்புகளும் அவளைக் கட்டி விட்டன. முன்னைப் போல அவள் சுதந்திரப் பறவை இல்லைதான். அதுவே அவளுக்குக் குறையாகத் தோன்றி இருந்தால் ஆச்சரியமில்லை. அவள் மறுபடியும் வேலைக்குப் போகக்கூட ஏங்கி மருகலாம்; அந்தப் பையன் சொல்வதைப் போல. அதுவும் ஒரு மாறுதலாக இருக்குமென்று அவள் நினைத்திருக்கக் கூடும், இறந்த காற்றுக்கு மாலையில் ஏங்குவதைப் போல.

பையன் ஸ்டவ்வை மறுபடியும் மாட்டிப் பொருத்தி விட்டான். மண்ணெண்ணெய் ஊற்றிக் காற்றடிக்க ஆரம்பித்தான். ஸ்பிரிட் ஊற்றிய இளநீல ஒளிவட்டம் நெருப்புக் குச்சியைக் காண்பித்ததும் புருபுரு வென்று எரிந்தது.

''எவ்வளவு கொடுக்கணும்?''

''ஏதோ கொடுக்க. நாளுக்குத்தான் வந்தேன். இன்னிக்குக் கடைக்குப் போகலே. அம்மா இருந்தால் பார்த்துட்டுப் போகலாம்னுதான்.''

''இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்; அவுங்க வர'' என்று உள்ளே போய் ஒரு ரூபாய் நோட்டு ஒன்றை விரலில் இடுக்கிக் கொண்டு வந்தாள். அவன் வருவதற்குள் பையன் போய் விடுவது தேவலை என்று தோன்றியது. என்னவோ அவர்கள் எதிரே அந்தப் பையன் நின்று வேறு எதுவும் பேசுவதை அவளால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. கொஞ்ச நேரம் அவன் அங்கே இருந்தால் அவன் வந்தாலும் வந்து விடுவான்.

''பப்ளிக் போன்!''



''நான் ரொம்ப நேரமா உன்னோடு பேசிவிட்டேன். பக்கத்தில் ஒருவர் பேசணுமாம், காத்திருக்கிறார்!...''
''யாரது? முன்பின் தெரியாதவரோடு நான் எப்படிப் பேசறது?''

பையன் போய் விட்டான். ஸ்டவ்வை உள்ளே எடுத்து வைத்து விட்டாள். ஷெல்பில் புத்தகங்கள். சாரு கல்லூரியில் படிக்கும் போது வாங்கியவை. அவள் கல்லூரி நாடகங்களில் நடித்துப் பரிசுகூட வாங்கியதுண்டு; அந்தப் புத்தகம் அப்படிக் கிடைத்த பரிசு தான். விரலசைவில் புத்தகத்தைப் புரட்டினாள். நடுவில் ஒரு பக்கத்தில் ஒரு பகுதியை அவள் பக்கத்தில் சிவப்புப் பென்சிலால் அடையாளம் செய்து குறித்திருந்தாள்.

''நாடகத்தின் வெற்றி நடிப்பதில் மட்டுமில்லை. பின்னணிகளின் அலங்காரம்; பக்குவமாக விழும் ஒளியின் அமைப்பு, உடைகளின் பொருத்தம், தகுந்த ஜோடனை இவைகளில் தான் அந்த வெற்றி சோபிக்க முடியும். ஒளியும் நிழலும்கூட முக பாவங்களை அழுத்தமாகக் காட்ட முடியும். உடையிலும் முக அமைப்பிலும்கூடப் பேச்சிலும் நடிப்பிலும் முழுமையாகக் கொண்டு வர முடியாத ஒரு சாதனையைக் கண்டுவிட முடியும்.''

அவள் புத்தகத்தை 'டப்'பென்று மூடினாள். வாழ்க்கையிலும் அது உண்மை. கடமையாக விழுந்து விடும் நிகழ்ச்சிகளுக்குக்கூட உயிரூட்ட முடியும்; களை தந்துவிட முடியும்; கொஞ்சம் அனுதாபமும் இயல்பான மன நெகிழ்ச்சியும் தெரியும்படி நடந்து கொண்டால். அதில் பெரிய சாதனை ஒன்றும் இல்லை. கொஞ்சம் கவனம், அதை வெளியே காட்டாமல் இயற்கையாகவே ஓடவிடும் சரளம்

அமைதியாக நடந்தால் போதும். வேலை வாய்ப்பு பற்றிப் பேசுவதில் காட்டும் அக்கறையை அவளைப் பற்றிய பேச்சிலும் தெரியும்படி; தன்னுடைய மும்முரமான நேரங்களிலும்—அவள் புன்னகையின் நிழல் தெரியும்படி ஒரு குறிப்பை உதிர்த்தபடி; நெகிழ்ந்து போகும் ஒரு தாழ்ந்த பேச்சில், பார்வையின் ஓரத்தில், இடை அசைவில், தோளின் குலுங்கலில், கன்னக் குழியில் அது வெளிப்படலாம். அவன் கவனித்தால். பாராட்டுதலாக ஒரு வார்த்தை சொல்லும் போது.

அவள் வரும்போது அவன் நாற்காலியில் கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். கண்ணைப் பொத்திய கைகளில் வளையல்கள் குலுங்கின. அவன் கைகளை எடுக்கவில்லை. அசையாமல் இருந்தான். "திலோத்தமா". அவன் முகக் களிப்பின் அவரிக் குறுகுறுப்பை அவளும் கற்பனை செய்து கொள்ள முடிந்தது. அவள் விரலைப் பிரித்ததும் அவன் கை வளையலை அடுக்க ஆரம்பித்தது. அவள் புன்னகை புரிந்தாள், கையை இழுத்துக் கொண்டே.

"குழந்தையை உங்கள் தங்கை அழைத்துக் கொண்டு போய் விட்டாள்."

அப்போது அவன்தான் குழந்தையாகத் தெரிந்தான் அவளுக்கு. அன்போடு பற்றி இழுத்தான். "நாம் இன்றைக்கு வெளியே போகிறோம்."

"எங்கே?"

"ஏதாவது ஒரு படத்துக்கு. குழந்தையைக் கூட அனுப்பி வைத்தாயிற்று."

"இத்தனை நேரம் கழித்துக் கிளம்பினால் டிக்கெட் கிடைக்காது. லீவு நாள். டிபன் செய்ய வேண்டும் இன்னும்."

"டிபனை வழியில் சாப்பிட்டுக் கொள்ளலாம். படத்துக்கு டிக்கெட் கிடைக்காவிட்டால் வேறே எங்கேயாவது போகலாம்."

அவன் அவளைத் திருப்பிக் கூர்ந்து நோக்கினான். மல்லிகைப் பூச்சரத்தை இழுக்கும் விரல்கள். அதன் குறுகுறுப்பு நெஞ்சிலும் தெரிவது போல இருந்தது. புருவங்கள் நெரிந்தன.

"என்ன பிளான் இது? என்னவோ செய்து விட்டு என்னைத் தாஜா பண்ணுகிறீர்கள்." புன்னகையில் இடது கன்னம் குழிந்தது. இன்னும் பத்து வருஷங்கள் ஆனாலும் அவள் இப்படியேதான் இருப்பாளோ என்னவோ?

"காப்பி மட்டுமாவது போடுகிறேன்" என்று எழுந்தாள். அவன் கேட்டு விட்டான்:

"உனக்கு இந்த வாழ்க்கை அலுப்புத்தட்டி விட்டது? அப்படித்தானே சாரு? பழையபடி வேலை கிடைத்தால் கூடப் போவாய். இது என்னவோ கட்டிப் போட்டதைப் போல இருக்கிறது—"

"இது என்ன புதுக் கேள்வி?" சந்தேகத்தில் சுருங்கியது அவள் முகம்.

"என்னவோ தோன்றிற்று......"

"நீங்கள் பக்கத்துப் போர்ஷனில் இருப்பவர்கள் யாரிடமாவது பேசினீர்களா? நீலா ஏதாவது சொன்னாளா உங்களிடம்?"

"ஏன்? அவளிடம் நீ அப்படிச் சொன்னாயா?" என்று கேட்டான்.

"இல்லை. அவள்தான் இப்படி அடிக்கடி சொல்லிக் கொள்வது வழக்கம். அப்படி உங்களிடமும் குறைப்பட்டுக் கொண்டாளோ என்று நினைத்தேன்."

அவள் குரலில் சிறிதும் தயக்கம் இல்லை. இயல்பாகவும், பதற்றம் இல்லாமலும் அவள் சொன்ன விதம் அவன் மனத்துக்கு அமைதியைக் கொடுத்தது. அவளிடம் அவன் அது வரை பார்த்திராத, ஆனால் அப்போது புரிந்த பூரிப்பில், ஒரு தனி ஒதுக்கம் அவனுக்குத் தெரிந்தது. தன்னுடைய பேச்சில் அவளை வழிக்குக் கொண்டு வந்துவிட முடியாத தத்தளிப்பு.

"ஸ்டவ் ரிப்பேர் செய்யப் பையன் வந்திருந்தான்."

நிலைக் கண்ணாடிக்கு எதிரே நின்று கையைத் தூக்கிப் பூ வைக்கச் சரி செய்து கொண்டிருந்தவளின் முகம் திரும்பியது. ஆனால் அதில் துளிக்கூட மாறுதல் இல்லை. குழந்தையைப் போலக் கையைக் கொட்டிச் சிரித்தாள்.

"இங்கேயா வந்திருந்தான்?"

"ஏன்? நீ வரச் சொல்லவில்லை?"

"முந்தா நாள் நீலாவுடன் நானும் கடைக்குப் போயிருந்தேன். அவள்தான் வீட்டு நம்பரைச் சொல்லிக் கடைப் பையனை இன்று இங்கே வரச் சொல்லியிருந்தாள். அங்கே அவன் காத்துக் கொண்டிருக்கப் போகிறான்."

"இங்கே உன் ஸ்டவ் ரிப்பேர் செய்தாகி விட்டது."

"எங்கே? பற்றவைத்தே பார்க்கலாம்."

அவன் அவள் கையை விடவில்லை. ஒரு நிமிஷம் அவள் யோசனையை அளப்பது போல அவன் பார்த்துக் கொண்டே நின்றான். அவன் கண்கள் இமையாது அவளைப் பருகின.

கடல் மேல் தவழ்ந்து பாய் போலச் சுருண்டு வரும் அலைகளை அவன் பார்த்திருக்கிறான். ஒன்று மடிந்து எழும்பி உயர்ந்து நெளிந்து வளைந்து விழுந்து அடங்கும்போது அதன் காலடியிலேயே இன்னொன்று தொடங்க ஆரம்பித்து விடும். அவற்றின் மடியில் ஜாலமாய் நடுங்கும் நுரைக்குக் கண நேரமானாலும் எத்தனை அழகு?

குடும்ப வாழ்க்கையும் அப்படித்தான். ஒன்றன்பின் ஒன்றாய் எத்தனையோ சம்பவங்கள். நெஞ்சில் நிமிர்ந்து பொங்கி, அசைவை எழுப்பி அடங்கி விடுபவை. ஆனால் அவை ஒவ்வொன்றிலும் இந்தக் குறுநேரத்தைப்போல் ஒளிரும் அழகு? அதை உணர்ந்து அனுபவிக்கத் தவறி விட்டால் அப்புறம் வாழ்க்கையில் ஒன்றுமில்லை.

"என்ன இப்படியென்று முகத்தை சீரியஸாக வைத்துக் கொண்டு—" என்று கன்னத்தைத் தீண்டினாள் சாரு.

"ஒன்றுமில்லை—"

உடையை மாற்றிக் கொள்ள உள்ளே போனவள் கதவைச் சாத்தும் சத்தம் கேட்டது. அதன் பின்னிருந்து கேட்ட குரல்!

"ஸ்டவ் ரிப்பேர் செய்கிற பையன் இப்படி ஒரு தப்பு செய்திருக்க வேண்டாம்."

'அவன் தப்பு செய்ய வில்லை. சரியான காரியம்தான் செய்து விட்டுப் போயிருக்கிறான்!' என்று நினைத்துக் கொண்டான் நாராயணன்.



எனது பேத்தியும், விஸ்வநாதன் செட்டியார் குமாரத்தி சௌ. செல்வி சுப்புலக்ஷ்மிக்கும் பெங்களூர் பிரபல ஜவுளி வியாபாரி ஸ்ரீ பக்தி ராதாகிருஷ்ண செட்டியார் செல்வன் ஆர். ரகுநாதனுக்கும் 5-3-64ல் கோவையில் எனது இல்லத்தில் நடந்த திருமண வைபவத்திற்கு நேரில் வருகை தந்தும், பரிசுகள் வழங்கியும் தபால் — தந்தி மூலம் வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அன்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

P. A. ராஜு செட்டியார் & பிரதர்ஸ்
சுவர்ண மாளிகை, கோவை-1

சந்திரா



பஸ், லாரி, கார் உறுப்புகளை டிவிஎஸ் புதுப்பிக்கிறது

உறுப்புகளில் பல விலையுயர்ந்தவை; உடனடியாகவும் கிடைக்காது; புதுப்பித்தால் புதிய உறுப்புகள் வாங்கும் அபாரச் செலவு குறையும். உடனடியாகவும் கிடைக்கிறது. அதுமட்டுமன்று; அன்னியச் செலாவணியை மீதப்படுத்தி, தேச முன்னேற்றத் துக்குத் துணைபுரிகிறது.

டிவிஎஸ்ஸில், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள், நவீன இயந்திரங்களின் உதவியால், உங்களுடைய தேய்ந்துபோன அல்லது உடைந்த உறுப்புகளை, தயாரிப்பாளரின் ஒரிஜினல் தரத்திற்கு புதுப்பிக்கிறார்கள். புதுப்பிக்கப் பெற்ற உறுப்புகள் புதிய உறுப்புகளைப் போலவே நுண்மையானவை; உழைப்பவை.


டிவிஎஸ்ஸில் புதுப்பிக்கும் (தேய்ந்துபோன) உறுப்புகளில் சில:

ரியர் ஆக்ஸில் ஹவுஸிங்—கிராங்க்ஷாப்ட்—மெயின் ஆக்ஸில்—ஹப்—ஸ்டப் ஆக்ஸில்—கிளட்ச் பிரஷர் பிளேட்—ஷாக்கிள்ஸ்—ப்ரொபெல்லர் ஷாப்ட்—யோக்—பிரேக் டிரம்ஸ்—ஹாங்கர்ஸ்—பியூயல் இன்ஜெக்ஷன் பம்ப் ஹவுஸிங்—என்ஜின் பிளாக்—கியர்பாக்ஸ் கவர்—சிலிண்டர் ஹெட்.

டிவிஎஸ் ஸில் புதுப்பிப்பதால் நடைமுறைச் செலவு மிகக் குறையும்.

சிறுகதை

சுரைக்காய்க்குத் தம்புராணம்



அனுசுயா

சென்னையிலே மிக நீளமான படிகள் உள்ளன. ராஜாஜி ஹால், பத்துப் பன்னிரண்டு பெரிய பங்களாக்களின் வாசற்படிக்கட்டுப் படிகளை நீளச் சேர்த்து வைத்தது போல் இருக்கும். அவ்வளவு நீளம். மேலேறிச் செல்ல முப்பது, முப்பத்தைந்து படிகள்.

இரண்டு வாரங்களுக்கு முன்னால் ஒரு நாள் அந்த மண்டபத்துக்குப் போயிருந்தேன்.

''அனுசுயாவா?'' என்று யாரோ கூப்பிட்டது கேட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

''யாரு, பார்வதமா?'' என்றேன்.

கூப்பிட்டது பார்வதம்தான்.

''உன்னைப் பார்த்து நாளாயிற்று; ஒழிவேயில்லே; இது மாதிரி எங்கேயாவது வெளியிலே சந்தித்தால உண்டு!'' என்றாள்.

''அதுவும் இங்கேதான் அடிக்கடி பார்த்துக் கொள்கிறோம்'' என்றேன் நான்.

''அவர் ஓரிடத்துக்கும் அதிகம் போகிறதில்லே; ஆனால், இங்கே நடக்கும் பலதரப்பட்ட கண்காட்சிகளுக்குத் தவறாமல் வருகிறார்; நானும் கூட வந்தால்தான் பார்த்தாற் போல் இருக்கிறதாம். அதற்காக என்னையும் வலுக் கட்டாயப்படுத்தி அழைத்துக் கொண்டு வருகிறார்'' என்று பெருமையுடன் கூறிக் கொண்டு மண்டபத்தின் பக்கம் பார்த்தாள்.

அவள் புருஷன், அவள் என்னோடு பேசுவதைக் கண்டதும் விறுவிறு என்று படிகளில் ஏறிப் போய் விட்டார். அவர் அவரைக்காய் வற்றல் மாதிரி இருந்தார். இரண்டு படிகள் ஏறிய மாத்திரத்தில் பார்வதத்துக்கு மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது. அவள் பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் கொடி ஆடுவதுமாதிரிதான் இருந்தாள். ஆனால் உடல் பருமனுவதற்கென்று மருந்து எதுவும் சாப்பிடாமலேயே அவள் எடை இப்போது நூற்றெண்பது பவுண்டுகள் ஆகிவிட்டது.

''இன்னும் எங்கேயெல்லாம் போவீர்கள்?'' என்று விசாரித்தேன்.

''ஹைகோர்ட்டில் கேஸையும் பார்க்க வேண்டுமென்று சொல்கிறார். அதற்கு ஒரு நாள் போக வேண்டும்!'' என்றாள்.

''அப்புறம்?''

''எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இராமாயணக் காலட்சேபம் நடந்தால் கட்டாயம் போய் விட்டு வருவோம்.''

''தேவலையே!''

''ஒரோரு சமயம் எனக்கு எழுந்திருக்கவே தள்ளாது. அப்படியும் புறப்பட்டு விடுவேன். புருஷன் சொல்லும் போது அதை எப்படித் தட்டுகிறது?''

''வாஸ்தவம். இராமர் 'நான் காட்டுக்குப் புறப்பட்டு விட்டேன்' என்றுசொன்ன போது சீதை, 'நான் நேற்றைக்கே புறப்பட்டாகி விட்டதே!' என்று சொல்லவில்லையா ...?''

''ஆமாம்! காலட்சேபம் கேட்கக் கேட்க, நமக்கும் புருஷன் சொன்னபடி கேட்டு வைப்போமே என்று தோன்றுகிறது'' என்று எங்கேயோ ஞாபகமாகக் கூறிய பார்வதம் தொடர்ந்து, ''காலட்சேபத்துக்கு நடந்தே தான் போக வேண்டுமென்று சொல்வார். நாங்கள் நடந்துதான் போவோம்'' என்றாள்.

''காரில் போகக் கூடாதோ?''

''பாபமில்லையா? ராமரும் சீதையும் காட்டுக்கு நடந்து போன கதையைக் கேட்பதற்கு நான் எங்கள் பெரிய, புத்தம் புது காரில் போகலாமா?'' என்று அதட்டுவது போல கேட்டாள்.

''கூடாது, கூடாது'' என்றேன்.

''நான் பௌடர் பூசிக் கொண்டும் போகிறதே இல்லே. அங்கே போய்ச் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொள்கிறதும் இல்லே.''

''உங்களுக்கு ரொம்பப் 'பக்தி' அதிகம்'' என்றேன்.

ஒரு மாதிரியாக எட்டுப் படிகள் ஏறி வந்து விட்டோம்.

''நான் காலட்சேபத்துக்குப் பட்டுப்புடவை கூடக் கட்டிக் கொண்டு போகிறதில்லே. சீதை, பாவம் மரவுரிதானே கட்டிக் கொண்டு போனாள்?'' என்றாள் பார்வதம்.

''இன்னொரு நாள் சாவகாசமாக வீட்டுக்கு வருகிறேன்'' என்று கூறி விட்டு நான் காட்சியைப் பார்க்கப் புறப்பட்டேன். பார்வதத்தின் கணவர், அவளது உடல் இளைக்கச் செய்வதற்காக இப்படி மறைமுகமாக அவளுக்குப் பல விதங்களில் தேகப் பயிற்சி அளித்துக் கொண்டு வந்ததை மெச்சாதிருக்க முடியவில்லை.

காட்சி பார்ப்பதற்காகப் போனேன் என்று சொன்னேன் அல்லவா? அது இந்திய சைவ உணவு மகாநாட்டுக் காட்சி! அங்கே, உணவு, சமையல் காட்சிகளெல்லாம் காண்பிக்கிறார்கள் என்று பத்திரிகைகளில் பிரமாதமாகப் போட்டிருந்தது. அதைப் பார்த்து விட்டு வந்தேன். ஜனங்கள் மாமிசம் சாப்பிடக் கூடாது, கறிகாய்கள், தானியங்கள் முதலியவற்றைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்கிற நோக்கத்தோடு இந்தக் காட்சி ஏற்பாடாகியிருந்தது.

மண்டபத்தைச் சுற்றியுள்ள வராந்தாவில் நீண்ட மேஜைகளைப் போட்டு, அவற்றின் மீது வெள்ளைத் துணிகளை விரித்துக் 'காட்சி'ப் பொருள்களை வைத்திருந்தார்கள்.

முதல் முதலில் நின்று கொண்டிருந்த ஒரு பெண், தன் எதிரில் சின்னஞ் சிறிய பாத்திரங்

களில் வைத்திருந்த சாத வகையறாக்களைக் காண்பித்தாள்.

''இது புளியஞ் சாதம்! இதைச் செய்வதற்கு முதலில் புளியை 'ஸொல்யூஷன்' ஆகச் செய்து கொள்ள வேண்டும்'' என்று ஆரம்பித்தாள்.

இதைக் கேட்ட மாத்திரத்திலேயே அவள் செய்து வைத்திருந்த புளியஞ்சாதத்தில் ஒரு சுண்டைக்காய் அளவு வாயில் எடுத்துப் போட்டுக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. ஏன், சுண்டைக்காய் கணக்கு, என்றும் அங்கிருந்ததே. 'கனுப் பிடி'க்கு வைக்கும் அளவுதான் இருந்தது.

''மாதிரி பார்க்கக் கொடுக்கிறதில்லே'' என்று அந்தப் பெண் சொன்னாள்.

நான் இதற்குப் பதில் சொல்கிறதற்குள் கூட்டம் என்னை அப்பால் தள்ளி விட்டது.

அடுத்தாற் போல், ''மைசூர் உணவு வகைகள்'' என்று சிறிய காகிதத்தில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. பங்களூர்க் கறிகாய்கள் சமையலே கண்ணில் பட்டது. மறுபடியும் கூட்டம் என்னைத் தள்ளி விட்டது. அடுத்தாற் போல இருந்த கேரளப் பகுதிக்கும் போனேன்.



அங்கே நேந்திரங்காய் வறுவல், மின கூட்டல், அவியல், எரிசேரி, புளிசேரி, காளன், ஓலன், கிரை மொளகுஷ்யம் முதலிய வகைகள் ஐஸ்கிரீம் கிண்ணம் போன்ற கிண்ணங்களில் வைக்கப்பட்டிருந்தன. சின்னச் சின்னப் பாப்பாக்கள் வைத்துக் கொண்டு விளையாடும் சொப்பு போன்ற சிறிய பிளாஸ்டிக் டம்ளர்களில் என்னமோ ஊற்றி வைத்திருந்தார்கள்.

''அது என்ன?'' என்று கேட்டேன்.

''மிளகு ரசம். சாப்பிட்டுப் பாருங்கள்'' என்று கூறி அங்கிருந்த கேரள நன்னாட்டு அம்மாள் ஒரு டம்ளரை எடுத்து என்னிடம் கொடுத்து விட்டாள். வந்தது வரட்டும் என்று தைரியமாகவே சாப்பிட்டேன். நன்றாகவே இருந்தது.

அங்கே, பூரி, சப்பாத்தி, முறுக்கு, வடை, பட்டாணிக் கடலை முதலியன வைத்திருந்தார்கள். கத்திரிக்காய், முருங்கைக் காய், மாங்காய், தேங்காய், வாழைப் பழம், பப்பாளிக்காய் முதலியவையும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தன.

ஒரு மேஜை மீது 'கறிகாய்க்குக் கல்யாணம்' என்று ஒரு சிறிய அட்டையில் எழுதி அதைத் தொங்க விட்டிருந்தார்கள். கல்யாணமென்றால், அசல் கல்யாணம்தான்! மணப் பந்தல், மேளம், புரோகிதர் எல்லாம் உண்டு. ஏன், கல்யாணப் பெண், மாப்பிள்ளைகூட இருந்தார்கள். வரலட்சுமி விரதத்தின்போது சின்ன மண்டபம் கட்டுகிறோம். அது மாதிரி மணப்பந்தல்.

ஒரு பெரிய முட்டைகோசு அதன் மீது நீண்ட காம்புள்ள பீட்ரூட். காம்பு—அது உச்சிக் குடுமி மாதிரி இருந்தது. அதுதான் புரோகிதர்.

கல்யாணப் பிள்ளைக்கும், பெண்ணுக்கும் தக்காளிப் பழம்தான் தலை. முட்டைகோஸ் கீரையின் பெரிய இலை ஒன்றை மாப்பிள்ளை வேஷ்டியாகச் சுற்றிக் கொண்டிருந்தார்.—பெண்ணுக்குத் தங்க வர்ணப் புடவை, வாழைப் பூ மடலைக் கொத்துக் கட்டிக் கொண்டிருந்தாள். கைகள் காய்ந்த வளைந்து கொடுக்கும் பீட்ரூட்டிலுள்ளவை.

ஒரு பெரிய கத்திரிக்காயை இரண்டு பக்கமும் சீவித் தட்டையாக்கிக் குத்திட்டு நிற்க வைத்து, அதில் ஒரு தக்காளிப் பழத்தைச் செருகியிருந்தார்கள். அவர்தான் தவுல்காரர். தோள்பட்டையிலிருந்து இரண்டு பிரண்டைகள் கிளம்பிச் சென்றன. அவை தான் கைகள். கைகளுக்கு நடுவில் தவில் இருந்தது. ஓர் உருளைக் கிழங்கை அந்த உருவத்தில் சீவி வைத்திருந்தார்கள். இது போன்று ஒவ்வோர் அம்சமும் காய்கறிகளைக் கொண்டே தயாரிக்கப் பட்டிருந்தது. சிறுவர்களும், சிறுமிகளும் இதைப் பார்த்து அனுபவித்தார்கள். அந்தக் குழந்தைகளின் வீட்டிலுள்ளவர்கள் காய்கறிகளைப் பத்திரமாகப் பூட்டி வைத்துக் கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கிறேன்!

வெறும் அரட்டை

'''தன்னந் தனியாக விமானத்தில் ஏறி உலகைச் சுற்றிப் பறந்து வந்த முதல் பெண்மணி' என்ற பட்டத்தைப் பெறுவதற்காக இருபத்தேழு வயதான ஜோன் மேரியம் காலிபோர்னியாவிலிருந்து கிளம்பி இருக்கிறாளாம்! என்ன துணிச்சல் பார்த்தாயா?''

''இதென்ன பிரமாதம்! ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானமாக விண்வெளிப் பயணமே செய்கிறார்களே!''

''அந்த வீராங்கனை வாலன்டைனா, முதலில் விமானத்திலிருந்து பாராசூட்டுடன் குதிப்பதைத்தான் கற்றுக் கொண்டாளாம். ஒரு பொழுது போக்கு விளையாட்டாக அதை ஆரம்பித்தாளாம். ரஷ்யாவில் இந்தப் பாராசூட் போட்டியில் கலந்து கொள்வோரில் பாதிப் பேருக்கு மேல் பெண்கள்தானாம்!''

''கேரள கவர்னர் கிரி அன்று எதிராஜ் காலேஜிலே சொன்னதைக் கவனித்தீர்களா? 'அரசாங்கப் பதவிகளில் ஐம்பது சத வீதம் பெண்களுக்குத் தரவேண்டும்'' என்றார்.

''போடு சக்கை! கொடுத்துப் பார்க்கட்டுமே. அப்புறம் லஞ்ச ஊழல் என்கிறார்களே அதெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போய்விடும்! நல்ல நிர்வாகம் நடக்கும். என்ன, சரிதானே நான் சொல்வது?''

முக்கூடல்

விமலா ரமணி



அந்த வாலிபன் முகத்தைப் பார்த்தேன். சுருள் சுருளான கேசமும், அடர்ந்த நெற்றியும், சிவந்த மேனியும் என்னுள் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது உண்மைதான்..... ஆனாலும்... ஆனாலும்.... அவன் வாழ்க்கை வரலாற்றினைக் கேட்டபோது....

அவன் ஓர் ஏழை! பரம ஏழை. தாய் தந்தை அற்ற அநாதை...தன் முயற்சியால் முன்னுக்கு வந்து படித்துப் பட்டம் பெற்றவன்...அவ்வளவுதான்...சொத்து, சுகம்....?

மூச் !

என் உள்ளம் சப்பிட்டது! பெருமூச்சு விட்டேன் நான்..... என் மகள் மாலினிக்கு இவன் ஏற்றவனா? எங்களுடைய அந்தஸ்து என்ன? அதிகாரம் என்ன? நினைத்தால் லண்டனுக்கும், நியூயார்க்குக்கும் பறந்து செல்லும் இவர் தன்மைதான் என்ன? இவர் அந்தஸ்துக்கு ஏற்ற மருமகனா இவன்! என் மனத்திலிருந்த அந்த எண்ணத்தை நான் அப்போதே துடைத்து விட்டேன்.

ஆனால் வாடகைக்குத் தங்க இடம் கேட்டபோது என்னால் மறுக்க முடியவில்லை.

பரீட்சைக்குப் படிக்க வேண்டுமாம். தனி இடம் வேண்டுமாம்! அமைதியான இடம்!

மாலினியின் மாடி அறையை ஒழித்துத் தர ஏற்பாடு செய்தேன்.

மாலினியின் முகம் கடுகடுவென்று இருந்தது. என் வார்த்தைக்கு மறு வார்த்தை பேசி அறியாதவள்! விருப்போ, வெறுப்போ அவள் என் உத்தரவைச் செயலாற்றி விட்டாள் ! மாலினிக்குக் கீழே படிக்கும் அறை! இவ்வளவு பெரிய வீட்டில் எத்தனையோ வசதிகள் இருக்கின்றன! பாவம், அந்த வாலிபன்:.....

ஆ..: அவன் பெயர் ஸ்ரீதர்:

ஸ்ரீதர் வந்து விளையாட்டுப் போல் ஒரு மாதமாகி விட்டது. தான் உண்டு தன் வேலை உண்டு என்று மாடி அறையில் முடங்கிக் கிடப்பான் அவன். படிப்பு! படிப்பு! எப்போதும் படிப்பா?

என் மனசுதான் கேட்காது... ஏதாவது நல்ல பக்ஷணங்கள் செய்தால் அவனுக்கு எடுத்துக் கொண்டு போவேன்.....

''இதெல்லாம் எதற்கம்மா அநாவசியமாய்...... உங்கள் அன்பு ஒன்றே போதும்'' என்றான் அன்றொரு நாள்.

''உன் இனிப்பு உள்ளத்துக்கு ஏற்ப இனிப்பு சமைத்தேன்! நீ படித்து இப்படி இனிப்பான முடிவைக் கண்டு உன் வாழ்வே இனிக்கட்டும்.....''

அவன் மெள்ளச் சிரித்தான். வரிசைப் பற்கள் ஒரு கணம் மின்னி மறைந்தன.

என்னை அறியாமல் அவனிடத்தில் ஒரு பிடிப்பு ஏற்பட்டதை உணர்ந்தேன்....

ஒரு வேளை போன ஜன்மத்தில் அவன் என் மகனாகப் பிறந்திருப்பானோ?

அவனுக்குப் பாட்டுப் பாடத் தெரியுமாம்! சித்திரம் எழுதத் தெரியுமாம்! பொழுது போக்காகக் கற்ற இவை அவன் உயிர் நாடியாம்! ஒரு நிமிடத்தைக் கூட அவன் வீணாக்க மாட்டானாம்.

நான் ஆழ்ந்த பெருமூச்சு விட்டேன்!

ஸ்ரீதர்! இவ்வளவு திறமையுள்ள நீ ஒரு சுமார் குடும்பத்தில் பிறந்திருக்கக் கூடாதா? தாய், தந்தையற்ற அநாதை! - நான் அதற்கு மேல் சிந்திக்க வில்லை!

* * *

மூன்று மாதங்கள் வேடிக்கையாய்க் கழிந்து விட்டன. வெளி நாடு சென்றிருந்த என் கணவர்கூட இன்னும் ஒரு மாதத்தில் வந்து விடுவார்...... வந்தால் மாடியில் ஸ்ரீதர் இருப்பதைக் கண்டு கோபிப்பாரோ?

ரொம்பப் பொல்லாதவர் அவர்! தாம் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்று வாதிக்கும் பிடிவாதக்காரர் கூட!

அதிருக்கட்டும்! ஏனோ தெரியவில்லை...: இப்போது இந்த மாலினியிடம் ஒரு மாற்றம்! 'கல கல' வென்று என்னுடன் அடிக்கடி சிரித்துப் பேசும் அவள் இப்போது வாய் மூடி மௌனியாய், எப்போதும் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் அமர ஞானியாய் ஏன்..... ஏன் இருக்கிறாள்? ஒருவேளை?

ஆமாம்....... நான் ஒரு பைத்தியம் ! எப்போது பார்த்தாலும் ஸ்ரீதர் பற்றிய புகழுரைகளை அவளிடம் கூறிக் கொண்டேயிருந்தேன்.

என் உள்ளத்திலோ அவனை மருமகன் ஆக்கும் எண்ணம் கிடையாது! ஆனால் எதற்காக வீணில் இந்த இளம் உள்ளத்தில் கொந்தளிப்பை உண்டுபண்ணினேன்? அவனைப் பற்றிப் பேசும் போது அவள் முகத்தில் படர்ந்த அந்தக் காந்தி.....? அதற்கு என்ன பொருள்? இப்போது யோசிக்கிறேனே ! பைத்தியம்!

அவனை அவள் அடிக்கடி பார்க்காமலே அவனுடன் பேசாமலே அவனை அவள் உள்ளத்திலே உயர்த்தி நெஞ்சில் ஓர் ஆலயம் கட்ட ஏற்பாடு செய்து விட்டேனா?

அவர்கள் இருவருக்கும் இடையில் இருக்கும் அந்த அந்தஸ்து மதிலைப் பார்க்கவில்லையா அவள் ?

'முன்னம் அவன் நாமம் கேட்டு, ஊர் கேட்டுத் தலைவனுக்குத் தலைப்பட்ட நங்கை போல்' — என் மகளும், என் மகளும்....? நான் வேதனைப்பட்டேன்.....

இதன் மூலகாரணம் நான்தான்.

ஸ்ரீதர் அப்படி இப்படி ஆனை, குதிரை என்று வருணித்து அதுவும் என் மகளின் சலனமில்லா நெஞ்சிலே பெரும் சலனத்தை உண்டு பண்ணி விட்டேன் !

நான் மாபெரும் தவறு செய்து விட்டேன்!

மாலினியின் மாற்றத்துக்கு இதுதான் காரணம் !

அவள் அடிக்கடி ஆழ்ந்த யோசனையில் இருப்பதற்கு இதுதான் காரணம்! அவள் என்னிடம் முன் போல் சிரித்துப் பேசாமல் இருப்பதற்குக் கூட இதுதான் காரணம்!

அன்று —

மாலினியின் அறைக்குள் அவசரமாக நுழைந்தேன். என்னைக் கண்டதும் அவள் முகம் அப்படி வெறுப்பானேன்? சந்தேகம் கடுமையாய்ச் சூழ நான் அவள் அறையிலிருந்து ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு வெளியேறி விட்டேன்! ஆனால் ஜன்னல் வழியாக அவள் செய்கையைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன்.

ஏதோ கடிதம் எழுதிக் கொண்டிருந்தாள் அவள் !

என்ன கடிதமாக இருக்கும்? ஒரு வேளை.... ஒரு வேளை..... 'குப்'பென்று வியர்த்தது எனக்கு !

''மாலினி! மாலினி!''

நல்ல வேளை! மாலினியின் சிநேகிதி ஒருத்தி கூப்பிட்டாள்! அவசரம் அவசரமாகக் கடிதத்தை ஒரு புத்தகத்தில் செருகி வைத்து விட்டு மாலினி வாசலுக்கு ஓடினாள்.

நான் மெள்ள மாலினியின் அறைக்குள் நுழைந்தேன். மனம் 'படபட' வென்று அடித்துக் கொண்டது! இதயத்தில் 'குபுகுபுக்' கென இரத்தம் வேகமாகப் பாய்ந்தது.

கால்கள் தடுமாறின; கண்கள் இருண்டன.

கடிதத்தைப் பிரித்தேன் நான்: என் கண்கள் வியப்பால் விரிந்தன.

கடிதத்தின் முதல் வரி.......! அன்புள்ள காதலன் என்று அல்ல! என் அன்புள்ள தந்தைக்கு — என்று இருந்தது அதில்!

பரபரப்புடன் கடிதத்தைப் படித்தேன்.

''நீங்கள் இல்லாத இந்த நேரம் ஸ்ரீதர் என்றொரு பையன் மாடிக்குக் குடி வந்திருக்கிறான். அம்மாதான் என் அறையை ஒழித்துத் தரச் சொன்னாள். அவனிடத்தில் அம்மாவுக்கு ஏன்தான் அப்படி ஒரு பாசமோ தெரியவில்லை! அம்மாவுக்கு இப்போதெல்லாம் என்னிடம்கூடப் பேச நேரம் இருப்பதில்லை! எப்போதும் அவனிடம்தான் பேச்சு! அல்லது அவனைப் பற்றி என்னிடம் பிரசங்கம்! எனக்கு 'போர்' அடிக்கிறது! நீங்கள் விரைவில் திரும்பி வாருங்கள்! எனக்குத் 'துணை' இங்கு ஒருவரும் இல்லை! எனக்கு அந்தப் பையன் மீது.........''

நான் விக்கித்து நின்று விட்டேன்.

அவள் மாற்றத்தைப் பற்றி நான் யோசித்துக் கொண்டிருந்தேன்! என் மாற்றத்தைப் பற்றி அல்லவோ அவள் குறை கூறுகிறாள் ! அவளுள் ஏற்பட்ட மாற்றத்தின் காரணம் காதல் நோயல்ல! தன் அன்புத் தாயின் அன்பை மற்றொருவன் திருடி விடுகிறானே எனப் பாசப் போராட்டம்தான் காரணம் ! இப்படிப்பட்ட உயர் உள்ளம் படைத்த பெண்ணைப் பற்றியா நான் சந்தேகப்பட்டேன்? மாலினிக்காக நான் அவனை வெறுக்க வேண்டும். முடியுமா என்னால்?



''அவள், ''அம்மா!'' என்று அழைக்கும் போது உள்ளமெல்லாம் இனிக்கிறதே!

''தாய் தந்தையற்ற இந்த அநாதைமீது முதன் முறையாக அன்பு செலுத்தும் ஒரு நல்ல உள்ளத்தை இப்போதுதான் பார்க்கிறேன் அம்மா! அந்தஸ்து பேதம் பாராட்டும் இந்த உலகில் அன்பு செலுத்தத் தெரிந்த உயர் உள்ளத்தை இன்றுதான் காண்கிறேன் அம்மா!''

அவன் பேச்சு என் காதுகளில் ஒலித்தது.

அவனுடன் பேசினால் மாலினிக்கு வேதனை! அவனை வெறுத்தால் அவனுக்கு வேதனை!

இந்த வேதனை குறைய.....? அவர்களைப் பிணைத்து விட்டால்.......?

அந்தஸ்து வாயைத் திறந்து சிரித்தது. அவர் என்ன சொல்லுவாரோ? அவர் மனம் வைத்தால் பிச்சைக்காரனைக் கூட மருமகனாகத் தேர்ந்தெடுப்பார்! ஆனால்.....?

நான் யோசித்துக் கொண்டிருந்தேன்.

என் உள்ளத்தில் ஏற்பட்ட இந்தக் கிமர்த்திருப்பத்தை என்னுலேயே ஏற்றுக் கொள்ள முடியவில்லை! நான் ஏமாற்றத்தை மெல்ல மெல்ல மென்று விழுங்கினேன்!

க் க் க்

கெட்டி மேளம் முழங்கிற்று.

மாலினிக்குக் கலியாணம்! என் மாலினிக்குக் கலியாணம்! அவள் வெறுத்த அதே ஸ்ரீதருடன்! அநாதை ஸ்ரீதருடன்!

இனி மகள், மருமகன் இருவரின் மீதும் அன்பு செலுத்த எனக்கு உரிமை உண்டல்லவா? இனி இதில் போட்டி எழாதே!

ஆனால்..... ஆனால் ஏனோ என் உள்ளத்தில் ஒரு சலனம்! அதோ அதோ என் கணவர்!

''அந்தஸ்தாவது மண்ணாங்கட்டியாவது! நானேக்கே அவனை வெளிநாடு அனுப்புகிறேன்! தன்னால் அந்தஸ்தும், ஆஸ்தியும் தேடி வருகின்றன அவனை!''

இந்த முடிவுக்கு அவர் வரக் காரணம்?

மாலினியின் கடிதம்.....? அத்துடன் அன்றே ஸ்ரீதரைப் பற்றி எழுதிய என் கடிதம்!

இந்த இரு கடிதங்களும்தான் அவர் உள்ளத்தை மாற்றியிருக்க வேண்டும்! அதன் நல்ல முடிவுதான் இந்தத் திருமணம்!

கல்யாணமாகி ஒரு மாதம் ஓடி விட்டது. மாடி அறைதான் அவர்கள் அறை.

அன்று-என் கணவரும் நானும் பூங்காவுக்கு உலவப் போனேம். சிரிப்பொலி கேட்டது.

என் மகள் மாலினியும், மருமகன் ஸ்ரீதரும்!

அவர்கள் பேசியது தெளிவாகக் கேட்டது! அவர்கள் எங்களைப் பார்க்க வில்லை.

''பார்த்தாயா, மாலினி! எப்படி நம் திட்டம்? நேர் வழியில் உன் பிடிவாதத் தந்தையையும், தாயையும் அணுகி நாம் இருவரும் 'காதல் மேட்ஸ்' என்ற உண்மையைச் சொல்லிச் சம்மதம் கேட்டிருந்தால் ஏழையான என்னுடன் உன் வாழ்வை இணைத்திருப்பார்களா?''

மாலினி சிரித்தாள்.

''அன்று அம்மா நான் கடிதம் எழுதும் போது அவசரமாக ஓடோடி வந்தாள், உங்களுக்குத்தான் கடிதம் எழுதுகிறேனுக்கும் என்று! அம்மா பார்க்க அதை மேஜையில் வைத்தேன்...... அதைப் படித்த பிறகுதான் அப்பாவுக்குக் கடிதம் எழுதி.... இப்படி நம் கலியாணம் முடிந்தது. ஆனாலும் நீங்கள் ரொம்பப் பொல்லாதவர். அம்மாவிடம் இனிக்க இனிக்கப் பேசி அவர்கள் அன்பைப் பெற்று விட்டீர்கள்! முன்பின் அப்பாவைப் பார்க்காமலே அவரது நற்சாட்சிப் பத்திரத்தையும் அடைந்து விட்டீர்கள்!''

நான் கல்லாய்ச் சமைந்து விட்டதைப் போல் நின்றிருந்தேன். அவள் சிரிப்பின் ஒலி எங்கள் ஏமாற்றத்தின் எதிரொலியோ?

என் கணவர் என்னைத் தட்டினார். 'கவ ணர்வு பெற்றவளாய் நிமிர்ந்தேன். என் கண்களில் முட்டி நின்ற கண்ணீரை அவர் அன்புடன் துடைத்தார்.

''சீ, அசடு! இதற்குப் போய் அழுது கொண்டு......! நடந்தது நடந்து விட்டது! எதுவும் தெரியாதது போல் நடித்து விடு! நம் ஏமாற்றத்தைத் தவிர்க்க அதுதான் வழி!''

என் மனம் அழுதது.

'ஐயோ, என் அன்பே! நான் இப்போது கூட நடித்துக் கொண்டுதான் இருக்கிறேன்! அன்று மாலினி உங்களுக்கு எழுதிய அக்கடிதத்துடன் அவள் அன்புக் காதலன் ஸ்ரீதருக்கு எழுதிய காதல் கடிதம் ஒன்றினையும் கண்டு விட்டேன் நான். அவர்கள் திட்டம் புரிந்தது எனக்கு! அவர்களுக்குத் தெரியாமலேயே அந்த நாடகத்தில் நானும் பங்கு கொண்டேன்! நடித்தேன்! உங்களை ஏமாற்றினேன்! தனிமையில் உங்கள் ஒருவரால் இந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியாது என்பதற்காகவே எனக்கும் ஒன்றும் தெரியாதது போல் நடித்தேன்; ஏன் இப்போதும் நடித்துக் கொண்டிருக்கிறேன். இல்லாவிட்டால் உங்கள் ஏமாற்றப்பட்ட உள்ளத்தை நகக்கிக் கொண்டு எனக்கு ஆறுதல் கூறுவீர்களா? எங்கள் மூன்று பேரின் கூட்டு நடிப்பு 'மூக்கடையில் நீங்கள் மூழ்கி விட்டீர்களே' என்று தான் வேதனையாக இருக்கிறது! ஆனால் நான் நடித்தது தங்கள் வேதனையைக் குறைக்க. என்னை மன்னித்து விடுங்கள், அன்பே!'

மனம் குமுற, உள்ளம் கொந்தளிக்க, உடல் சோர 'நடிகையர் திலகமாகி' அவர் பின்னே நடந்து சென்றுகொண்டிருந்தேன்!

ஸ்ரீஹரியின் பம்பாய் பிரயாணம்

நாட்டு வைத்தியம், ஸ்ரீஹரி 8-4-64 மாலை சென்னையிலிருந்து புறப்பட்டு 10-4-64 பம்பாய் சேர்வார். அங்கு 26-208 மீனுலைதன்-லையான் மாதுங்கா (கிழக்கு) ரோட்டில் தங்குவார். 11-4-64 மாலை பம்பாயிலிருந்து புறப்பட்டு 13-4-64 சென்னை வந்து சேர்வார்.

பொன் விலங்கு

—நேயர் நினைவுகள்—

[கல்கி பத்திரிகையையும் அதன் வாசகர்களையும் என்றுமே பிணைத்து வந்த அன்பு விலங்கு, 'பொன் விலங்கு' மூலம் எத்துணை அளவுக்குப் பிரிக்க முடியாதபடி இறுகி விட்டிருக்கிறது என்பதை அந்தத் தொடர்கதை முடிந்ததும் காரியாலயத்தில் வந்து குவிந்து எங்களைத் திணற அடித்துள்ள ஏராளமான கடிதங்கள் நிரூபிக்கின்றன. இன்னமும் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன; எல்லாக் கடிதங்களையும் பிரசுரிக்க மனமிருந்தும் இடமில்லாத காரணத்தால் வாசகப் பெருமக்களின் சில நினைவுகளை மட்டும் கீழே தருகிறோம். கடிதம் எழுதிய அனைவருக்கும் நன்றி. —ஆசிரியர்]

✿ தந்தி :
Convey condolences on Death of Mohini to Satyamurthi and Bharathi.

Mangalore . SHIVARAMAN

✿ 'பொன் விலங்'கில் வரும் வாக்கியம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பொன்னைப் பரிசாகக் கொடுக்கலாம். இந்த எழிற் கதையைத் தந்த மணிவண்ணனையும், சிறந்த படங்கள் வரைந்த 'விஜயா'வையும், இவற்றை வெளியிட்ட 'கல்கி'யையும் பாராட்டுகிறேன்.

காரைக்குடி வீர. சுப்பிரமணியன்

✿ குற்றவாளியான ஆசிரியருக்கு வாசகர்களாகிய நீதிபதிகள் அளிக்கும் தண்டனை—அவர் மற்றொரு அரிய படைப்பைக் கல்கியில் அதிவிரைவில் அளிக்க வேண்டும் என்னும் அன்புக் கட்டளையே.

சென்னை-11 ஜோதிகொடி

✿ நிறைந்தது கதை மட்டுமல்ல; ரசிகர்களின் நெஞ்சமும்தான்.

திருவனந்தபுரம் எஸ். எஸ். மணி

✿ 'பொன் விலங்கு' கடைசி அத்தியாயம் எல்லா வாசக அபிமானிகளுடைய உள்ளங்களையும் நெகிழ வைத்தது. பண்புக்கும், நேர்மைக்கும் நிகழும் பல போராட்டங்களை ஏற்படுத்தித் தொடரை வெகு அழகாக எடுத்துச் சென்றார் ஆசிரியர். மனித சமுதாயத்திலுள்ள பல வேறுபட்ட மூடநம்பிக்கைகளையும், சமுதாயம் இருந்த அவ்வப்போது கூறப்பட்ட நுணுக்கங்களும் இக்கதையில் சிறப்பு அம்சங்களாகும்.

செங்கல்பட்டு எம். ஒய். ராமசாமி

✿ பவழ மல்லிகையின் இனிய செம்மையும் மென்மையும் கலந்து மலர்ந்து, அதன் அற்புதத் தூய்மையுடனேயே மண்ணில் வீழும் மோகினியின் பாதங்களில் ஒவ்வொர் வாசகனும் மலர் தூவித் தலை தாழ்த்தி வணங்காமல் இருக்க முடியவே முடியாது.

நீர்கொழும்பு ஞானப்பிரகாசன்

✿ ''மானிடவர்க்கு என்று பேச்சுப்படின் வாழகில்லேன் கண்டாய் மன்மதனே'' என்ற மோகினியின் குரல் சத்தியமூர்த்திக்கு மட்டும் அல்லாது எங்கள் காதுகளிலும் நெஞ்சங்களிலும் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

சென்னை-12 தி. சுப்பிரமணியம்
டி. எஸ். காசிநாதன்

✿ மோகினி இறந்து விட்டாள் என்பதைச் சொல்லாமல் சொல்லும் அழகானது ஆசிரியருக்குத் தனிச் சிறப்பை உண்டாக்கி யுள்ளது. சிறந்த ஓவியம் தீட்டிக் கதைக்குப் பன்மடங்கு சிறப்பைக் கொடுத்து விட்டார், ஓவியர் விஜயா.

பின்னூர் அஞ்சல் வெ. சௌந்திரராஜன்

✿ இளங்கோவின் செப்பு மாதவிபோலும் மங்கை நல்லாளை மனத்தில் நிறுத்தியது. ஆசிரியர் திரு மணிவண்ணனின் பொன் விலங்கு மோகினியை அழியாப் புகழுக்கு அழைத்து ரசிகர்களின் நெஞ்சில் நிலைத்த இடத்தைப் பிடித்து விட்டது.

திருவாடானை கோமதிசெல்வன்

✿ 'பொன் விலங்கு' எனது அபிப்பிராயம்: மிக மிக உயரமான மலையினின்று இருபுறமும் வாசனைப் பூக்கள் உதிர, மலை மூலிகைகளின் வாசனையும் கலக்க, சலசலவென்று, ஆனால் தெளிவாக வந்து பாயும் அருவி நீர் எவ்வளவு குளிர்ச்சியாய் இருக்குமோ அது போன்று குளிர்ந்தது 'பொன் விலங்கு'.

சென்னை எஸ். வி. நாராயணன்

✿ சத்தியமூர்த்தியையும் மோகினியையும் என் சொந்த அண்ணன் அண்ணியைப் போல் கருதி என்னையறியாமல் அவர்களிடம் பாசம் வைத்துப் படித்து வந்தேன்.

சென்னை-12 பி. கருப்பசாமி

✿ தமிழ் மக்களின் எண்ணங்களில் நீங்காத இடம் பெற்று விட்ட 'மணிவண்ணன்' அவர்களை நான் புகழப் போவதில்லை. ஏனென்றால் அவர் ஒரு பூரணியையும், ஓர் அரவிந்தனையும் படைப்பித்தது போல், ஒரு சத்தியமூர்த்தியையும், ஒரு மோகினியையும் ஒரு பாரதியையும் படைப்பித்து வாசகர்களுக்கு மத்தியில் நடமாட விட்டதன் மூலம் அவர் புகழக் கூடிய நிலையிலிருந்து மேலே போய் விட்டார்.

சென்னை-23 இரா. சேஷன்

✿ அட்டைப் படத்தில் உச்ச கட்டமாய் வருவதாய் 'விஜயா' படம் போட்டு விட்டார் மோகினியை. ஆனால், ஆசிரியர் 'மணிவண்ண'னும் எப்படித்தான் மோகினியை விழித்துக் கொள்ள முடியாத தூக்கத்தில் ஆழ்த்திவிட முடிந்ததோ!

மோகினியை எரித்த நெருப்பு சத்தியமூர்த்தியின் கால்களை மட்டுமா சுட்டது? எல்லாருடைய நெஞ்சங்களையுமே சுட்டு அழவைத்து விட்டதே.

இவ்வளவு அழகிய கதையை ஏன் இவ்வளவு விரைவில் முடித்து விட்டாரென்று புரியவில்லை.

புதுக்கோட்டை பத்மாமணி

நீண்ட ஊர்!

பிப்ரவரி 23ந் தேதி "கல்கி"யின் பட்டி மன்றத்துப் பேச்சு பகுதியில் ஒரு நீண்ட ஊர்ப் பெயர் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நியூஸி லாந்திலுள்ள அதைவிடப் பெரிய ஒரு ஊர்ப் பெயர்—

Taumata wha katangihanga koa uota mateaturi pukakapiki maunga horon ukupokaiwhenuakitan ataha.

கோடைக்கானல் மா. சி. கல்யாணசுந்தரம்

நல்ல படிப்பினை

சென்னை நகரசபைத் தேர்தலில் அடைந்த தோல்வியின் காரணமாக எதிர்க் கட்சியினை வசைமாரி பொழிவது காங்கிரஸுக்குச் சர்வ சாதாரணமாகப் போய் விட்டது. முஸ்லிம் லீக் கட்சி வகுப்புவாதக் கட்சி யென்றும், அதற்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் சிறிய காங்கிரஸ் தோழர்களிலிருந்து பெரிய காங்கிரஸ்வாதிகள் வரை சொல்லம்புகளைத் தொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஒன்றை மட்டும் இவர்கள் சிந்திக்க வேண்டும். முஸ்லிம் லீக் கட்சி வகுப்புவாதக் கட்சியென்றால் காங்கிரஸ் மட்டும் தேசத் துரோகிகள் கட்சியுடன் [இப்படி நான் சொல்ல வில்லை. டில்லி லோக் சபையில் ஸ்ரீ டி. டி. கே. அவர்களே சமீபத்தில் கூறியிருக்கிறார்] கூட்டு சேரலாமா? இது என்ன ஜனநாயகப் பண்பு? சென்ற பொதுத் தேர்தலில் பலம் வாய்ந்த கம்யூனிஸ்ட் கட்சியின் சர்க்காரை இதே முஸ்லிம் லீக் கட்சி உதவியுடனும் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உதவியோடும் கூட்டு சேர்ந்து தோல்வியடையச் செய்து சர்க்காரை நிறுவினார்கள் கேரளத்தில்; இன்று சென்னையில் தி. மு. க. கூட்டணி வெற்றி பெற்றதால் முஸ்லிம் லீக்கைக் குறைகூறும் காங்கிரஸ் தோழர்களுக்கு இதே முஸ்லிம் லீக் அப்பொழுது வகுப்புவாதக் கட்சி என்று தோன்ற வில்லையா? உங்களுக்கு ஒரு நியாயம், எதிரிக்கு ஒரு நியாயமா? இதுதான் காந்தியப் பண்பா? கேரளாவில் எந்தக் கம்யூனிஸ்டுகளைத் தோல்வியடையச் செய்தார்களோ அதோடு கூட்டு சேர்ந்துகொண்டு சென்னை நகரசபைத் தேர்தலுக்கு வோட்டு வேட்டையாடியதன் விளைவாகத் தன்னைத் தானே கவிழ்த்துக் கொண்டது காங்கிரஸ்;

சென்னை
18-3-64 கே. மணிவண்ணன்

தாலாட்டுப் பாடல்கள்

நம் தமிழ் நாட்டில் வாய்மொழி இலக்கியமாக வழங்கிவரும் தாலாட்டுப் பாடல்களைச் சேகரிக்கும் தமிழ்ப் பணியில் நான் ஈடுபட்டுள்ளேன். கோடிக்கணக்கான தாலாட்டுப் பாடல்கள் பரம்பரை பரம்பரையாகத் தாய்மார்களால் பாடப்பட்டு வருவதும் அவை இன்று கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருவதும் நாம் அனைவரும் அறிந்ததே. அப்படிப் பாடப்பட்டு வரும் தாலாட்டுப் பாடல்களில் ஓர் இலட்சம் பாடல்கள் வரை தொகுத்துத் தமிழ்த் தாயின் திருவடிகளில் படைக்க நினைக்கிறேன்: இந்தத் தொண்டு இனிது நிறைவேறக் கல்கி வாசகர்கள் தங்கள் இல்லங்களில் பாடப்படும் பாடல்களையும் அத்துடன் முடிந்தால் அவர்களுக்குத் தெரிந்தவர் இல்லங்களில் பாடப்படும் பாடல்களையும் இயன்ற மட்டும் எனக்கு எழுதி அனுப்பப் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

அண்ணாமலைநகர் ஆறு. அழகப்பன், எம்.ஏ.,
17-3-64 தமிழ் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

வரிப்பளு

ஸ்ரீவைகுண்டம் ... பாசனத்தில் குறிப்பாகத் திருச்செந்தூர் பிர்க்கா விவசாயத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். பெரும்பாலும் களர் நிலம் (உவர் நிலம்) உள்ள பிரதேசமாகும். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அதிக உணவு உற்பத்திச் சலுகையின் பீது இக்களர் நிலங்கள் பெரும் செலவீட்டின்மீது பண்படுத்தி நஞ்சையாக்கப் பட்டிருக்கின்றன. இந்நிலங்களில் சாகுபடிச் செலவு மிகுதி. விளைச்சலோ குறைவு.


நன்செய்களை அடுத்த புன்செய் நிலங்களிலும் தண்ணீர்க் கட்டு காரணமாகப் புன்செய்ச் சாகுபடிக்குத் தகுதி இல்லாமல் இருந்தது. இதற்கும் பிரிட்டிஷ் ஆட்சியாளர் உற்சாகம் கொடுத்து ஒற்றை விகிதத் தண்ணீர்த் தீர்வை ஏக்கருக்கு ரூ. 3 வீதம் மட்டும் வசூலித்தனர். ஆனால் தற்போது அந்த ஒற்றை விகிதத்தை ஏக்கருக்கு ஒரு போகத்திற்கு ரூ. 12.50 வீதம் உயர்த்தியும் அதற்கு இருபது மடங்குவரை தண்டத் தீர்வையாகவும் வசூலிக்கின்றார்கள்.

மணிமுத்தாறு திட்டத்தின் கீழ் எங்கள் பகுதி விவசாயிகளுக்கு மேலும் அதிக நன்மை கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். அதற்கு மாறாகத் தற்போது எங்கள் நன்செய் நிலங்களுக்கு மணிமுத்தாறு திட்ட நிரந்தர வரியாக, தரம் வாரியாக ஏக்கருக்குச் சுமார் இரண்டு மடங்கு வரையிலும் கூடுதலாக வரி வசூலிக்கப்படுகிறது.

இதவும் தவிர லோக்கல் செஸ் பஞ்சாயத்து யூனியன் செஸ் ஆகியவையும் இரண்டு பசலிகளுக்குமாக அதிகப்படி நன்செய்த் தீர்வையும் வசூலித்து வருகின்றனர். இதனால் செட்டில்மெண்ட் காலத் தீர்வை ஏக்கருக்கு ரூ. 8.12 வீதம் உள்ள நன்செய் நிலத்திற்கு நடப்புப்பசலியில் ஏக்கருக்கு ரூ. 55 தீர்வை கட்டும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது....அதாவது 630 சதவிகிதம் வரி உயர்வாகும்.

இவ்விதக் கொடும் வரி விதிப்பினால் நாங்கள் தாங்கொணாத் துயரம் அனுபவித்து வருகிறோம்.

ஆறுமுகநேரி எஸ். ஏ. ராம்பால் சிங்
7-3-64 தலைவர், விவசாய அபிவிருத்தி சங்கம்



நம் நாட்டில் உயில் எழுதி வைப்பது என்பது அபூர்வமான விஷயம்தான். பெருந் தனக்காரர்களில்கூட வெகு சில பேர்கள்தான் முன் ஏற்பாடாகத் தங்கள் சொத்துக்கள் பிற்காலத்தில் நல்ல முறையில் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்ற ஆவலில் உயில் எழுதிவைத்து விட்டு உயிரை விடுகிறார்கள். பெரும்பாலோர், தங்கள் வாழ்நாளுக்குப் பிறகு அந்தப் பணம் எப்படிப் போனால் என்ன என்ற கவலையுடனோ, அல்லது கவலையே இல்லாமலோ காலமாகி விடுகிறார்கள்.

ஆனால் மேலை நாடுகளில் உயில் எழுதுவது என்பது வாழ்க்கையில் எந்தப் படியில் உள்ளவர்களுக்கும் பழகிப் போன ஒரு சர்வ சாதாரணமானவிஷயமாகப் போயிற்று. ஒரு கோடீசுவரனும் உயில் எழுதுவான். ஒரே கோட்டு உள்ள பிச்சைக்காரனும் தன்னுடைய அந்தக் கோட்டுக்கு வாரிசாக ஓர் ஆளை நியமித்து விட்டே பிராணனை விடுவான். ஆகவே, பல உயில்கள், நகைச்சுவை ஓவியங்களாக விளங்குகின்றன. நம் நாட்டில் இப்படி யெல்லாம் நடக்குமா, யோசியுங்கள்!




ஓர் ஆங்கிலேய கணவானுக்குத் தன் மனைவிமேல் என்ன கோபமோ தெரியவில்லை! 'பழைய ஒரு பைசா (நயா பைசா இல்லை!)வுக்குச் சமமான ஒரு பார்திங் நாணயத்தைத் தபால் தலை ஒட்டாத கவரில் வைத்து அவளுக்கு அனுப்ப வேண்டும். அவள் தபால் கட்டணம் கட்டி அதை வாங்கிக் கொள்ள வேண்டும்' என்று தம் உயிலில் எழுதி வைத்தாராம். மற்றச் சொத்துக்கள் தருமத்துக்கும் மற்ற உறவினர்களுக்கும் போயிற்றாம்.

இதையும் மிஞ்சிவிட்டார் ஒரு டாக்டர். கோபத்தில் அவரை விட்டுப் பிரிந்து போன மனைவிக்குத் தம் பிற்காலத்தில் ஒரு நல்ல கைக்குட்டை சேர வேண்டும் என்று உயிலில் குறிப்பிட்டார். கணவன் காலமான செய்தி கேட்டுக் கண்ணைத் துடைத்துக் கொள்ளலாம்!



குழந்தை குட்டி இல்லாத தன் செல்வந்த மாமா எப்போது தனக்கு நிறையப் பணம் எழுதி வைத்து விட்டு நீங்காத நித்திரையில் ஆழ்வார் என்று ஒரு தடித்தனமான சோம்பேறி மருமான் காத்துக் கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்த நாளும் சீக்கிரமே வந்தது. மாமாவின் உயிலை வாசித்துக் கொண்டு வந்த வக்கீல் நிறுத்தி, 'என் அபிமான மருமானுக்கு இரும்புப் பெட்டியில் பத்தாயிரம் வைத்திருக்கிறேன்' என்ற வாசகத்தை வாசித்தார். மருமான் சாவியை வாங்கிக் கொண்டு ஓடிப் போய் இரும்புப் பெட்டியைத் திறந்தான். சதுரங்க ஆட்டத்துக்கான பத்தாயிரம் விதம் விதமான கணக்குகள் ஒரு கட்டாக இருந்தன. 'உன் மூளையைக் கூர்மைப் படுத்திக் கொள்' என்றும் மாமா குறிப்பிட்டிருந்தார்.



மற்றோர் ஆங்கிலேயர், தம் உயிலில் மனைவிக்கு ஆயிரம் பவுன்களை ஒதுக்கி விட்டுப் பக்கத்தில் ஒரு சிறு குறிப்பையும் சேர்த்திருந்தார். 'அவள் மாத்திரம் என் வாழ்நாட்களில் என்னை நிம்மதியாக மாலைச் செய்திப் பத்திரிகையைப் படிக்க விட்டிருந்தால் மொத்த ஆஸ்தியான பத்தாயிரம் பவுனையுமே அவளுக்கு விட்டிருப்பேன்' என்று எழுதியிருந்தார்! பாவம்! அது வேண்டும், இது வேண்டும் என்று அவர் மனைவி பிடுங்கி எடுத்தாளோ என்னவோ?



ஓர் அமெரிக்க ஆசாமி தம் ஆஸ்தியில் கணிசமான பாகத்தைத் தமது ஷட்டர்களுக்குக் கிடைக்கும்படி எழுதி யிருந்



தார்: 'நான்தான் தவறு செய்தேன் என்று நினைத்திருந்தேன். நீயும் செய்திருக்கிறாய்! என் மாயனூர் குடும்பத்தில் பெண் எடுக்கத் துணிந்த உன்னைப் பாராட்டுகிறேன்!'

தம் பணம் தம் உறவினர் யாருக்கும் போய்ச் சேரக் கூடாது என்று எண்ணிய போலந்து நாட்டுப் புண்ணியவான் புதுவிதமான ஓர் உயில் எழுதினார். 'நான் இறந்து பன்னிரண்டு மாதங்கள் கழிந்தே இந்தக் கவர் திறக்கப்பட வேண்டும்' என்ற உத்தரவுடன் ஒரு பெரிய சீல் போட்ட கவரை விட்டு விட்டு ஜீவனையும் விட்டார். அவர் சொத்துக்கள், ஒரு தர்ம ஸ்தாபனத்தின் நிர்வாகத்தின் கீழ் அடுத்த ஆண்டு வரை இருக்க வேண்டியதாயிற்று. வாரிசுகள் பொறுமையுடன் ஒரு வருஷத்தை ஓட்டினார்கள். ஒரு வருடம் கழிந்துக் கவரைத் திறந்தபோது அதற்குள் மற்றொரு கவர் இருந்தது. 'இன்றிலிருந்து இன்னும் பன்னிரண்டு மாதங்கள் கழிந்து இதைத் திறக்க வேண்டும்' என்றிருந்தது. இப்படியாக ஒரு கவருக்குள் மற்றொரு கவராகப் பத்து ஆண்டுகள் ஓடிக் கடைசிக் கவரையும் கிழித்துத் திறந்து விட்டார்கள்.

''இந்தப் பத்து ஆண்டு காலமாக நீங்கள் எல்லோரும் என் பண உதவியில்லாமலே வாழப் பழகி விட்டீர்கள். இப்படியே இன்னும் நூறு வருடங்கள் கழித்து விடுங்கள். அதுவரை தர்ம ஸ்தாபனமே என் சொத்துக்களைப் பராமரிக்கும். அப்புறம் நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம்'' என்றிருந்தது.

நவ நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப, ஒரு பிரிட்டிஷ் வியாபார ஸ்தாபன உரிமையாளர் சினிமாப் படமாகவே உயிலைத் தயாரித்துத் தம் வாழ்நாளில் நேரடியாகப் பேசத் துணிவில்லாத வார்த்தைகளைக் காலமான பிறகு பேச வகை செய்து கொண்ட விதம் ரசிக்கக் கூடியதாக இருக்கிறது. ஓர் உறவினருக்கும் தெரியாமல் அவர் ஒரு சிறு துண்டுத் திரைப் படம் தயாரித்தார். தான் காலமானதும் அத் திரைப்படம் போட்டுக் காண்பிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்ட உறுப்பினர்கள் குறிப்பிட்ட ஆசனங்களில் உட்கார வேண்டும் என்றும் ஒரு பிளானே போட்டுவைத்தார்.

அந்தத் திரைப்படம் ஓட வேண்டிய காலத்தைக் காலன் சீக்கிரமே தோற்றுவித்தான். உறவினர்கள் முன்னிலையில் காலம் சென்ற வியாபாரியின் வக்கீல்கள் படத்தை ஓட விட்டார்கள். பட ஆரம்பத்திலே, வியாபாரி தோன்றினார். உட்கார்ந்திருக்கும் ஒவ்வொரு உறவினர் பக்கமாகவும் திரும்பி அந்த ஆசாமியைப் பற்றித் தாம் கொண்டிருக்கும் மட்டமான அபிப்பிராயத்தைக் கூறினார். கடமைக்காக ஒவ்வொருவருக்கும் ஒதுக்கியிருக்கும் பணத்தையும் குறிப்பிட்டார். கடைசியாக, 'இது ஏதோ பைத்தியக்காரன் செயல். சினிமாப்பட உயில் செல்லுபடியாகாது என்று கோர்ட்டில் நீங்கள் வழக்காட முன் வரலாம். நீங்கள் நினைப்பது போல் நான் அவ்வளவு முட்டாளில்லை. இதே உயிலை எழுத்து மூலமாகவும் வக்கீல்களிடம் ஒப்படைத்திருக்கிறேன்' என்று முடித்தார்.

உறவினர்கள் முகத்தில் ஈயாடவில்லை!

'இன்னும் கொஞ்சம் முன்னால் வந்திருந்தால் — ?' என்று நினைத்தான் அவன். இன்னும் கொஞ்சம் முன்னால் வந்திருந்தால், அந்தக் கடைசி வண்டியைப் பிடித்திருப்பான் அவன். ''எப்படித்தான் அந்த ஸ்டேஷன் மாஸ்டர் முரட்டுப்பிடியாகக் கையைப் பிடித்து இழுத்துத் தள்ளினார்! 'யார்ரா அவன், சனியன் பிடிச்சவன்! மேலே விழுந்து வாயைப் பிளந்து வச்சியொரு தானில்லே ஜவாப் சொல்லியாகணும்!' என்று வேறு ஓர் அர்ச்சனை பாடினார்! விழுந்து வாயைப் பிளந்தால் ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது. நாளைக் காலையில் பாரம் மடிக்க வாளில்லையே என்று பெயிண்டர் மேஸ்திரி ஒரு குரல் அழப் போவதில்லை. சாயந்திரம் தியேட்டரில் ஆபரேட்டருக்கு எடுபிடி செய்யப் போக முடியாது போனால் அவன் படம் காட்டுவதை நிறுத்தி விடப் போவதில்லை. ஆனால் குரோம்பேட்டைக்குப் போகிற பணம் இந்த ஜன்மத்தில் இல்லே என்று ஆகிவிடும்! ......''— இப்படி நினைவு ஓடியது அவனுக்கு.

பிளாட்பாரம் வெறிச்சிட்டு விட்டது. விளக்குகள் விழுக்கு ஒளிர்வதைப் போன்று தெருவிலும் ஒரு மங்கலான நீல ஒளியைச் சொரிந்து கொண்டிருந்தன. ஒரு கோடியில் ஸ்டேஷன் அறைகளில் ஒன்றிரண்டு மனித உருவங்கள் விசை குறைந்து போன பொம்மைகளைப் போல் ஆடி வழிந்தபடி அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தன. அவன் ஒற்றைக் கட்டையாய்ப் பிளாட்பார மத்தியில் நின்று கொண்டிருந்தான்.

'இந்த இருட்டிலும் நேரம் கெட்ட நேரத்திலும் எங்கே போக முடியும்? ஸ்டேஷனிலேயே ஒரு மூலையில் முடங்கிக் கொள்ள வேண்டியதுதான். காலையில் முதல் வண்டியில் போவதற்குச் சௌகரியமாயிருக்கும்!' என்று எண்ணிக் கொண்டு, இருள் கவிந்த இடமாகத் தேடிக் கொண்டு பிளாட்பாரத்தில் நடந்தான் அவன்.

அவன் வயிற்றில் பசி கிள்ளத் தொடங்கியது. ஒன்றும் சாப்பிடாமலேயே வண்டியைப் பிடிக்க ஓடி வந்து விட்டான். ஒன்பது மணிக் காட்சி தியேட்டரில் தொடங்கி இடைவேளை விட்டு முடிந்ததும் அவுட்பாஸ்க்கை எண்ணி ஒப்படைத்து விட்டு ஓடி வந்



நினைவே ஒரு நிறைவாம்

வை. சுப்பிரமணியன்

தான் அவன். அப்படியும் கண் காணக் கடைசி வண்டி போய் விட்டது.

'அவள் குரோம்பேட்டையில் இருக்கிறாளாமே! அவளை எப்படியும் போய்ப் பார்க்க வேண்டும்!' என்ற எண்ணம்தான் அவனை மற்ற எல்லாவற்றையும் மறக்கடித்து இங்கே கொணர்ந்து சேர்த்தது.

'நேற்றைக்குப் பட்டணத்துக்கு வந்த பிள்ளையார் மணிக்குத் தெரிந்திருக்கிற இந்தப் பொதிசயம் எனக்கு ஏன் இத்தனை வருஷங்களாகத் தெரியாது போய் விட்டது?' என்று நினைத்து மாய்ந்து போனான் அவன்.

மணி அவன் ஊர்க்காரன். அன்று மாட்னிக் காட்சியின் போது படம் பார்க்க வந்த அவன், தன் கையில் பாதி டிக்கெட்டைக் கிழித்துக் கொடுத்தவனைக் கண்டதும் திகைத்து நின்றான். "கண்ணு நானே?" என்றான் அவன். இருவரும் ஒருவரை யொருவர் அடையாளம் கண்டுகொண்டனர்.

இடைவேளையின் போது மணியும் கண்ணுவும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

"இப்படி ஏனடா, உன் தலையெழுத்து இருக்கணும்! பாதி நாள் டைண்டிங் தொழிலும் பாதி நாள் சினிமாக் கொட்டகையில் சேவகமுமாக இருக்கத்தான் இங்கே ஓடி வந்தாயா?"

மணியின் வியப்பு கண்ணுவை ஒன்றும் உறுத்தவில்லை.

"தர்மு இங்கேதானடா இருக்கிறாள்; தெரியுமா?" என்றதும் அவன் சிலிர்ப்படைந்தான். மனத்துள் மற்ற நினைவுகள் மடிந்தே போயின. இத்தனை நாட்களாய் அவன் உடம்பில் ஏற்படாத ஒரு மகிழ்ச்சி உணர்வு திடீரெனப் புகுந்து அவன் பிறவியையே புதுப்பித்து விட்டாற்போலிருந்தது.

'தர்மு' என்ற ஒலி அவன் இதயத்தில், ஒரு வித்து விழுந்தது போல ஒலித்த பிறகு, அதைச் சுற்றி ஆயிரம் மலர்கள் பூத்தன. ஒவ்வொரு மலரின் இதழ்க் குவியலுள்ளும் தர்முவின் முகம் தெரிந்தது. பல வருஷங்களுக்கு முந்தைய அவளின் தோற்றம் அது!

'இந்தப் பட்டணத்திலேயே அவள் ஒரு கோடியிலும் நான் ஒரு கோடியிலும் இருந்து கொண்டு எப்படி ஒருவரை யொருவர் பார்க்க முடியாமலே போயிருக்கிறது!.......' என்று எண்ணினான் கண்ணு.

நாளைக் காலைவரை தர்முவைக் காண முடியாமல் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் கிடக்க நேர்ந்து விட்டதை எண்ணுகிறான் அவனுக்குப் பொறுக்க முடியவில்லை. கண்ணுவுக்குத் தூக்கம் வரவில்லை. நினைவுக்கு ஒரு பொதி வைத்துச் சென்றுவிட்டான் மணி; நினைவு இழை இழையாய்ப் பிரிந்து இணைந்து கொண்டு வந்தது.

முதல் முதல் ஊர் விட்டுப் பெயர்ந்த போது எங்கே போகிறோம் என்றே தெரியாது அவனுக்கு. கூட வந்தவர் தனக்கு மாமா என்று அவர் சொல்லித்தான் அவனுக்குத் தெரியும். ரங்கன் மாமா என்று சொல்லும்படி இரண்டு நாட்களாக அவனைப் பழக்கியிருந்தார்கள். ஆனால் ஒரு தடவைகூட அவரை அவன் 'மாமா' என்று இதுவரை அழைக்கவில்லை. அதற்கு எல்லாம் சந்தர்ப்பம் இல்லாமல் வீட்டில், திடீரென்று விருந்தாளிகள் போல் வந்திருந்த சிலர், முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு நடமாடிக் கொண்டிருந்ததைக் கண்டு அவன் ஒதுங்கிக் கிடந்தான். வந்த மறுநாளே மாமா அவனைத் தம்முடன் கிளம்பச் சொல்லி அவரும் கிளம்பி விட்டார்.

வழியில் ஓர் ஆறு, சாலைக்கு கீழே அவர்களுடைய எதிர்த் திசையில் சென்று கொண்டிருந்தது. நடக்க நடக்கக் கூடவே வரும் ஆற்றைக் கண்ட அதிசயத்தில் அவன் வேகம் குறையாமல், அவரது நடைக்குச் சரியாக நடந்தான். ஆறு ஒரு திருப்பத்தில் பிரிந்து நீண்ட இடைவெளியை விட்டுக் கொண்டு கண்ணுக்கு மறைந்த பிறகுதான் அவனுக்கு அதைப் பற்றிய நினைவு மறந்தது.

அவரிடம் பேசுவதற்கு வெகு நேரம் தயங்கி விட்டு அவன் கேட்டான்: "மாமா! நான் நாளைக்குத் திரும்பி விடமாட்டேனா? என்னை யார் கொண்டு வந்து விடுவா?"

அவர் இலேசாகச் சிரித்து விட்டு அவனைப் பாராமலேயே பதில் சொன்னார்: "மறுபடியும் திரும்பி எதுக்குடா வர்றது? யார் இருக்கா உனக்கு இங்கே?"

"நாளைக்கு அப்பாவைக் கொண்டு வந்து விட்டுவிட மாட்டாளா?"

அவனை அவர் அணைத்துக் கொண்டார்.

"உங்க அப்பா சாமிகிட்டே போயிட்டார். நீ இனி மேல் நம்ப வீட்டிலேதான் இருக்கணும்."

அவனுக்குப் புரிந்ததோ, என்னவோ! மீண்டும் ஆறு சாலையோரம் வரத் தொடங்கியது. அதில் மிதந்து வந்த பூவரசம் பூக்களைப் பார்த்தபடி நடந்தான் அவன்.

அவர்கள் வீடு அவன் வீட்டைவிட எவ்வளவோ பெரியது. வாசலுக்கும் கொல்லைக்குமாக நடந்தான் அவன். வீட்டின் எல்லாப் பகுதிகளிலும் நடந்து பார்த்துவிட வேண்டுமென்று அவனுள் ஒரு வேகம்.

வந்தது முதல் இரண்டு நாட்களாய் அவனுடன் பேசாமல், யானையை – குதிரையைப் பார்க்கிற மாதிரி ஆச்சரியமுகத்துடன் அவனைப் பார்த்து விட்டு அகன்று கொண்டிருந்த தர்மு அன்றுதான் அவனுடன் பேசினாள்:

"நீ என்னிக்கு ஊருக்குப் போகப் போறே?"

"நான் இங்கேதான் இருக்கணுமாம். உங்க அப்பா சொன்னார்."

"உனக்குச் சாப்பிடத் தட்டு இல்லையே. என் தட்டிலே இனிமேல் சாப்பிடக்கூடாது."

"நான் கையிலே பிடி போடச் சொல்லிச் சாப்பிட்டுக்கறேன்."

அதற்கு மேல் அவளால் அவனை மடக்க முடியவில்லை. ஆனால் மறு நிமிஷம் அவளும் அவனும் சேர்ந்து கொண்டு பக்கத்திலிருந்த மாட்டுக் கொட்டகையில் விளையாடத் தொடங்கி விட்டனர்.

தர்முவுடன் பேசுவதும் பழகுவதும் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தன. அவள் மூன்று வது படிக்கிறாளாம். அவளது புத்தகங்களை யெல்லாம் அவன் வாங்கிப் பார்த்தான்.

எட்டு வயதில் அவனை முதலாவது வகுப்பில் கொண்டு சேர்க்க விரும்பாமல் அவன் மாமா வீட்டிலேயே படிப்புச் சொல்லிக் கொடுத்தார். தர்முவையும் அவனையும் சேர்த்து வைத்துக் கொண்டு பாடம் சொல்லிக் கொடுப்பார். தர்மு இனி பேசுகிற



நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!



புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!

குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!

சார்மிஸ்

உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

CHTF S.D

மிக எளிது

உங்கள் தேவை எல்லாம் ரூ. 5/-

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்கில் சேமிப்புக் கணக்கு ஒன்றை

ஆரம்பிக்க

பாங்க் கட்டணம் கிடையாது. அதோடு ஆண்டிற்கு 3 சதவிதம் வட்டியும் சம்பாதிக்கலாம்.

இன்றே அருகிலுள்ள கிளை ஆபீஸில் விசாரியுங்கள் :

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது) NGB/61STAM

கிளைகள்: சென்னை: 3, நார்த் பீச் ரோடு, 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு. (லாயிட்ஸ் கிளை) 6, அரமனைக்காரத் தெரு 158, மவுண்ட் ரோடு. தூத்துக்குடி: 44, பீச் ரோடு ஹைதராபாத்: அபித் ரோட்

மாதிரி கேள்விகளுக்குப் பதில் சொல்வான்; அவன் ஒரு மாதப் பயிற்சிக்குப் பிறகும் 'மட்டை'க்கு எழுத்துக் கூட்டத் தெரியாதிருந்தான்.

தர்மு இப்போது ஐந்தாவது படிக்கத் தொடங்கி விட்டான். பள்ளிக்கூடம் மாற்றலாகி விட்டது. ஒரு மைல் தூரத்தில் உள்ள அந்த இடத்துக்கு வண்டியில்தான் போக வேண்டும். சில நாட்களில் கண்ணு வண்டி ஓட்டிக் கொண்டு தர்முவைப் பள்ளிக்கூடம் கொண்டு விடுவான்; சாயங்காலத்தில் அழைத்துக் கொண்டு வருவான்.

சாலையில் வண்டி புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஓடியது.

"நான் ஊரிலேயிருந்து வந்தபோது இந்த வழியாகத்தான் வந்தேன், தர்மு. தந்திக் கம்பிகளிலே காதை வச்சுப் பார்த்தேன். 'கொர்ர கொரா, கொர்ர கொரா'ன்னு எல்லாரும் பேசிக்கிறது காதிலே நல்லா விழுந்தது!" என்றான் கண்ணு.

தர்மு 'கிளுக்'கென்று சிரித்தான். "போடா, அசடு! அது பேசுகிற சத்தமில்லே. காத்துலே அப்படித்தான் கேட்கும். அம்மா சொல்றது சரியாத்தான் இருக்கு!"

"என்ன சொல்றா உங்க அம்மா?"

"நீ சுத்த அசடு, என்னமாப் பொழைக்கப் போறியோன்னு அப்பாகிட்டே சொல்லிண்டிருந்தாள். உங்க அப்பாவோட வேலையிலே கொண்டு உன்னைச் சேர்த்துடச் சொல்றா. உங்க அப்பா என்ன வேலை பார்த்துண்டிருந்தார்?"

"கோவில் மடைப்பள்ளியிலே சமையல் வேலை பண்ணிண்டிருந்தார். அவர் அந்த வேலை பார்க்க ரொம்பக் கஷ்டப்பட்டார். நான் அதுக்குப் போக மாட்டேன். என்னைக் கட்டாயமா அனுப்பி விடுவாளா?"

"என்னமோ எனக்குத் தெரியாது. ஆனா நீ ரொம்ப அசடுதான். உன்னைக் கண்டால் எனக்குக் கூடப் பிடிக்க மாட்டேங்கிறது!" என்றான் தர்மு.

கண்ணு அதற்கு மேல் பேசவில்லை. மாடுகளைக் குரல் கொடுத்துக் கூட ஓட்டாமல் வெறும் நடையில் விட்டு விட்டு முன் பக்கத்துப் பலகையில் சாய்ந்து கொண்டு விட்டான். வீட்டு வாசலில் இறங்கக் கீழே குதித்து முன் புறம் வந்த போதுதான் கண்ணுவின் கண்களில் கண்ணீரைக் கண்டான் தர்மு.

கண்ணுவை அழைத்துக் கொண்டு போய் ஒரு கட்டளை மடத்தில் சேர்த்து விட்டுத் திரும்பினார் தர்முவின் தகப்பனார். மடத்துக்குச் சொந்தமான கோவில்கள், நந்தவனங்கள், விளை நிலங்கள் இவைகளில் எங்கேயாவது மேற்பார்வை வேலைக்கு அவனைப் பழக்கும்படி மடத்தின் மானேஜரைக் கேட்டுக் கொண்டார் அவர்.

சாப்பாட்டுக்கும் வேலைக்கும் மடத்தில் குறைவில்லை. வஞ்சனையில்லாமல் சாப்பிடுகிற கண்ணுவுக்கு அந்த அன்ன மாளிகை ஒரு சொர்க்கமாகத்தான் இருந்தது. வேலைதான் எதுவும் அவனுக்குப் பிடிபடவில்லை.

பண்டிகை நாட்களில் மட்டும் அவன் ஊருக்குத் திரும்புவான். ஒரு முறை ஸ்ரீஜயந்திக்காக வந்திருந்தபோது கையோடு ஒரு நாய்க் குட்டியை அழைத்து வந்திருந்தான் கண்ணு.



"வருபவர்களை, வா என்று சொல்லாமல், வந்தவர்களைத் திரும்பிப் பார்க்காமல், சாப்பிடச் சொல்லாமல், போகிறவர்களுக்குத் தேங்காய் கூட இல்லாமல் ரொம்ப நாகரிகமாய்க் கல்யாணத்தை நடத்தி ஜமாய்த்து விட்டார்களே!"

"ஐயய்யா இந்த நாயை எங்கேடா பிடிச்சே கண்ணு?" என்று கேட்டான் தர்மு.

"தோட்டியில் ஒரு நாய் குட்டி போட்டிருந்தது. மடத்து ஆட்கள் தலைக்கொன்று எடுத்துக் கொண்டார்கள். நானும் ஒன்று எடுத்து வளர்க்கிறேன்!" என்றான் கண்ணு.

"உடம்பையும் வளர்த்துண்டு நாயையும் வளர்க்கத்தான் மடத்துலே கத்துண்டயாக்கும். இப்படி நீ ஒரு அடாசில்லாத போனாலும் உன் உடம்பு வளர்த்திருக்கு உன்னை ராஜா வீட்டுப் பிள்ளைன்னு சொல்லலாம்!" என்றான் தர்மு.

"இப்போ என்னன்னு சொல்லலாம்னு தோணறது உனக்கு?"

"எனக்குத் தோணறது என்ன! மானேஜரே சொல்லியனுப்பியிருக்காரே உன்னைப் பத்தி, 'சோத்து மாடு'ன்னு!"

கண்ணுவின் கண்கள் கலங்கின.

"எனக்கு ஒரு வேலையும் பார்க்க வரமாட்டேங்கிறதே, தர்மு! நான் என்ன பண்ணட்டும்?"— அவன் குரலில் பரிதாபமும் ஏக்கமும் தனியாய்த் தெரிந்தன.

"என்ன பண்ணுவியோ, எனக்குத் தெரியாது! எங்க பாட்டி கல்யாணப் பேச்சு பேசறாள். நான் உன்னைக் கலியாணம் பண்ணிக்கணுமாம். நீ மகாராஜனாட்டும் வேலையிலே உசந்து மானேஜராகி விடுவியாம். அப்புறம் உனக்கும் எனக்கும் கலியாணமாம்!"

"சின்னவாளா இருக்கிறவா கல்யாணம் பண்ணிக்குவாளா, என்ன?"

''பெரியவளானப் போனப்புறம்தான் கல்யாணம். ஆனால் நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். எனக்குச் சோப்பு, சீப்பு, மையும் எல்லாம் நிறைய வாங்கும்படி இருக்குமே. உன்கிட்டே பணம் இருக்குமா?''

''கல்யாணம் பண்ணிக்காது போனாலும் போ. ஆனால் நீ என்னை அடிக்கடி அசடென்று மட்டும் சொல்லாதே, தர்மு!'' என்று சொல்லும் போதே கண்ணு அழுதுவிட்டான்.

''நான் இனிமே சொல்ல மாட்டேன். நீ அழாதே'' என்றாள் தர்மு. வெகுநேரம் இமை கொட்டாத அவள் கண்களும் ஒரு கொட்டலுக்குப்பின் நீர்ப் பொட்டுக்களை உதிர்க்கவே.

சீறாடி நாட்கள் தொடங்கின. திசைகளையே பெயர்த்து மாற்றி வைத்து விடுவது போல் காற்று வீசியது. ஐந்தாறு வருஷங்களாகக் கண்ணு ஊருக்கு வரவேயில்லை. மடத்திலும் அவன் இல்லையென்று விசாரித்துத் தெரிந்து கொண்டார் அவன் மாமா.

ஒரு தடவை பக்கத்து டவுனுக்குச் சென்றிருந்த அவர் ஒரு ஹோட்டல் வாசல் முன் கண்ணு நிற்பதைக் கண்டு அவனைக் கஷ்டப்பட்டு வீட்டுக்கு இழுத்து வந்தார். வீட்டுக்கு வந்தும் அவன் நிலை மாறவில்லை. நின்ற இடத்தில் நேரம் போவது தெரியாமல் நிற்பான். உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்ததுதான்.

தர்மு அவன் எதிரில் வரவேயில்லை. மறைவில் நின்று நின்று அவனைப் பார்ப்பாள். அந்தப் பார்வையில் அன்றைய மருட்சி இல்லை; கனிவு ஒரு கண்ணிலும் அநுதாபம் மற்றொரு கண்ணிலும் வடிந்த இரக்கப் பார்வைதான் அது.

தர்முவிடம் இப்போது ஒரேயடியாகப் புதுமை பரிணமித்துக் கொண்டிருந்தது. பருவக் கோலத்தில் அவள் உடலுக்கே ஒரு தந்தக் கவசம் பூட்டி விட்டாற்போல்.

கண்ணுவின் முன் துணிந்து ஒரு நாள் அவள் வந்து, ''கண்ணு, நீ ஏன் இப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டாள்.

''ம்'' என்று அவன் தலை நிமிர்ந்தான்.

''உனக்கு ஏன் இந்தப் பிரமை பிடித்தது? என்மேல் கோபமா கண்ணு, உனக்கு? நான் முன் மாதிரி தர்மு இல்லை.''

அவனிடமிருந்து பதில் இல்லை.

மற்றொரு நாள் தர்மு கண்ணுவிடம் ஒரு சிறிய வண்ணத் துணிப் பையைக் கொணர்ந்து கொடுத்தாள். ''இந்தப் பை வேண்டுமென்று சின்னப்போதில் ஒரு தடவை சண்டை போட்டாயே, ஞாபகமிருக்கிறதா கண்ணு?''

''இருக்கு.''

''இதை வைத்துக்கொள். அதற்குள் உனக்கு ஒன்று வைத்திருக்கிறேன். அப்புறம் எடுத்துப் பார்.'' அவள் குரல் கரகரத்தது.

ஆனால் கண்ணு அங்கே தங்கவில்லை. எங்கேயும் தங்காமல் காற்றில் இழுபட்டுச் செல்லும் காகிதக் குப்பை போல் புத்தி போகச் சொன்ன இடங்களுக்கெல்லாம் போனான்.

கலக்கம் சிதைந்து புத்தி தெளிந்தாற் போல் உணர்ந்தாலும், மீண்டும் மீண்டும் கழல் நன்னுள் துரும்பை இறக்க முற்படுவது போல் உள்ளத்தில் ஒரு குரல் ஒலித்துக்கொண்டிருந்தது. ''..... நீ ரொம்ப அசடுதான்; உன்னைக் கண்டால் எனக்குக்கூடப் பிடிக்க மாட்டேங்கறது.''

இந்த வார்த்தைகளையும் தர்முவையும் பிரித்து எண்ண முடியவில்லை. இதை ஒலித்துக்கொண்டேதான் அவள் அவனுள் உறைந்திருந்தாள். அவனுடைய நினைவு ஒன்றே தொழிலாய் உலகத்தில் அமைந்தால் போதும் என்றிருந்த நிலை சிறிது மாறி, தொழிலுக்கும் இடையில் அவளை நினைக்க வேண்டும் என்ற தெளிவு உண்டாயிற்று. ஒவ்வொன்றாய்ப் பார்த்த நூறுக்கு மேலான வேலைகளுக்குப் பிறகு பெயிண்டிங் தொழிலும் சினிமாக் கொட்டகையும்தான் அவனை ஒரு தொழிலாளியாக நிர்ணயித்தன.

ஒரோரு சமயம் தர்மு அளித்த அந்த வண்ணப் பையின் நினைவு வரும் அவனுக்கு. அதில் அவள் வைத்திருந்த கடிதம் மனனம் செய்திருந்த கதியில் மனத்தில் ஓடும். அவனுக்குப் படிப்பு வந்திருக்கும் என்ற முடிவில் அவள் எழுதியது அது; ஆனால் அவன் வெகு நாட்கள் அதைக் கட்டிக் காத்த பின் ஒரு பள்ளிப் பிள்ளையை நிறுத்திப் படிக்கச் சொல்லிக் கேட்டறிந்தான்:

''அன்புள்ள கண்ணு!

என் கல்யாணம் என் கைகளை மீறிப் போன விஷயம். இந்த ஜன்மத்துக்கு நம் இருவரையும் பொறுத்தவரை அது ஒரு

தண்டனே. உன்னே உள்ளபடி அறிந்து கொள்ள எனக்குப் பல ஆண்டுகள் பிடித்தன. தோற்றத்தால் நீ எல்லோரையும் ஏமாற்றிவிட்டாலும் உள்ளத்தால் என்னே வியப்படையச் செய்தாய். கை மீறிப் போன பின் ஏற்பட்ட வியப்பு அது. பாலுக்கு வெள்ளே வாய்த்த மாதிரி உனக்கு உள்ளம் வாய்த்துள்ளது.

உனக்கு நேர்ந்துவிட்ட நிலைதான் என்னே அதிர்ச்சி அடைய வைத்து விட்டது.. எதைக் கேட்டாலும் 'உம்' என்கிறாயே! இது முற்றினல்..... என்னைத் திரும்ப உனக்கே அளிக்க முடிவு செய்துவிட்டேன். எத்தனை ஆயிரங்கள் ஆனாலும் பரவா யில்லை. நான் புகுகின்ற இடத்தில் நமது ஆயிரங்களுக்கு வெறும் நூற்று மதிப்புத் தான்! உன் இப்போதைய நிலை மாறிய பின்னும் உன்னே வாழ வைக்க என்னுல் எவ்வளவு முடியுமோ அவ்வளவும் வழங்க முற்படுவேன். என்னே இழந்து உனக்கு வழங்க எடுத்துக் கொண்ட முடிவு இது!

அன்புள்ள, தர்மு''.

முதல் வண்டியைப் பிடித்துக் குரோம் பேட்டைக்குப் போய்ச் சேர்ந்தான் கண்ணு.

பின்னூர் மணி சொன்ன அடையாளத்தை வைத்துக் கொண்டு போய் ஒரு பெரிய பங்களாவின் முன்னல் நின்றன்.

அங்கு எதேச்சையாக வந்த ஒரு பெண் மணியிடம் தான் தர்முவைப் பார்க்க வந்த விஷயத்தைச் சொன்னன். அவள் உள்ளே போய் வந்து, ''வாங்க, அம்மாவுக்கு உடம்பு சரியில்லே உங்களே அழைத்துக்கிட்டு வரச் சொன்னங்க!'' என்று அழைத்துப் போனுள்.

ஹாலே அடுத்த அறையில் ஒரு ஸ்கிரீனுக்கு அப்பால் தர்மு படுத்திருந்தாள்.

''சௌக்கியமா யிருக்கிறயா கண்ணு?''

''ம்.''

''இன்னும் அந்த 'ம்' தானு? உனக்குக் குணம் ஏற்படவில்லையா கண்ணு?''

''நான் பூரண சௌக்கியத்துடன் இருக் கிறேன். தர்மு. உன் உடம்புக்கென்ன?''

''ஒரு மாதமாகப் படுத்த படுக்கைதான். இன்னும் ஒரு வாரத்தில் எழுந்து நடமாட லாம் என்று கூறியிருக்கிறர் டாக்டர்...பத்து நாள் கழித்து மறுபடி ஒரு நாள் வருகிறயா?''

''அதற்கென்ன? வருகிறேன்.''

தவமிருந்து கண்டது போல் தர்முவைப் பார்த்தது ஒரு பாக்கியமாக இருந்தது கண்ணுவுக்கு. இதை விடப் பெரிய அநுப வத்தை அவன் வாழ்க்கையில் எதிர்பார்க்க வில்லை; விரும்பவுமில்லை.

மறுபடியும் தர்முவைக் காணச் சென்ற போது கண்ணு ஓட்டலிலிருந்து நேரே சென்றுன். இரவு நேரமாதலால் பங்களாவில் வேலைக்காரியைக்கூடக் காணும். சிறிது நேரம் தயங்கிவிட்டுக் கண்ணு உள் நுழைந்து 'தர்மு' என்று குரல் கொடுத்தான். ஹாலே அடுத்த அறையிலிருந்து தர்முவின் நிழல் முன் நீண்டு வந்தது.

தர்மு கண்ணுவின் தோற்றத்தை இன்று முழுவதுமாய்க் கண்டாள். இடையில் இனி மேல் அழுக்கேற முடியாததுபடி வேஷ்டியும், பனியனும். அதற்கு மேல் முரட்டு வெள்ளைத் துணியில் கோட்டும் அணிந்திருந்தான். எண்ணெய்க்கும் சீப்புக்கும் சம்பந்தமற்ற கிராப்புத் தலே. முன்பு காவியோடு மட்டு மிருந்த பற்கள் இப்போது புகையிலைச் சாற் றின் கறைகள் சிவப்பாகவே மாறியிருந்தன.

''கண்ணு, நீ இன்னும் அன்றையக் கண்ணு வாகவே இருக்கிறயே. உனக்கென்று நீ ஒரு வாழ்க்கையைப் பிடித்துக் கொள்ளக் கூடாதா?'' என்று கேட்டாள் தர்மு.

அவன் மௌனமாயிருந்தான்.

''ஏதாவது வேலை பார்க்கிறயா?''

தன் தொழிலைப் பற்றிச் சொன்னுன் கண்ணு.

''அடப் பாவமே!... நீ எப்படியாவது வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். வருஷக் கணக்காய் உன்னைப் பற்றி என் மனதில் வளர்கிற ஆசை இதுதான். உன் உள்ளம் வெள்ளையாயிருக்கிற மாதிரி தோற்றமும் துல்லியதா யிருக்க வேண்டும். இந்த உல குக்கு அது வேண்டி யிருக்கிறது....''

அவன் அவளை நிமிர்ந்து கூடப் பார்க்கா மல் யந்திரம் போல் அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''உன்னை இன்றைக்கு எதற்கு வரச் சொல்லியிருந்தேன் தெரியுமா?''

''தெரியாது.''

''உன்னிடம் முன்பு ஒரு கடிதம் கொடுத் தேனே, நினைவிருக்கிறதா? உன்னைச் சீராக வாழ வைக்கிறேன் என்று அதில் வெறும் குரல் கொடுத்திருந்தேன். நல்ல வேளையாக இன்று நீ தேடி வந்ததால், இன்று என் ஆசை யின் அடையாளத்தை வழங்க விரும்புகி றேன்'' என்று கூறி அவள் உள்ளே போனுள்.

இரண்டு நிமிடங்களில் திரும்பி வந்து, அவள், ''இந்தா, இதை நீ மறுக்காமல் வாங்கிக் கொள்ள வேண்டும்.'' என்றுள்.

கண்ணு அவள் வழங்க வந்ததைக் காண நிமிர்ந்தான். பல்லாண்டுகளுக்குப் பிறகு அவள் முகத்தைப் பார்த்தான். அவள் நெற்றி துலங்கவில்லை.

''தர்மு! உனக்கு உடம்பு நன்றாகக் குண மாகிவிட்டதில்லையா?''

''நல்ல குணம்தான்.''

''நெற்றியில் ஒன்றும்....''

''அது ஒரு வழியாக அழிந்து விட்டது.''

கண்ணுவின் முன்னல் தர்மு கரகரவென்று சுழன்றுள். அந்த வெறும் நெற்றி மட்டில் ஒரு கவர்ப் படம் போல் ஆடாது நின்றது.

''இந்தா!'' என்று மீண்டும் அவள் குரல் கேட்டது. அவள் கரங்களில் புது மெருகுடன் நோட்டுக் கட்டு கனத்தது.

''இதெல்லாம் ஒன்றும் வேண்டாம் தர்மு. அன்று நீ கடிதத்தில் கூறியபடி உன்னை இழந்துகொண்டு எனக்கு வழங்கிவிட்டாய். நீ வழங்கியது என் மனதில் ஜகஜ்ஜோதியாய் விளங்கும் உன் நினைவுதான். அதைவிடப் பெரிதாக வழங்க உன்னிடம் ஒன்றும் இல்லை. எனக்கு வேண்டவும் வேண்டாம்'' என்று இலக்கியச் செறிவுடன் கூற வார்த்தைகளை உருவாக்கினுன். ஆனால் அவனுக்கு வாய் திறந்து பேசத் தெரியவில்லை. 'வருகிறேன்' என்றுகூடச் சொல்லத் தோன்ருது வழி நடந்தான். நடு ஹாலில் தர்மு ஒரு சிலை யொப்ப நின்றிருந்தாள்.

பால்சாக் பிரெஞ்சு மொழியில் புகழ்பெற்ற எழுத்தாளர் தான். எழுத்தாளர்களுக்கே உரித்தான 'ஏழை' என்னும் அடைமொழிக்கு அவரும் இலக்கானவர். ஆம், ஏழை எழுத்தாளர் தான். அவர் பொருளாதார நிலை மிகவும் மோசமாக இருந்தது.

ஒரு நாள் அவர் வீட்டில் திருடன் ஒருவன் நுழைந்தான். துப்பாக்கியை நீட்டிப் பணப் பெட்டியின் சாவியைக் கொண்டு வா என்று மிரட்டினான். இருந்த இடத்தை விட்டு அசையக் கூடாது என்றும் தடை உத்தரவு போட்டான். பால்சாக் துளியும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் சாவியை எடுத்துக் கொடுத்தார்.

திருடன் பெட்டியைத் திறந்து பணத்தைத் தேடலானான். பால்சாக் சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தார். முடியவில்லை. எழுந்து அவன் அருகில் வந்து, "இது வரை என்ன தேடியும் எனக்கு இந்தப் பெட்டியிலிருந்து காசு காசுகூடக் கிடைத்ததில்லை. ஒரு வேளை உன் கைராசி, ஏதாவது கிடைத்தால் எனக்குக் கொஞ்சம் பங்கு கொடுத்து உதவுவாயா?" என்று கேட்டார் பால்சாக்.

ஃ ஃ ஃ

முன்கோபமான மனிதர்: பருமனான மனிதர்கள் சாந்தமாக இருக்கிறார்கள். சிரித்த முகம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். கோப தாபம் கொள்வதில்லை. யாருடனும் காட்டமின்றிப் பழகுகிறார்கள். இது ஏன்?

பருமனான மனிதர்: காரணம் ஒன்றும் பிரமாதமில்லை. வாய் தவறி ஒன்றுக்கொன்று சொல்லி விட்டால் சண்டை வரும். சண்டை போடத் தெம்பில்லை. அதோடு எதிர்த்து நிற்கத் தைரியமில்லாவிட்டால் உங்களைப்போல் ஓடவும் முடியாது. ரகசியம் இது தான், அவர்களுடைய இந்தச் சுபாவத்துக்கு.

ஃ ஃ ஃ

நோயாளி: டாக்டர், நீங்கள் தான் காப்பாற்றணும்.


டாக்டர்: என் கையில் என்ன அப்பா இருக்கிறது? நான் மருந்து கொடுக்கலாம். ஆண்டவன் பார்த்துத்தான் அப்பா கருணை புரிய வேண்டும்.

நோயாளி: நியாயமான வார்த்தை! அப்போ பில்லை அனுப்பி வைக்கிற போதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு அனுப்பி வைக்காதீர்கள். அவருக்கே அனுப்பி வையுங்கள்.



ஃ

"இந்தப் பின் பக்கத்தை நான் எங்கோ பார்த்திருக்கிறேனே அது யார் சார்?"



"அது சார்லி சாப்ளினுடைய பின் பக்கம்."

"முன் பக்கமும் அவருடையது தானே?"

ஃ

"நண்பரே! இந்த உலகத்தில் நாம் எதைக் கொடுத்தாலும் உடனே அது திரும்ப இரட்டிப்பாகி வருகிறது. தெரியுமா?"

"ஆமாம்! அது மாபெரும் உண்மை. சென்ற வருடம் என் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்தேன். இந்த வருஷம் அவளும் அவள் கணவனும் என் வீட்டுக்குத் திரும்பக் கிடைத்து விட்டார்கள்!"

ஃ ஃ ஃ

"அப்பா! நான் பெரியவனான பிறகு சந்திர மண்டலத்துக்குப் போகப் போகிறேன்!"

"நீ பெரியவனாகிச் சந்திர மண்டலத்துக்குப் போவதற்குள் எத்தனையோ பேர் அங்கே குடி ஏறி விடுவார்களே!"

"அப்படியானால் சூரியமண்டலத்துக்குப் போகிறேன்!"

"ஒரே உஷ்ணமாயிருக்குமே அங்கே!"

"கோடை காலத்தில் போகாமல் குளிர் காலத்தில் போனால் போகிறது."

ஃ ஃ ஃ

போலீஸ்காரர் மெதுவாக வந்து கொண்டிருந்த அந்தக் காரை நிறுத்தி, மோட்டார் ஓட்டியிடம் லைசென்ஸ் இருக்கிறதா என்றார்.

"நான் என்ன தப்பு செய்தேன்? என்னை எதற்காக நிறுத்திக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டார் அந்த மோட்டார் ஓட்டி.

"எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் ரொம்பவும் ஜாக்கிரதையாக வண்டியை ஓட்டி வருவதிலிருந்து உங்களிடம் லைசென்ஸ் இருக்காதென்று தீர்மானித்துவிட்டேன்!" என்றார் போலீஸ்காரர்.

ஃ ஃ ஃ

குழந்தைகள் ராமுவும் அவன் தங்கை சீதாவும் உட்கார்ந்த போது அவர்களின் தாயார் ஒரே ஒரு ஆரஞ்சுப்பழத்தை மட்டும் கொண்டு வந்து வைத்தாள். ராமு உடனே 'ஹோ'வென்று அழத் தொடங்கிவிட்டான்.

"எதற்காக அழுகிறாய்?" என்று வியப்புடன் கேட்டாள் தாயார்.

"அம்மா! சீதாவுக்கு ஆரஞ்சுப் பழம் இல்லையே!" என்று கூறி விசித்தான் ராமு.

ஃ ஃ ஃ

புத்தகங்களின் அருமைபெருமைகளைப் பற்றிப் பேசிவந்த பேராசிரியர் தம் மாணவிகளில் ஒருத்தியிடம், "நிறையப் புத்தகங்களிலிருந்து அதில் ஒரே ஒரு புத்தகம் தேர்ந்தெடுக்க வேண்டுமானால் எதைத் தேர்ந்தெடுப்பாய்?" என்று கேட்டார்.

உடனே அந்தப் பெண், "செக் புத்தகத்தைத்தான்!" என்றாள்.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

ஹார்லிக்ஸ் செய்யும் நன்மைக்கு ஒரு உதாரணம் :


எங்கள் தாம்பத்ய வாழ்வு கசந்தது

அசதியும் சலிப்பும் மேலிட
'வாழ்வாவது மாயம்'
என்று எண்ணத் தோன்றியது






அதிர்ஷ்ட வசமாக நாங்கள் ஒரு டாக்டரைக் கலந்தாலோசித்தோம். உற்சாகமின்மையும் இனம் புரியாத கவலையும் பெரும்பாலும் சக்திக் குறைவின் அறிகுறிகள் என்றார் அவர். ஹார்லிக்ஸ் தினம் தவறாமல் பருகி வந்தால் இழந்த ஆரோக்கியத்தையும் சக்தியையும் மீண்டும் பெறலாம் என்றும் டாக்டர் சொன்னார்.



ஆரம்பத்தில் குணம் சற்று சாவதானமாகத்தான் தெரிந்தது. பிறகு எங்கள் வாழ்வில் கவிந்திருந்த இருள் நீங்கி இன்பம் ஒளி பாய்ச்சியது. களிப்பும் கும்மாளமுமாகத் திகழ்ந்தது எங்கள் வீடு. ஹார்லிக்ஸ் அளிக்கும் நற்பலனை உணர்ந்துள்ள நாங்கள் மீண்டும் அந்த அவல நிலைக்கு உள்ளாக மாட்டோம் என்று சொல்லவும் வேண்டுமா!



ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

